11162

(5412)

# அறமறிந்தியற்றல்—

# விருந்தோம்பற் சிறப்பு

DR. U.V. ... LIBRARY,
TIRUVANMIYUR :: MADRAS-41
166

GF
Q23,T8 g
H2

MADRAS PREMIER CO.
EDUCATIONAL PUBLISHERS
MADRAS

11162

# அறமறிந்தியற்றல்—
# விருந்தோம்பற் சிறப்பு

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY.
TIRUVANMIYUR :: MADRAS-41

8412

THE MADRAS PREMIER CO.
EDUCATIONAL PUBLISHERS
3, PERIANNA MAISTRY STREET, MADRAS.

*Copyright*] [*Price As.* 8

PRINTED AT THE
MADRAS PRINTING WORKS
32, ERRABALU CHETTY STREET, MADRAS.

# நூன்முகம்.

அன்பிற்குரிய மாணாக்கர், தங்கள் அறிவை விருத்திசெய்து கொள்ள எவ்வகையாலும் முயன்று வருகின்றனர். இது போலவே சிறிது ஊக்கத்துடன் பயின்று, வளர்க்கவேண்டிய வேறு சிலவும் உண்டு. நெடுநாளாகவே இருந்துவரும் இக் குறையை, சுவாமி விவேகானந்தர் போன்ற பெரியோர்களும் பற்பல காலங்களில் எடுத்துக் கூறியுள்ளார். அப்பெருங் குறையும் மனத்தூய்மையையும், தெய்வபக்தியையும் விளைவிக்கக்கூடிய பாடங்கள் மிகச் சிலவே சிறுவர்கள் கற்று வருகின்றனர் என்பதேயாகும்.

இக்குறை தீர முயல்வது பெரியோர் பெருங்கடமையாயினும், பெரும்பாலும் ஒவ்வொரு வீட்டிலும் இன்றும் வழக்கமாயுள்ள சிற்சில நற்பழக்கங்களின் உயர்ந்த நோக்கத்தையும், வேறு சில நல்லறங்களையும் ஒருவாறு எடுத்துக்காட்டி, சிறிது பக்தியையும் விளைவிக்கக்கூடியதாயிருக்கும் என்னும் கருத்துக்கொண்டே அடியேன், "அறநிந்தியநல்-விருந்தோம்பற் சிறப்பு" என்னும், இச் சிறு வசன நூலை, ஆண்மக்களுக்கேயன்றி, பெண்மக்களுக்கும் உபயோகப் படும்படி எழுதத் துணிந்தேன்.

இந்நூலில், திருக்குறள்போன்ற நீதிநூற்களிலுள்ளனவும், செந்நாப்புலவர் சிலரது கருத்தும், 'தொண்டர் சீர்பரவுவார்,' சேக்கிழார் கூற்றுமே ஆங்காங்கு வழங்கப்பட்டுள்ளன. சிறு சிறு கதைகள் சிலவற்றைக் கொண்டே பற்பல நீதிகளை எடுத்துக் காட்டி, பத்திச்சுவையும் ஒருவாறு தோன்ற, இறைவன் தொண்டர்க்கருள்புரிந்த திருவிளையாட்டொன்றை இடையிடையே முற்றிலும் கூறியுள்ளேன்.

இச் சிறுநூல் பெரிதும் பயன்படுமென்று, இம்முயற்சியிற் றூண்டிய, எனது மாதுலரும், மைசூர் அரசவைச்சுரர், வடமொழிப் புலமை காட்டிப் பெரிதும் விளங்கிய, வே. மூர்த்தி சுப்பிரமணிய சாஸ்திரிகள் பேரனும், திருவருட்பிரகாச வள்ளலார், இராமலிங்க சுவாமிகளின் பிரிய நண்பராயிருந்த, அனந்த நாராயண சாஸ்திரிகள் குமாரரும், வடமொழியோடு தென்மொழியும் ஆங்கிலமும் நன்கு கற்றுவல்ல உதாரசீலரும் உள்ளத்துறவுடையோருமாகிய, ஸ்ரீமான் இராமமூர்த்தி அய்யர் அவர்களுக்குப் பெரிதும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும் பத்தர் சொன்னவும் முத்தமிழ்த் துறையின் முறை போகிய உத்தமர் பன்னமாட்டார்கள் என்னும் துணிவே பெரிது முடையேன்,

அடியேன்

தக்ஷகவலம். H. கிருஷ்ணசாமி ஐயன்.

# பொருளடக்கம்.


| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| 1. | அறமறிந்தியற்றல்—விருந்தோம்பற்சிறப்பு. | 1 |
| 2. | பெறலரும் பிறப்பு. | 2 |
| 3. | தொண்டுபூண்டொழுகல். | 6 |
| 4. | நாட்டுச் சிறப்பு. | 8 |
| 5. | நகரச் சிறப்பு. | 11 |
| 6. | மாமாத்திரர்—பரஞ்சோதியார். | 13 |
| 7. | இல்லறம். | 19 |
| 8. | விருந்தோம்பல். | 22 |
| 9. | மகப்பேறு. | 28 |
| 10. | பைரவர் தோற்றம். | 31 |
| 11. | விருந்து கண்டுவத்தல். | 35 |
| 12. | பெருந்தொண்டராம் சிறுத்தொண்டர். | 41 |
| 13. | அடியார் திருவமுது. | 43 |
| 14. | உவந்துவாரியற்றல். | 45 |
| 15. | பரிவற்ற பெற்றோர். | 48 |
| 16. | பற்று. | 50 |
| 17. | கொலைத்தரும் பெண்டிர். | 52 |
| 18. | பரிகலத்திடுதல். | 54 |
| 19. | ஆட்டிவைக்கும் அம்பலவர். | 58 |
| 20. | கிராமாந்தரக் கதை | 62 |
| 21. | மைந்தன்மீள மகேசுவரர் மறைதல் .. | 72 |
| 22. | காட்சி தந்தருளல். | 75 |
| 23. | பயன். | 79 |
| 24. | முடிவுரை. | 81 |

# AN APPRECIATION


To be born in India where sages and saints lived their lives and shed their never-fading rays of wisdom and blessings and that as a follower of the magnificent Vedic Religion is a very rare privilege. The ancient Hindus considered life as a temporary sojourn only and worked for the freedom of the soul during this sojourn by living a truly religious life and following faithfully their sacred Scriptures, the Srutis, Smritis, Puranas, etc. Such a holy land is now being trodden by the terrible Demon of Atheism and Mammon-worship and the ancient religious truths are being trampled under its crushing foot. True Bhakti is fast vanishing and the modern youths are daily falling a prey to that terrible Demon. During these days, like an oasis in a desert, here and there some truly religious men are still to be found who are anxious to infuse the ancient religious spirit into the minds of the modern youths by writing really valuable religious books. Such books are a real need now in this country especially to cultivate the minds of the young school-going population.

One such valuable book was handed over to me by Mr. H. Krishnaswami Iyer of Thachakadoo. It is "Aramarinthiyatral, Virunthombarchirappu" (அறமறிந்தியற்றல்—விருந்தோம்பற் சிறப்பு). It is calculated to educate the modern youth in ancient Vedic truths and to infuse a truly moral and religious spirit into the minds of the young and old as well. It treats about the well known story of "Siruthondar." The story, though well-known, is given an altogether new garb and is rendered in an interesting and instructive manner. The style is splendid, the tamil is chaste and simple. The flow and the alliterative felicity and rythm make the book very pleasant reading. Here and there one finds, apt quotations from Thirukkural and other well-known works. Now and then the author rises into

poetic heights and the description in several places reveals the author as a great Bhakta. The Dharma of the House-holder or Grahastha is mentioned beautifully and emphasis is laid on the fact that he exists only to help the other Asramites. The Duties towards Athithis are well brought out. The duties of a chaste wife are clearly stated. The significance of ancient rites is given here and there in order to educate the mind of the modern unbelieving youth. The Advaitic philosophy is treated in some places in a most easy and interesting manner. The description in many places is really splendid. The appearance of Bairava in chapter 10, the feelings of parents towards their child, the vexatious way in which the Divine Guest is worrying the parents and the patience with which they put up with Him are magnificently described. The way in which the poor parents, at the bidding of the Divine Guest, call out their dead son is highly pathetic and would move even the most stony heart. Then Siruthondar is graced with God's presence and the moral learnt from the story is mentioned.

The Book is really useful to the students both boys and girls. It is calculated to cultivate not only their moral and religious spirit but also their Tamil language and style and it would enable them to express their ideas clearly and beautifully. Such a book as this is essential to the school-going population and I hope that the School Final Board as well as the University would surely recommend this book and prescribe it for the students and thus promote the moral and religious spirit of the youth of our country.

R. SOMASUNDARAM AIYAR, B.A., B.L.,
*Advocate, Mylapore.*
AUTHOR OF
" *Sri Kamakshi Thiruppugazh, Ambal Ashtakamalai, Ambal Thiruvahuppu, Devi Kilithookku Sathakam.*"



பரமசிவன் காட்சி கொடுத்தல்.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

# அறமறிந் தியற்றல்—விருந்தோம்பற் சிறப்பு.

கடவுளின் திருவருளால், உலகத்திலுள்ளோர் அனைவரும் நலம்பெற்று, என்றும் இன்பமாய் வாழ வேண்டும். இந்த நன்மையைப் பெறுவதில் நம் அனைவருக்கும் மிகுந்த விருப்பமுண்டு. இந் நலனை எப்பொழுதாவது பெற்றுவிடவேண்டுமென்றே இளமைமுதல் ஆவலுள்ளோரா யிருக்கின்றோம்; பற்பலவற்றை வருந்திக் கற்கின்றோம்; கற்று வல்லராயின பிறகு பல வழிகளில் முயற்சி செய்கின்றோம்; நமது முயற்சி பல தடவைகளில் வீண் போகாமல் பயனையும் அளிக்கின்றது; ஆயினும், நாம் எண்ணியதுபோல் நன்மை பெற்று இன்பமாகவே வாழ்ந்து கொண்டிருக்க முடியவில்லை. துன்பம் என்பது ஏதாவது ஒருவகையில் நமக்கு நேர்ந்து விடுகிறது. நமக்குமட்டில்தான் இப்படி நேருகின்றதென்பதில்லை; நம்மைக்காட்டிலும் அறிவும் திறமையுமுள்ளோர்க்கும் துன்பம் நேருகின்றது. இத் துன்பம், நாம் ஒரு சிறிதும், எப்பொழுதும் வேண்டாதது. துன்பம் அற்றதான ஒரு நிலைத்திருக்கும் இன்பமே நமக்கு வேண்டும். இதை எந்த வழியில் நாம் பெறக்கூடும்?

நாம் இராப்பகலாகப் படித்த புத்தகங்கள் பலவற்றில், ஒன்றிலாவது நமக்கு வேண்டிய இதனைப் பெறுவதற்குள்ள வழியை விரிவாகக் கூறக்காணோம். புத்தகம் படிப்பதால் மட்டில் நிலைத்துள்ள நன்மையைப் பெறுதல் முடியாதென்றும், உலகத்து மாந்தர், தாங்கள் செய்யும் நல்வினைக்கும் தீவினைக்கும் தக்கவாறே இன்ப துன்பங்களை அனுபவிப்பார்கள் என்றும் நூற்கள் கூறுகின்றன. என்றுமழியாத

இன்பம் பெறுவதற்கும் சிறந்த நல்வினையே காரணமாகு மென்னில், அந்நல்லறம் யாதென்று அறிந்து நாமும் கடைப் பிடித் தொழுகல் வேண்டும். நல்லறம் இன்னதெனக்கூறும் நூற்கள் சிலவும், கல்விமான்கள் பலரும் உண்டு; சொல்லிய வண்ணம் செய்தல் மட்டில் மிக அரியதொன்றாகும்.

உடலுக்கு நன்மையைச் செய்யும் மருந்தை, சருக்கரை யோடு கலந்துண்ணல் போலவே, உயிர்க்கு உறுதி பயக்கும் நல்லறத்தை, நம்போன்ற ஒருவர் வரலாற்றிலிருந்தே நாம் சிறிது தெரிந்துகொள்ள முயலுதல் சாலச் சிறப்புடைய தாகும். பலவகைப்பட்ட நல்லறத்தினும், இல்லறத்தினர் முதன்மையாகக்கருதிச் செய்யத்தக்கது 'உண்டியளித்தல்' என்னும் அன்னதானமே யாதலால், விருந்தோம்பி வேளாண்மை செய்த பரஞ்சோதியாரின் சரித்திரத்தையும் இடையிடையே தொடர்ச்சியாக அறிந்து கொள்வோம்.

வேதமும் வேதப்பொருளறிந்த சான்றோர் பலரும், அயன்படைத்துள்ள அனைத்தினிலும், மக்கள் மாத்திரமே என்றும் குறைவிலாத இன்பம் துய்க்க உரியராவர் என்று கூறும் உறுதியைக்கொண்டு, அறமறிந்தியற்றும் வண்ணம் அறியத் தொடங்குவாம்.

---

## 2. பெறலரும் பிறப்பு.

உலகந்தந்த நான்முகன்படைத்த பலவற்றுள்ளும், மக்கட்பிறப்பே மாண்புடையதென்பர் பெரியோர். தோட்டத்துப் பச்சிலை மருந்தாமெனினும், மதித்துப் பயன் பெறுவது உலக இயற்கை யன்று. அங்ஙனமே, மானிடப் பிறப்பின் பெறலருந்தன்மையை மனிதரிற் பலர்தாம் மதிப்பதும்

இன்று. "எண்ணரிய பிறவிதனின் மானிடப் பிறவிதான் யாதினும் அரிது அரிதுகாண்" என்று தாயுமானவரும், "எப்பிறப்பாயினும் ஏமாப்பு ஒருவர்க்கு மக்கட்பிறப்பிற் பிறிதில்லை" என்று முனைப்பாடியார் அறநெறிச் சாரமும் கூறியது பொருளற்ற புகழுரையாகாது.

வேண்டியவற்றை வேண்டியபோது உதவும் கற்பக தருவும் காமதேனுவும் பெற்றுள்ள, போக பூமியென்னும் சுவர்க்கமொன்றுண்டு. ஆங்கு புண்ணியம் பல புரிந்த பெரியோர் குடிகொண்டு, தேவராய் இன்பத்தி லாழ்ந்திருப்பரென்று நூற்கள் கூறும். இவ்வுலகிற் பண்ணிய புண்ணியத்திற்குப் பயனுகர்வதன்றி, அங்கு வேறுபல நற்கருமங்களைச் செய்ய இயலாது. முன் செய்த நல்வினைக்கேற்ப சிலகாலம் இன்புற்றிருந்து, பின்னும் பிறப்பதே தொழிலாகக் கொண்ட தேவர்கள் பூலோகத்தை நோக்கிப் பொறாமையுங் கொள்வர்; ஏனெனில், இப்பூலோகமே புண்ணியபூமி, கர்ம பூமி என்று புகழ்ந்து கூறப்படுவதும், இப்பூலோக மாந்தர்களே என்றுமழியாத துக்கமற்ற பெரும் பதத்தைப் பெறும் சிறப்புடையோர்களுமாவர். இதுபோன்ற பல காரணங்கள் கொண்டுதான் ஔவைப் பிராட்டியாரும் "அரிது அரிது மானிடராதல் அரிது" என்று கூறியிருக்கவேண்டும்.

நம்மிற் பலர், பற்பல பிறப்புகளிற் செய்த நல்வினைப் பயனாகக் கிடைத்திருப்பதும், கிடைப்பதற்கு மிக அரியதுமாகிய, மானிடப் பிறப்பின் பயனுணரவில்லையென்றே பெரியோர் கருதுகின்றனர். கருணையே உருக்கொண்டதுபோல் பவரும், இன்சொலன்றி வன்சொல் கூறச் சிறிதும் மனம் ஒவ்வா, மாண்புடைப்புலமை மிக்காருமாகிய, இப்பெரியோர் கருத்திற்குப் போதிய காரணங்கள் அவசியம் இருக்க வேண்டும்.

உலகத்தைச் சூழ்ந்து மூடி நலியும் இருள் நீங்க, ஒளி விளங்க, உதிக்கும் சூரியன் உலாவும் துணையும் கண் தெரியாது, இருளே தம் சஞ்சாரத்திற்கு உரியதாக உள்ள ஆந்தை, கோட்டான் முதலிய பறவைகளிற்சில, மானிடரிற் பலருக்கு உவமையாகக் கூறுவதுமுண்டு. அரணியவாசம் செய்து கொண்டு தன் தந்தையின் பணியிற்றலைநின்ற "கலைக் கோட்டு முனிவர்," மனிதரை விலங்கென்று கருதியதாகக் கவிச் சக்கிரவர்த்தி கம்பநாடார் கூறியுள்ளார். இம் முனிவரின் கருத்துதான் யாது? மக்களை மாக்களாகக் கருதும் விபரீதம் ஏன்?

மனிதன் பெற்றுள்ள கரசரணாதி அவயவங்கள் யாவும், கடவுளுடைமையேயாகும். இவைகளைப் பெற்றுள்ள மனிதர் தமதாகக் கொண்டாட இயலாது. கடவுளுடைமை நமக்கு வேண்டாமென்று எடுத்தெறிந்துவிட்டு மற்றொன்று வைத்துக்கொண்டோ ஒன்றுமே இல்லாமலிருந்தோ பரீக்ஷை பார்க்கும் பித்துடையோர் உலகத்திலில்லை. ஒரு பொருளுக்குடையவன் அதை எப்படி உபயோகிக்க உதவினனோ, அங்ஙனமே யன்றோ உபயோகிக்கவேண்டும்? பெற்றபின், தன் மனம்போல் உபயோகப்படுத்திக் கொண்டால், மீட்டும் ஒருமுறை பெறமுடியாததோடு பொருளுக்குடையோன் பெருங்கோபத்திற்கும் ஆளாகவேண்டும். கடவுள் நமக்குக் கொடுத்த மெய், வாய், கண் முதலியவற்றை உபயோகிக்கும் முறையை திருநாவுக்கரசு நாயனார் "திரு அங்கமாலை" யால் நன்கு விளக்கியுள்ளார். தலை வணங்குவதற்கும் கண்கள் தரிசிப்பதற்கும் செவிகள் பரமன்புகழ் பருகிப் பேரின்புறுவதற்கும் வாய் வாழ்த்துவதற்கு மாகவன்றோ அளிக்கப்பட்டன? இறைவற் குகந்த பணிபுரிந்து பயன்பெறாது, வீணே அலைந்து விழலுக்கிறைத்து வறிதே வாழ்நாள் கழிக்கும் மாந்தரிற் பலரை, கலைக்கோட்டு முனிவர் விலங்கென

மதித்தது, பொருத்தமுடையதேயாமென்று புலவர் பெருமக்கள் கருதுகின்றனர். தாங்கள் செய்யத்தக்கது இன்னது தகாதது இன்னது என்று உணரார், உயர்ந்த மக்களேனும் விலங்கென்பதே ஆன்றோர் கூற்றுமாகும்.

மேடான இடத்திலிருந்து கீழிறங்குவது எளிது என்று யாவரும் அறிவோம். அற்ப விஷயங்களும் தீவினைகளுக்கு ஏதுவாவனவும், அரிதிற் பயின்று உறுதிப்படவேண்டுவன அல்ல. சன்மார்க்கமும் ஞானமும் முறையே நிலை நிற்றற்கும் பெறுதற்கும் அரிதாகையால், இவைபெற்று உய்ய வேண்டுமென்றே ஆன்றோர் அற நூற்களும் இதிகாச புராணங்களும் வற்புறுத்திக் கூறுகின்றன. பெரும்பான்மை மனிதர் மயங்கி அல்லன செய்தற்கு ஒருப்பட்டு நிற்றலால், அஞ்ஞான இருள்மூடிச் சன்மார்க்க மறியாதாருக்குப் பகலை இருளாகவும் இருளைப்பகலாகவும் கொண்டுலவும், நற்கண்கள் பெறுப்புட்கணங்களை உவமித்தது பொருந்துவதேயாகும். மாந்தர் பலரும் தாம் மிக வருந்திப் பல கற்பதற்குத் தக்க பயன் பெறவேண்டும். அறிவே உருவாகிய கடவுளின் திருவடிக் கன்பு பூண்டிலராயின் "கற்றதனாலாய பயன் என்கொல்" என்பர் நாயனார்.

வறுமையால் வாடிய நீக்ரோ ஜாதியர், பஞ்சம் நீங்கிப் பயன்பெறும் வண்ணம், ஒரு பூசணிக்காய் பெற்றனராம் இதனுள் நூற்றுக்கணக்காக விதைகளிருப்பது நாமறியாததன்று. அந்நீக்கிரோக்கள், விதையுமுள்படக் காயைச் சமைத்து உண்டுவிட்டனர் என்று கதை சொல்வதுண்டு. கதையின் உண்மை எவ்வாறுயினும், புலவர் பெருமான் அரிசில்கிழார், அதிகமான் என்னும் வள்ளலைக் கூற்றுவன் கைக்கொள்ள ஆற்றொணுத்துயர் மேலிட்டு "அறமில் கூற்றமே! வறுமை மிக்க உழவன், நீடித்து வாழ உதவியா

மென்றுகருதாது விதையையே உண்டதுபோல், அதிகமான் உயிர் உண்டனேயே! அன்னுன் உயிர் கொள்ளாவிடின், அவனைப் பகைத்துப் போர்க்களத்து அவன் கையால் மாளும் பல்லோர் உயிரை உண்ணலாமன்றே !" என்ற கருத்துப்பட வருந்திக் கூறியவரலாறு புறநானூற்ருல் விளங்கும். மேற் கூறியோர் விதையுண்டதுபோலன்றி "விதையுண்பது" என் பதில் மட்டில், சிறந்தோர் நற்கருத்து உண்டென்பர் சான் ேறர். ஓர் பிறப்பிலியற்றும் நன்மை தீமைகளே, அவற்றின் பயனை அனுபவிக்க, பல்வேறு பிறப்புக்களுக்குக் காரண மாகின்றதென்பது அறநூற்களின் கருத்து. மிக அரிதிற் பெறப்படும் மானிடப்பிறவி பெற்ற நாம், இனியும் பிறந் திறந்து வருந்துவதற் கேதுவாகிய தீவினைகள் பலவற்றை இப்பிறப்பினும் செய்வதைவிட்டு, எடுத்த ஜன்மத்தையே பயன் பெற்றதாக ஆக்கிக்கொள்ள வேண்டுமென்பதே "விதையுண்பது" என்பது குறிக்கும் சிறந்த நற்கருத் தென்பர்.

---

## 3. தொண்டு பூண்டொழுகல்.

பிறப்பிறப்பில்லாதவன் ஒருவனே, பிறவிப்பெருநோய் தீர்க்க இயலும். அப் பெருமான் திருவடிகளை இறுகப் பிடித்து மனத்தே இருத்துவதே மிக்க பெருமையுடைய தாகும். இறைவன் திருவடிகள் இரண்டுமே புணையாகக் கொண்டு பிறவிப் பெருங்கடல் கடக்குமாறு புலமை மிக்க சான்றேர் கூறியுள்ளார். இப்பெருமான் உலக முற்றிலும் தானேயாய், அவற்றின் வேருகவும் நிற்பன்; மனேவாக்குக் கெட்டாதவரும், ஞானமே திருவுருவாகக் கொண்டு பக்தி

வலையின்கண் எளிதிற் படுவோருமாகிய இக் கருணைவள்ளலை வழிபடுவோர், தாம் தாம் முற்பிறப்பிற் செய்த நல்வினைக் கேற்ப வந்துற்ற பழக்கங் காரணமாய் உறுதிபெற்ற மனோ பாவத்திற்கும், முன்னோர் முறைக்கும் முரணின்றி, பல்வேறு திருநாமங்களும் குணங்களும் குறிகளும் கற்பித்து, வந்தனை செய்து வழிபட்டு நிற்பர். கடவுளுக்குகந்ததா மென்று கருதி, அரிய திருப்பணிகள் பலவற்றில்றலை நின்று, உள்ள முருகிக் கருணைபுரியுமாறு வேண்டுவர்; தன் அன்பர் வேண்டியபோது வேண்டிய வண்ணமே எளியராய்த் தோன்றி அவ்விறைவரும் இன்னருள் புரிந்து காப்பர்.

தன்னில் தலைவனொருவன் உள்ளான் என்ற கருத்தும், தகாத செய்தால் தண்டிக்கப்படுவோ மென்ற எண்ணமுமே மனிதனை நல்வழிப்படுத்து மென்பர் ஆன்றோர். எல்லாம் வல்ல கடவுளுக்கு அற்பசக்தியுள்ள மனிதன் செய்யப் போவது யாது? இவ்விறைவனே வேண்டுதல் வேண்டாமை இல்லான் என்று நாம் அறிவோம். சுருங்கச் சொல்லில், உலகத்து மக்கள் புரியும் எத்தகைய தொழிலும் தன்னலங் கருதியேயாகும். கோடிக்கணக்காக எடுத்த ஜனனங்கள் தோறும் மனத்துக்கண் பட்ட மாசுநீங்கி ஞானவொளி பெறுவதற்கே, கைகால் முதலிய அங்கங்களைக் கொண்டு கடவுளுக்குகந்த பணியிற் றலைநிற்றல் வேண்டுமென்று வற்புறுத்தப் படுகின்றது; இன்றேல் குணக்கடலாகிய கடவுளின் திருத்தாளை வணங்காத்தலை முதலிய குணமற்றனவேயாம் என்று தெய்வப்புலமை திருவள்ளுவனார் கூறுவர்.

பல்வேறு முயற்சிகளில் தூண்டும் மனத்தை யடக்கி, இறைவன் திருவடிகளுக்கு அன்பு பூண்டொழுகுமாறு செய்தல், எளியதோர் செயலுமன்று என்பதை முன்னரே கூறியுள்ளோம். இவ்வரிய தொண்டைச் செய்து, எவ்வுலகுக்

தன்னுள்ளடக்கி, மீண்டும் படைத்து, காத்து, அழிக்க வல்லாலொருவனை தங்கள் மனத்தே அல்லும் பகலுங் கொண்டு துதித்து நின்றால், இவரினும் பெரியர் இஞ்ஞாலத்தில் இல்லை யென்றே, "தொண்டர் தம் பெருமை பேசவும் பெரிதே" என்றார் ஔவையார். முன்னர்க் கூறியவாறே பிறப்பின் பயனுணர்ந்து, இப்புண்ணிய பூமியின்கண் பல் வேறாய திருத்தொண்டுகளைச் செய்து, பரமன் திருவடிக் கன்பு பூண்டாராய் மேன்மையுற்ற நமது நாட்டுப் புண்ணியர் சிலரின் சரிதையைக் கூறுவதோர் நூல் உண்டு. அந்நூலிற் கூறப்படுவோரினும் பெரியார் ஒருவர் இன்மையால், அந் நூலைப் "பெரிய புராணம்" என்பர்; அவர்களுள்ளும் "கடை வழிக்குக் காதற்ற ஊசியுங்கூட வாராது என்று கண்டு, துறவு பூண்ட பட்டினத்தார், தான் செய்த தீவினைகளுக்கு மன மிரங்கி ஈசனைத் துதித்துநின்று "ஐய! நான் இனிச் சென்று தங்களுக்கு ஆளாவதெப்படி? நின்னடியார், அரும் பெருஞ் செயலிற் றலைநின்ற ஒருவர் போல் வாளால் மக வரிந்தூட்ட வல்லேன் அல்லேன்" என்று பாராட்டிப் பேசிய தொண்டர் ஒருவர் உளர். இவரைப் பரஞ்சோதியார் என்னும் சிறுத்தொண்டராம் பெருத்தொண்டர் என்றும் சிறப்பாகக் கூறுவதுண்டு. இவர் வாழ்ந்த நாடும் சோழவளநாடாம் சிறப்புடைய நாடாகும்.

---

## 4. நாட்டுச் சிறப்பு.

மனிதராகப் பிறப்பதே பெருமையுடைய தென்றும், இதனால் அற்பமானதும் சில காலமுமே இருக்கக்கூடிய இன்பம் நாடாது, பேரின்ப விழைவுடையோராய் இருத்தல்

வேண்டுமென்றும், அதற்கேற்ற இடமும் விண்ணவரும் விரும்பும் தான் பிறந்துள்ள பூமியே யென்றும் கருதி நன் முயற்சியிற் றலைப்படவேண்டு மென்று ஒருவாறு கொள்ள லாம். எக்காலத்திலும், தன்மாட்டும் தான் பிறந்த பூமியி னிடத்திலும் அன்பில்லான், ஒருவித மேன்மையையும் பெறு வது அரிதா மென்று நாம் நன்கு அறிவோம். சர்ப்பங்கள் நித்தியவாசஞ் செய்ய அனுகூலமாய், சுற்றிலும் சப்பாத்தி வளர்ந்து, பாழடைந்த வீடுகளும் இடிந்த சுவரும், நீண்டு மண்புரண்ட திண்ணைகளும், விழுந்து மக்கிய மரத்துண்டு களும் தூணும் விறகாகப் பெரும்பாலும் உதவுவதாகிய இக்கால கிராமாந்தரங்களுக்குச் சென்று, ஆங்குள்ள மகா ஜனங்களைக் கேட்பினும், அவர்கள் ஒவ்வொருவரும், தாங் கள் பிறந்து வளர்ந்து வசிக்கும் அவ்வூருக்கு வேறு இணை யில்லை யென்று, அத்தலத்தின் பெருமையை நாம் நன்குய் அறிய ஒரு புராண கதையும் கூறுவர். நமது பெரியோர், பனிபடர் நெடுவரை இமயம் வடக்கதாயும், குமரியே தெற்க தாயும் பரந்த நம் நாட்டையே புண்ணிய பூமியாகக் கருதப் படும், "பரத கண்டம்" என்பர். இவர்களுக்கு நமது அபி மானத்தை உறுதிப்படுத்த வேண்டு மென்பது நோக்கமே யன்றி, பிறநாடுகளில் ஏதாவது ஒன்று சிறப்புடையதே யானல், நம் பெரியோர் அதனை அறியதாருமன்று. இப் புண்ணிய பூமியிற் பிறந்தவர்களே பெறலரும் பயன் பெறு வதற்குரியா ரென்ற மாத்திரத்தில், வேறு பல நாடுகளில் உள் ளவர்களை நீக்கதிக்கு ஆட்படுவார்கள் எனக் கருதினார்கள் என்று கொள்வதும் முறையன்று. ஆத்மஞானத்திற் சிறந்த பெரியார்கள் பலர் இருப்பது நமது நாடென்றும், ஏனைத் துறைகளில் முயற்சியுள்ளோர் பிறநாட்டினரென்றும் இன்று வரையில் பற்பல பிரசித்தி பெற்ற பெரியார்கள் கூறி வரு கின்றனர்.

இப்பரத கண்டத்தின் கண்ணும், பொதிய மலையில் வாழும் முனிவரின் முதியாகிய அகத்தியனார் திருவருளால், நுரைமேல் மிதப்ப ஆரவாரித்து, துறைதொறும், துறைதொறும் நறையும் நரந்தமும் அகிலும் ஆரமும் கொணர்ந்து தள்ளித்தள்ளி, தன் சுமை நீக்கி இளைப்பாறுவாள்போல், கங்கையிற் புனிதமாய காவிரி பெருகிப் பாயும் புனல்நாடே சிறப்புடைய தென்றும் கூறுவர். இந்நாட்டு மக்களும், நீர்வள நிலவளப்பத்தால் மிக்கு, உரிய காலத்தே உழுது பயிர் செய்து, விளைந்து முதிர்ந்த செந்நெற்கதிர்களை வளைந்து சூழ்ந்து அரிவாளிட்டு, மாமேருவுங் கண்டால் வெருக்குமெனச் சூட்டை யடுக்கி, அகல்விசும்பு நோக்கி ஆனந்த முறுவர். காராளர் ஏர்கள் கடவுவோசை அனேகமாய் என்றும் அருத இந் நீர்நாட்டுமக்கள், மலைகளாகக் குவித்த சூட்டுகளைச் சாய்த்து, சாய்த்தவைமேல் மலைகளைச் சூழ்ந்து மேயும் மேகங்கள் போலும் பகடுகளைச் சுற்றிப்போக்கி, நூற்களை ஆராய்ந்து ஒண் பொருள் கொள்ளும் நுண்ணறிவாளர் போல், வைக்கோலை அகற்றி, விண்மாரி யெனவே நென்மாரி தூற்றி, மீட்டும் மணிக்குன்றுகள் போலும் மாசுபோக்கிய செந்நெற் குவித்து, உலகளந்த உத்தமனின் அடியார்கள் ஒப்ப மண்ணிட்டு, இலைச்சினையிட்டுச் சேமித்து வைப்பர். தாங்கள் பெற்ற பலனில், அவ்விடமே அரசர்க்கோர் கூறளித்து, அறம்பல புரிவதற்கும் அந்தணர்க்கும் குரவர்க்கும் விருந்தினருக்கும் அண்டிய கிளைஞரை ஆதரிப்பதற்குமாக, எஞ்சியவற்றைப் பண்டிகளிலேற்றி, பார்மகள் முதுகும் நெளியுமாறு கொணர்ந்து, இல்லஞ் சேர்த்து, நெருங்கக் கட்டிய குதிர்களில் இனியும் இடமில்லையாமென்று சொரிந்து வாய்பூசிச் சிந்தாது காப்பர். பகடு நடந்தகூழ் பல்லாரோடுண்ண வேண்டுமென்னும் அறநெறியோர்ந்த புனல் நாட்டு மக்களின் பொலிவு நோக்கவும் பூசனை ஏற்கவும், இமை

யவர் என்றும் இமையாராயினர். பொற்கலனும் பூணும் தூசும் நிறைந்ததாய், வேற்றார் யாந்தர் இன்றும் விழைவொடு சென்று வேண்டுவன பெற்று மகிழ்ந்து மீளும் வேலியாயிரம் விளையுளையுடையதாகப் பொன்னி பொன் கொழிக்கும் இப்புனல் நாட்டினர் தம் பெருமிதங்காணவே, இரவியும் சசியும் என்றும் உலவுவர். நித்ய கல்யாண புருஷர்களாய், வாயிலிட்ட தம்பலமும் பேலே பூசிய வாசனையும் சாந்தும், சூழ முடித்த புஷ்பமும் வீசும் நறுமணமுகந்தே காமனைக்காய்ந்த கடவுளர் தாமும் உமையொரு கூறராய், இந்நாடெங்குங் கோயில் கொண்டு நிலவாநிற்பர். இந்நாட்டினர் எவரும், இன்முகங்காட்டி எதிர்கொண்டழைத்து, விருந்தினரோம்பும் அருங்குணங்கண்டே ஒளவைப்பிராட்டியும் “சோழவளநாடு சோறுடைத்து” என்றார். இவ்வளநாட்டில், ஓர் முக்கிய தலமாகிய தில்லையம்பதியை “அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்” என்று திருஞானசம்பந்தர் புகழ்ந்து பாடினர். நமது தெருக்களிற்காணும் பிச்சைக்காரர்களும் “சிவசிதம்பரம்” என்ற மாத்திரத்தில் வயிறு நிரம்புமெனும் உண்மையை அறிந்தாரென்னின் இனியும் பல்வேறு எடுத்துக் காட்டுவதேன்?

இவைபோற் பற்பலகூறி, அச்சோழ வளநாட்டின் இயற்கை வளத்தோடு சொல்வளமும் கூட்டி, நாவீறு படைத்த நற்றமிழ்ப் புலவர் பலபடப் புகழ்ந்தும் தங்கள் ஆர்வம் ஓர் சிறிதும் அடங்கப் பெற்றிலரே யாவர்.

## 5. நகரச் சிறப்பு.

இச் சோழ வளநாட்டில் பிரணவ ஸ்வரூபியாய் தன்னை வணங்கி வழிபடுவோர் முயற்சிகளுக்கு இடையூறுகும் பல

வற்றை நீக்கி யருளுபவரும், சிவகணங்களுக்குத் தலைவரு மாகிய கணபதியே பூசித்து பேறு பெற்றதாகக் கூறும் "கணபதீச்சுரம்" என்னும் திருக்கோயிலையுடைய திருச் செங்காட்டங்குடி யென்னும் திருப்பதியொன் றுண்டு. இஃது நாயன்மார் மூவரும் புகழ்ந்து பாடிய பெருமையும் உடையது. உள்ளடங்கிய நகரங்கள் வளப்பமுடையனவா யிருந்தலே நாட்டின் பெருவளத்திற்குக் காரணமாகு மென்பர். நாகரீக புருஷர்களாக, நாம் கிராமங்களை விடுத்து பெரிய பட்டினங்களிலேயே வாசஞ்செய்யப் புகுந்த பின் னர், இந்நிருநகர் இன்று நண்பகலே குறுநரி கூவிக்கூசாது ஓடும் குறையுற்றிருப்பினும், முன்றாளில், ஒன்றுக்கொன்று எதிர்முகமாகிய திக்குகளின் இடைவெளியை அளப்பன போலும், அகன்று நீண்ட வீதிகளிலுள்ள மாளிகைகள், தம் மேன்மாடங்களால், திருநெடுமாலுலகளந்த திறமை காட்டித் திகழ்ந்து விளங்கும். அந்நகராதி அருங்குலமக்கள், தம் வான்மூறை பிறழாது மருங்குவாழும் இத்திருநகரின் சீர் காண விழைந்த விண்ணவர் தாமும், இமையாத கண்கள் இரண்டேபெற்ற, புண்ணியக் குறையை எண்ணி வருந்துவர். கண்ணகிபோலுங் கற்புடைமகளிர் கணக்கிலராகிய அந் நன் னகரில் ஆடவர் வெகுள்வரென்றே ஆயிரங்கண்கள் பெற்ற தேவர்கட் கிறைவனும் அவிபெறற்கன்றிப்புகுவா அஞ்சு வன். உயிர்களனைத்தும் உய்தற்பொருட்டே வேதியரியற் றும் வேள்வியினெழுந்து, விசும்புள நகர்க்குப் படிகட்டிய தென்னப் புகைசுருண்டு பரந்து மேலெழாநிற்கும். அப் பெருநகர் மாந்தர் பரிந்து பலநாளளித்த அவிர்ப்பாகம் பெற்றுண்ட கடவுளர், இன்றும் அஜீரணப்படுமென்றஞ்சியே ஆலயங்களில் நாம் ஊட்டும் அமுதுண்ணாராயினர். அப்பெரும் பதிவாழுநர் புலமைக்கு அகத்தியர் குன்றிக்குன்றுறைவா ரெனல் மிகையாகாது. இந்நாட்டின் ஓர் கூற்றிலன்றோ

11162



இறைவன் கீழிருந்து பணிந்து கேட்க, இளையோன் பிரண வப் பெரும்பொருள் போதிக்கலாயினன்? தம்மினும் தம் மக்கள் அறிவுடையோராய்த் திகழும் அப்பெரும்பதியில், குபேரன் நண்பனும், பொன்மேரு கைவில்லும், வெள்ளிப் பொருப்புவதியு மிடமாகவும் உள்ள ஈசனே சிரக் கப்பறை யேந்தி வருடமோர்முறை இரக்கப் புறப்படுவர். பிறருடைய குறைவையும் நிறைவாகக்கொள்ளும் அந்நன்னகர மாந்தர் இதை பிக்ஷாடனக் காக்ஷியென்றே கொண்டாடுவார்கள். வேறொருவரும் இரப்போரில்லா இந்நகரத்தில், இல்லையென் றுரைப்பவர்க் கில்லையென்றுரைக்கும் இதயமுடையோரும் இலரேயாவர். முடிவிலா இந்நகரப் பெருவளத்திற்கோர் முடிவுங் கூறவேண்டுமேல், நகரச்சிறப்புகூற வகையறியா துகவே, நகரற்சிறப்பென்று நாவாயிரம் படைத்த ஆதி சேடன் பாதளம்புக்கொளித்தான் என்பதே புலமை மிக்குடைய பல்லோர் கூற்றும்.

## 6. மாமாத்திரர்—பரஞ்சோதியார்.

நாட்டுவளமும் நகரச்சிறப்பும் ஒருவாறு ஆங்குள மக் களின் இயற்கையை அறியக் காரணமாகுமென்பது சான் றோர் கருத்து. இவை எவ்விதத்தாலும் சிறந்து விளங்கினும், முற்பிறப்பிற்செய்த தீவினையால் மட்டிலன்றி, அசுத்தமா யிருப்பதாலும் காலம் தவறி உண்பதாலும் அளவுமீறிப் புசித்தலாலும் பக்குவமில்லாத ஆகாரத்தை உட்கொள்வ தாலும் ஆடி ஓடி உழைக்காததாலும் மாந்தரிற் சிலர் பிணி யுற்று வருந்துவர். நோயால் வருந்துபவரின் உடற்கூறறிந்து ஒளஷதங்களைக் கொடுத்து உதவி புரிவோர் ஒவ்வொரு நகரத் திலும் சிற்சிலரிருப்பர். இவர்களை வைத்தியர்கள் என்றே

நாமறிவோம். இவர்கள் கற்கும் சாஸ்திரம் வேதத்தின் ஒரு பாகமாகுமாகையால், இவர்கள் இப்பெயர் பெற்றனரென்று கூறுவர். அப் பகுதியை ஆயுள்வேதமென்றும் அதில் நோயின் இலக்கணம், பருத்துவனின் இலக்கணம், மருந்தின் இலக்கணம், நோயாளியின் இலக்கணம் முதலிய விளக்கிக் காட்டப்பட்டுளதென்றுங் கூறுவர். இவ்வேதமறிந்து வைத்தியம் செய்வோரை மாமாத்திரர் என்றும் கூறிவந்தனர். ஆயுள்வேதம் கற்பதோடு, வைத்தியம் செய்வதில் வல்லவராவதற்கு மிகுந்த புத்தி நுட்பமும், மக்களின் மாட்டுமிகுந்த அன்பும் அவசியமிருக்கவேண்டும்.

கைகால் புழுத்து அழுகிக் காததூரம் துர்க்கந்தம் வீசும் தொழுநோயுள்ளான் முதலாக, உலகமே ஓர் அரங்கமேடை என்று உணரும் ஞானிவரையில் அஞ்ச வருவதோர் பெருநோயுண்டு. அந்நோய் பிறப்பே காரணமாகத் தொடர்வது; இதனின்றும் மிகச் சிலர் மீளினும் மீளலாம். கருணைப் பெருங்கடலாகிய உலக குரு, ஸ்ரீ சங்கராசாரியர், ஆன்மகோடிகளுக்குச் செய்த அரியதோர் உபதேசம் இந் நோயினின்று நீங்கி, மரணமறறவராக எவரும் ஆகவேண்டுமென்பதே. உலகவியல்கண்டு உய்யும் வழிநாடிய பெரியோர்கள், மனிதன் இறக்கும்போதே மறுபிறப்புக்கும் முளையடித்துக் கொண்டே இறக்கிருனென்று சிறந்த நூற்களில் கூறப்படுவதால், "இறவாதிருக்க வரம்தரல் வேண்டும்" என்றே பிரார்த்தித்திருக்கின்றனர். "இன்றைக்கிருந்தாரை நாளைக்கிருப்பரென்றெண்ணவோ திடமில்லை; தங்கள் கருணைக் காளாகாமலே இறந்துவிடுவேனோ என்று பயந்தே, திருவருளுக்கு விரைந்து விழைகின்றேன்" என்று தாயுமானவரும் கூறலாயினர். பாமரராயினும் பக்தராயினும் உட்கும்படி உயிர்கவரவரும் காலனைக் காலால் கடிந்து, தன்னடியார்க்கு அடியாரிடத்திலும் அணுகாதவாறு கண்டித்த கருணை வள்ளல்

ஒருவன் அன்றோ, இறப்போடு பிறப்பென்னும் பிணிதீர்க்க வல்லான். உலகுய்யும்பொருட்டு கருணையே காரணமாக வேனும் பிறந்திறந்து வருவார் ஏனையரைக் கூவியழைத்து என்னபயன்? "என் பிறப்போ எண்ணத் தொலையாது; உன் பிறப்போ பத்து; உயர் சிவனுக்கொன்றுமில்லை" என்ற காளமேகத்தின் கூற்று மேற்கோளாகாவிடினும் பிறப்பிலி இறப்பிலி பிறங்கலரசன்றன் மகளார் நாதன்" எனப் பார்வதீபதியாகிய பரமன் ஒருவன் அன்றோ, பரம வைஷ்ணவரான வில்லிபுத்தூரராலும் புகழப்பட்டவர். எவருடைய பஞ்சாக்ஷர மந்திரத்தைக்கொண்டே அடியார்கள், பூத பைசாசங்களுடைய சேஷ்டைகளையும், மகாரோகங்களையும் நீக்குகின்றார்களோ, எவர் தாமே வைத்யநாதராக விளங்குபவரோ, எவர்மாட்டு கடுவிடம் கொடுமையற்றதோ, அப் பரமேஸ்வரனுக்கும் அவருடைய அடியார்களுக்கும், தான் அடிமைப்பட்டவராக, பரஞ்சோதியார் என்னும் ஓர் ஆயுள்வேத பண்டிதர் முன்னர்க்கூறிய செங்காட்டங் குடியென்னும் சிவபக்தர்கள் நலங்காட்டும் பதியில் வதிந்து வருவாராயினர். இவரை அந்தணரென்றே அபிதான சிந்தாமணியாலும், தமிழ்மொழி அகராதியாலும் அறியக்கூடும். பரஞ்சோதியாரை மாமாத்திரப் பிராமணர் என்பர். இவர் இளமையிலேயே படைக்கலப் பயிற்சியிற் பெரிதும் தேர்ந்தவரும் ஆயுள்வேதம் நன்கறிந்தவருமானார். வடநூற் கலைகள் பலவற்றைக் கற்றும் வல்லவராயிருந்த பரஞ்சோதியார், யானைப்படை, குதிரைப்படைகளை நன்கு செலுத்தி, போர் வென்று மீளும் திறமையும் வாய்ந்தவரானார். கற்க வேண்டிய நூற்கள் அனைத்தையும் கற்று, அதனை வலியுறுத்துவான், கற்றுவல்ல பெரியார் வாய்க்கேட்டு, கற்றவை கேட்டவைகளைப்பற்றிச் சிந்தித்து, யாக்கையும் செல்வமும் நிலையாமையை நன்குணர்ந்து என்று மீறிலான் ஒருவன்

இணையடிக் காட்பட்டு, அவர்தமடியாரிடத்தும், இவர் பெரி தும் பக்தியுடையோராய் விளங்கிவந்தார். அக்காலத்து சோழநாடாண்ட அரசனிடத்து, ஓர் அந்தரங்க உத்யோகஸ் தராய் அமர்ந்து, தான் இளமையிற் கற்ற கல்வி கைதர, இவ் வடியார்க் கடியார், அரசனுலேவப்பட்டு, உத்தரதேசத்தின் மேல் படையெடுத்துச் சென்று, அங்கு ஆண்டுவந்த அரசனை "வாதாவி" என்ற இடத்தில் வென்று, வெற்றியாற்பெற்ற பொருள்கள் பலவற்றை தன்னரசன் கண்டுகளிக்கக் கைக் கொண்டுமீண்டார். இவரது காலத்தை, இப்போதைக்குப் பல்லாயிரம் வருடங்களுக்கு முன், என்று கருதுவார் இல் லாமற் போகவில்லை.

காலதேச சரித்திர ஆராய்ச்சிகளிற் றலைநின்றவல்லார், கி. பி. ஏழாவது நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்த பல்ல வச்சமண அரசன் "மகேந்திரவர்மன்" என்பவனே, திரு நாவுக்கரசு சுவாமிகளைப் பலவிதமாய் வருத்தியவனென்றும், இம் மகேந்திரவர்மன், திருநாவுக்கரசு சுவாமிகளைப் பின் பற்றி சைவசமயத்தையே மேற்கொண்டான் என்றும் கூறுவர். இவன் சந்ததியார் சிறந்த சிவபக்தர்கள் என்றும் அவர்களில் மேற்கூறிய மகேந்திரவர்மன் மகன் நரசிம்ம பல்லவன் என்பவன் காலத்திலேயே, பரஞ்சோதியார் பல்லவ அரசனுக்காகப் படையெடுத்து, சளுக்கிய அரசனை புலிகேசி என்பவனை 'வாதாவி' என்ற இடத்தில் சுமார் கி. பி. 642ல், வென்று மீண்டார் என்றும் முடிவாகக் கருது கின்றனர். சுமார் பத்து வருடங்களுக்குமுன் வெளியிட்ட தமிழ்மொழி அகராதி ஐந்தாம் பதிப்பில், "சிறுத்தொண்டர் என்னும் பரஞ்சோதியார், இற்றைக்கு நாலாயிரம் வருடங் களுக்கு முன் இருந்தவர்" என்று குறிக்கப்பட்டுளது. உலகத்து மக்கள், இப்போதுள்ள தாழ்ந்த நிலைமையை அடைவதற்கு நீடித்தகாலமே கடந்திருக்க வேண்டுமென்று

கூறினால், "விஷமும், தீயும் மிகவிரைவில் அழிந்து மண்டும்" என்று சுருக்கமாய் நமக்கு ஒரு பதிலும் சிலர் கூறுவர். திருநாவுக்கரசர் எண்பத்தோராண்டு வாழ்ந்திருந்தோராவர். திருஞானசம்பந்தரும் இவர் காலத்தவரேயாவர்—திருஞானசம்பந்தரைப் பரஞ்சோதியார் தன்னூருக்கு அழைத்துவந்து உபசரித்ததாகக் கூறப்பட்டிருப்பதால், நாவுக்கரசர் மகேந்திரவர்மன் காலத்தவரெனில், மகேந்திரன் மகன் நரசிம்மன் காலத்து பரஞ்சோதியார் விளங்கினாரென்பதும் பொருந்துவதேயாகும்.

பரஞ்சோதியார் போர்வென்று மீண்டமை கண்ட அரசன், அதிசயித்துப் புகழ்ந்து பல கூறுவானாயினன். அருகிலிருந்த அமைச்சர்கள் அரசனை நோக்கி "அரசே! நமது பரஞ்சோதியார், வெகுளி மேலிட்டு முப்புரமும் புன்னகையா லெரிக்க வல்லானும், தன்னை யடைந்த தண் கதிரோன் கலை குன்றச் சாபமேற்று குறையிரந்து நிற்ப, தண்ணளி சுரந்து, தலைதூக்கிவைத்து, உலகு கண்டுய்யும்பொருட்டு சந்திரசேகரனாய் விளங்கும், சிவபெருமானது திருத்தொண்டிற் றலைநின்ற பெரியாராவர்; இருவருக்கு எதிராவோரும் இவ்வுலகிலிருப்பாருண்டோ!" என்று பாராட்டிப் பேசுவாராயினர்.

நம்பெருமான் திருத்தொண்டர் எனக்கேட்ட அரசன் எழுந்து, அஞ்சி நடுங்கினனாய் "கைலாசபதியான பரமனை தன்னடியார்க்கு மடியானாக, நான் இவ்வடியவரை அறியாது எவற்றொழில்செய்ய அமர்த்திக்கொண்டேன்; உம்பர்பிரான் அடியாரை உணராமல் அபராதியாயினேன்; இவர் தம் திருமேனிக் கிடையூறும் விளைந்திருக்குமேல், யானும் என்னரசும் என்னாவது" என்று வருந்தி மனம் புழுங்கி, பிழை பொறுத்தருளுமாறு பரஞ்சோதியாரை வணங்குவானாயினன்.

அரசன் தன்னை வணங்குமுன் தான் வணங்கிய பரஞ்சோதியார், "வேந்தே! தங்களது விருப்பத்தையும், அரசின் நலத்தையும் நாடி எதையும் தாழாது செய்யக் கடமைப்பட்டவனாகிய அடியேன், எனது உரிமைத்தொழில் செய்து மீண்டதிற் பிழையென்னை" என்று கூறினார்.

பற்பல பிறப்புகளிற் செய்த புண்ணியத்தால் ஒரு சிறிது பெறப்படும் சிவபக்தி நிரம்பியோனாகிய அரசன் மிகுந்த பொருள்கொடுத்து சிறப்புகளைச் செய்து, கைகுவித் தெதிர் நின்று ஆனந்தக் கண்ணீர்வார பரஞ்சோதியை நோக்கி "அடிகாள்! இன்று மந்திரிகளாலறிந்தேனேயன்றி தங்களது மனோபாவத்தையும் பக்தியையும் நான் ஒரு சிறிதும் அறிந்துகொள்ளக் கூடாவண்ணம் இதுவரையில் தாங்கள் நடந்துகொண்டுவந்தீர்; இனித் தங்கள்போலும் பெரியார் என்பணி செய்வதி லமர்ந்திருப்பது தகுதியன்று; என் மனக்கருத்துக்கிசைந்து தாங்கள் செய்துவரும் திருத்தொண்டை வெளிப்படையாகச் செய்து, சிவபெருமானுக்கும் அவர் தமதடியார்க்கும் இனியராதல் வேண்டும்" என்று பிரார்த்தித்தான்.

அரசனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு, பெருநிதியும் புகழும் மிகப்படைத்தோராய், தனது ஊர்வந்து, திருக்கோயில் முன்சென்று "எந்தாய்! திருவருளால் அரசனுவப்பச் செய்வனசெய்து மீண்டேன்; என்றும் திருவடியை மறவாமலிருந்தேன்; கானகம் புகுந்து கடுந்தவமியற்ற அறியேன்; மடலவிழுமலரனைய கைவிரித்துக்கூப்பிப் பலவாறு புகழ்கூறி வாழ்த்தி, கடல்மடை திறந்ததுபோலும் ஆனந்தக் கண்ணீர் பெருகப் பக்தியுடையேனல்லேன்; அறிவறிந்த அடியாரிற் செறிந்திருந்தேனல்லேன்; பெறற்கரிய மாணிக்கமே! எந்த நாள் கருணைக் குறித்தாகுநாளென்று மட்டில் ஏங்கு

கின்றேன்; ஏழையேற்குன் திருவருள் இன்று வருமோ, நாளைக்கே வருமோ, மற்றென்று வருமோ அறிகிலேன்" என்று தன்னையுமறந்து, இருகண்ணும் நீர்வார தண்டாகாரமாக விழுந்து, பரஞ்சோதியார், தெளிந்தெழுந்து பரிவார மக்கள் புடைசூழ இல்லஞ் சேர்ந்து உறைவாராயினர்.

---

## 7. இல்லறம்.

ஈடும் எடுப்பும் இல்லா இறைவன் இணையடிக்கன்பு பூண்டார், இல்லஞ்சென்று பனையறம் மாண்புற நடத்துவாரென்னல், வியப்புடன் ஐயத்தைப் பெரிதும் விளைக்கும். நாவிற்கினியன எவையேனும் பனைவிமக்களுடன் வேண்டும போது எவ்வளவும் உண்பதும், விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களைச் சிறப்புறப் புனைதலும் உறங்குவதுமே இல்லறமாயின், இது அறமெனவும் பெயரிடப்பட்டு ஆன்றோரால் மாந்தர் மேற்கொள்ளத் தக்கதென்று வற்புறுத்தப்பட்டிராது. அறம் என வற்புறுத்தியது மட்டிலன்றி, ஏனை அறத்தினும் இல்லறம் சிறந்ததென்றே கூறுவாரென்னின், இல்லறத்தான் ஏனையோரினும் அரியசெயல்களைச் செய்பவனாதல் வேண்டும். தான் இளமையில் நல்லாசிரியனை அடுத்து, தக்கது இன்னது தகாதது இன்னது என்று தெரிந்துகொண்டு, நல்லறம் நடத்த அவாவும் பயிற்சியும் பெற்று, நல்லறமாதலாலேயே இல்லறம் மேற்பூண்டவனாய் இல்லறத்திற்குரிய தருமங்களைச் செய்துவரவேண்டுமென்பதே நூற்கள் போதிப்பதாகும். தான் முந்திப் பயின்றதுபோல், ஆசிரியரை அண்டி பிரமசாரியாய் நிற்போர்க்கும் வனத்தில் வசித்துத் தவஞ் செய்வோர்க்கும் முற்றத்துறந்த பெரியார்க்கும் நேரிடச்

கூடிய இன்னல்களைக்களையவே, தான இல்லறப நடத்துவ தாகக் கருதுவர் அறத்தின் இயல்பறிந்தோர். " இல்வாழ்வா னென்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை " என்பர் குறளாசிரியர்.

உலகமே இல்லறத்தாரா னியங்குவது; வேதம், ஆகமம், புராணம், இதிகாசம், தருமசாஸ்திரம் முதலிய பலவும் இல்லறத்தாரை முன்னிட்டனவேயாகும். துறவு என்ற ஆன்றோர் கூற்றுக்கு, காட்டில் வாழ்வது, கந்தமூலங்களை யுண்பது, மரவுரிதரிப்பது என்ற பொருளோ, குகையில் தங்குவது, நீரில் மிதப்பது, பூமியுள் இருப்பது என்ற கருத்தோ ஒருசிறிதுமில்லை. இத்துறவால் மட்டில் ஒரு சிறப்புண்டாவதானால், காட்டில் வாழும் வேடர்கள், விலங்குகள், பறவைகள், விருக்ஷங்கள், குகையில் வாழும் சிங்கம், புலி, நீரில் வாழும் மீன், தவளை, மண்ணில் வாழும் பாம்பு, ஆமை முதலியனவும் சிறந்தனவாகக் கருதலாம். மனைவி மக்களும் சுற்றமும் வருந்த, நாட்டையும் வீட்டையும்விட்டு ஓடிவிடாமல், உலகத்திலிருந்துகொண்டே மனையறம் நடத்தி மனத்தூய்மையால் கைகூடப்பெறும் அகத்துறவுக்கு இணையும் மேலும் இல்லையென்றுதான், " அறமெனப்பட்டதே இல்வாழ்க்கை யஃதும்—பிறன் பழிப்பதில்லாயினன்று " என்று கூறுவார் நாயனார். இளமையில் நல்லாசிரியரை அண்டி, தர்மாதர்மங்களை நன்குணர்ந்த பரஞ்சோதியாரும் ' இல்லறமல்லது நல்லறமன்று ' என்று கண்டு, மனையறம் கடைப்பிடித்து ஒழுகுவாராயினர்.

பரஞ்சோதியார், மனையறம் பூண்டு மனத்தூய்மை மிக்குடையோராயினர் என்பதே பொருத்தமுடையதாகும். தாமரை மிகுதியாய் முளைத்துப் படர்ந்து நீரிற்றங்கும்; இத் தாமரையால் நீர்மிகப் பரிசுத்தமடையும்; ஆயினும், தாமரை

மேல் நீர் தங்கி நிலைப்பதில்லை. இங்ஙனமே இல்லறத்தில் பற்றுடையோராகக் கட்டுப்பட்டுவிடாமல், பரஞ்சோதியார், இல்லறத்தாற் பெரும் பயனாகிய மனத்தூய்மையை மட்டில் மிகப்பெற்று விளங்கினாரென்று கொள்ளலாம். மன்னவன் ஜனகன் என்னும் மிதிலை வேந்தனிடம் ஓர் அந்தணர் விரைந்து சென்றார். "அரசே! தங்களை பிரம சுவரூபியாகிய சுகரின் மேம்பட்ட ஞானியாகப் பலர் கருதுகின்றனர்; இல்லறம் நடத்தி, மனைவி மக்கள், நம்பொருள், நம்மவர், நாம் என்ற பற்றுடையோராய்ச் சிறப்புற வாழ்தல் கண்டிருக்கின்றோம்; பற்றற்ற ஞானியாயினீர் தாங்கள் என்பது விபரீதமாக இருக்கின்றது; இது எவ்வாறு இயன்றது என்பதைத் தெரிந்துகொள்ளவே ஈண்டு ஆவலோடு வந்துள்ளேன்" என்றார்.

விதேக நாட்டரசராகிய ஜனகர் "அந்தணராயினும் தர்ம சந்தேகத்துடன் வந்தபோதிலும், காலமுமிடமு மறியாது இங்குவந்து இங்ஙனம் வினவியது பெரும் பிழையேயாகும். பலருடைய குறைகேட்டு, அவசியமானவைகளை உடனே தீர்க்க வேண்டிய கடமையை மேற்பூண்ட என்னை, சிறிது காலந் தாழ்க்கச் செய்த குற்றத்திற்காக, உமது தலை துணித்தல் தகாத தண்டனையன்று; ஆயினும் ஒன்று கூறுவேன்; நீர் நிரம்பிய தட்டு ஒன்றைத் தலையில் தாங்கி, இந்நகர வீதி வலஞ் செய்துவருக; ஓர் துளியேனும் இடையே நீர் சிந்தில் தலை சிந்திவிடுமென்று கருதுக" என்று அந்தணரைச் சில ஏவலாளர் தொடர்ந்துசெல்ல வீதிவலம்வர விடுத்தார். வீதிகளில் ஆடுவோர் பலரும், பாடுவோர் பலரும் ஜாலவித்தைகள் செய்வோரும் பண்டிகளும் யானைகளும் தேர்களும், ஜனக்கூட்டமும், மிகுதியாகப் போய்க்கொண்டும் வந்துகொண்டும் இருக்க, அந்தணரும் அதிக ஜாக்கிரதையாய் வலம்வந்து, கடவுளினருளால் ஓர் துளிநீரும் சிந்தாது

அரசனை நோக்கி நின்றார். அந்தணரை நோக்கி மிதிலையர் கோன், "வேதியரே! வலஞ்செய்து வீதிவாய்வந்த தண்மை யாயின் ஆங்காங்கு நிகழ்ந்தவை யாவை" என்றார்.

தண்டனைக்குத் தப்பினோமென மகிழ்ந்திருந்த அந்தணர், "வேந்தே! நீர் சிந்தில் தலை சிந்தும் என்று அஞ்சி ஒன்றையும் உணர்ந்திலேன்" என்றார்.

ஞானிகளிற் சிறந்தோனாகிய மிதிலைவேந்தன், "பிறப்பைப் பயன்பெற்றதாக ஆக்கிக்கொள்ள மேற்கொண்ட தருமத்தை நடத்தும்போது, நோக்கம் இன்னது என்பதை மறந்தவன் பல்வேறு திறமைபெற்றோனாயினும்தான் யாது பயன்? வேதிய சிரேஷ்டரே! அருளுடையோனாயிருக்க வேண்டிய அரசன், அந்தணர் கேட்ட தரும சந்தேகத்திற்காக தண்டிப்பானென்று கொண்டு, எதனிலும் மனம் பற்றாது தாங்கள் மீண்டது எப்படி இறத்தற்கஞ்சியோ, அப்படியே பல்வேறு பிறப்பிற்குக் காரணமான பற்றுதல் என்பது அற்று அடியேன் பார்காத்தற்கமைந்தேன்" என்று விடையளிக்க, அந்தணர் சந்தேகம் நீங்கி வியந்து மகிழ்ந்து, தன்னிருக்கை சேர்ந்தார். நமது சந்தேகம் நீங்குவது அவ்வளவு எளிதன்று; ஆயினும், பரஞ்சோதியார் நடத்தும் இல்லற இயல்பையும் கூர்ந்து நோக்குவாம்.

---

## 8. விருந்தோம்பல்.

மகரிஷிகளிற் பலரும், சக்கிரவர்த்திகளாய்ச் சிறந்திருந்து பின்னர் பெரிய ஞானிகளாயினோரும், நாயன்மார் களிலும் ஆழ்வார்களிற் பலரும், நூலாசிரியர்களாக விளங்கும் பெரியோரும், இல்லறமே இனிது நடத்தி மேன்மை

யுற்றாரென்று அறிகிறோம். உலகுய்யத் திருக்கோயில்கொண்டருளியுள்ள தெய்வங்களும், இல்லறத்தாரைப் போலவே மனைவி மக்களுடன் நிலவுவாராயினர். எங்ஙனம் இல்லறம் நடத்தவேண்டுமோ அங்ஙனமே இல்வாழ்ந்து அறம் நடத்துவாரானால், துறவறம் பூண்டொழுகுதலினும் இல்லறமே பயனுடையதாகும்; "அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்—போஒய்ப் பெறுவதெவன்" என்பதைத் திருக்குறளிற் காணலாம். இளமையிலேயே இக்கருத்தை நன்குணர்ந்து இல்லறம் தலைப்பட்டு நின்ற பரஞ்சோதியார், தருமத்தின் நுட்பங் கண்டறிந்தவராதலால், அடியார்களைத் தேடி உபசரித்து உண்டியளிக்கும் கடமையைத் தினம் தவறாது நடத்துவாராயினர். தருமத்தின் நுட்பம் அறிந்தவர்கள், தாங்கள் பூமியிலிருந்து பெறும் பயனில் ஆறில் ஒரு கூறு அரசர்க்களித்து, எஞ்சிய ஐந்து கூறுகளையும், பிதுரர்களுக்கும் தேவர்களுக்கும் விருந்தினர்களுக்கும் சுற்றத்தார்க்குமாக நான்கு கூறுகளும், தான் சரீரத்துடனிருந்து தருமம் நடத்துவதற்கு ஒரு கூறுமாகப் பகுந்துகொள்ளவே இல்லங்கொண்டுவருவார்கள் என்று நூற்கள் கூறும். "தென் புலத்தார் தெய்வம் விருந்தொக்கல்தானென்றாங்—கைம் புலத்தாறோம்பல்தலை" என்று வள்ளுவனார் கூறுவர். தென் புலத்தாரும் தெய்வமும் கட்புலனாகாதவர்கள்; சுற்றத்தார்க்கும் தனக்குமாகக் கொண்டது தன்னலங் கருதியேயாகும்; இடையே நின்ற விருந்தினர்க் களித்தல் என்பதே "அதிதி சத்காரம்" என்று சிறப்பாகக் கூறப்படுவதாகும்.

விருந்தோம்பல் சிறப்பாகக் கூறப்படுதல் ஒரு தலையாக, இல்லறத்தார்க்கு முக்கிய கடமையாகவே கருதப்படுமென்பதும் புலவோர் கருத்து. துறவறம்பூணாது, ஒரு சிறிதேனும் பொருள்படைத்தோனாய், அப்பொருளைக்காத்து இல்லறம் புரிவது விருந்தினரை உபசரிப்பதற்காகவே என்பதை,

"இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி—வேளாண்மை செய்தற்பொருட்டு" என்று பொதுமறை கூறும். விருந்தோம்புதல் பெரும் பயனளிப்பது என்பதைப் பலவாருகக் கூறியுள்ளார் நாயனுர். விருந்தினரை உபசரித்து பின்னரேதான் உண்பான் விளைநிலம், மிகுந்த பலன்தரும் என்பதுமட்டிலன்று; விருந்தோம்புவான் விளைநிலம், மிகுந்த புண்ணியபலத்தால், தழை, சாப்பல் முதலிய எருப்போடாமல் விளையுமென்றும் கூறுது, விருந்தோம்பி மிச்சத்தை உண்போனது விளைநிலத்தில், விதையும் விதைக்கவேண்டுமோ? என்ற கருத்துப்பட "வித்துமிடவேண்டுங் கொல்லோ விருந்தோம்பி—மிச்சில் மிசைவான்புலம்" என்பர் திருவள்ளுவர்.

தான் வேண்டியதற்கிணங்கி மான்பிடிக்கச் சென்ற ஸ்ரீராமன், அரக்கரால் ஏதோ கேடுற்ருன் என்றஞ்சி நடுங்கிப் பதைத்துப் பலகூறி இலக்குமணனைச் சென்றுதவ ஏவிய ஜானகி பிராட்டியார், தனித்துத் தன் ஆச்சிரமத்திலிருக்க, துறவி வேடந்தாங்கி இராவணன் ஆச்சிரமவாயிலடைந்தான்; தன் கணவன் உயிரோடிருப்பதில் ஐயமேற்பட்டு, வருந்தித் தனித்திருக்கும் நிலையில் ஜானகி உண்மையறியாது, இராவணனைத் துறவியென்றே கருதி, ஆச்சிரமத்துள்ளழைத்தும் உபசரித்தாள் என்றுல், விருந்தோம்பல் மிகச் சிறப்புடைய கடமை என்பதையும், எந்நிலையிலும் மறக்கற்பாலதன்று என்பதையும் நன்கறியலாகும்.

உலகில் மாந்தர்களுக்கு வேண்டுவன பல. அவற்றையெல்லாம் அளித்தல் கற்பகதருவுக்குப் அரிதேயாகும். மனிதர்களுக்கேயன்றி எண்ணிறந்த ஜீவராசிகளுக்கும் அவசியமாக வேண்டியிருப்பது உணவாகும். ஞானிகளும் யோகிகளும் கூட சில வேளைகளிலாவது உண்டியை நாடாதிருப்ப

தில்லை. சர்வ பரிபூரண அகண்ட தத்துவமான சச்சிதா னந்த சிவத்தைச் சிந்தைநைந்து தொழுது வேண்டிய தாயு மானவரும், "கனல்வாதை வந்தெய்தின், கனியேனும் வறிய செங்காயேனும் முதிர்சருகு கந்த மூலங்களேனும் அள்ளிப்புசித்து, அதன் பின்னரே, "கண்மூடி மௌனியாகிச் சும்மாயிருப்பதற்கு எண்ணினேன்" என்று கூறுவாராயினர். இக்கனல்வாதை வந்தெய்திய மாத்திரத்தில், மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை தானம் தவம் முயற்சி தாளாண்மை முதலிய எவையும் பறந்துபோமென்பது, நம் மிற் பலரும் அனுபவத்திற் கண்டிருக்கக்கூடிய உண்மையே. தன் வயிற்றை நோக்கி, "உன்னோடு வாழ்தல்அரிது" என்ற ஔவையார் ஒரு நாளுணவை ஒழிக்கமாட்டாமையா லன்றோ! ஒருவர்பால் சேவிப்பதும் சென்றிரப்பதும் கடல் கடந்து மீள்வதும் சிறியரையும் பெரியராகப் பாவிப்பதும் அவர்மேல் பாடிப்புகழ்வதும் பாரை ஆள்வதும் வயிற்றின் கொடுமையாலென்றே அம் மூதாட்டியார், தானே பரம யோகியாகவும் ஞானியாகவும் இருந்துங் கூறுவாரென்னில், உண்டியை அவசியமாக நாடாதவர் எவர் என்று பேச இய லும். மாந்தர்கள், பெருங்கலாம் விளைத்து அரும்பாடுபடுவ தெல்லாம் யோசிக்குங் வேளையில், உண்பதே முக்கிய கருத் தாகக் கொண்டது என்னில், இத்துணை அவசியமாகிய உண்டியை அனைத்துயிர்க்கும் ஈயவேண்டு மென்பதையும், அதுவே தலையாய தருமமாமென்பதையும் எப்படி மறுக்க முடியும். மலையினது சிகரத்திற் பெய்யும்மழை அருவிகளா கப் பலவாய், பெரிய ஆறாக வெள்ளமெடுத்துப் பாய்ந்து, பல்வேறு நாட்டுமக்களும் பயன் பெறுமாறு எங்ஙனம் செய் கின்றதோ, அங்ஙனமே சற்பாத்திரங்களிற் செய்யும் அன்ன தானமும், மிகப்பலவாய்ப் பயனளிக்காமற் போவதில்லை. இவ்வுண்மையை அறிந்தே பரஞ்சோதியாரும், இவரினும்

சிறந்தோர் இல்லையென்றே சிவனடியார்க்கு உண்டியளித்து, பின்னரே தானுண்ணும் விரத மேற்கொண்டு ஒழுகுவாராயினர்.

இரணியன் என்பான் ஓர் அசுரர்கட் கிறைவன், நான்முகன் தந்த வரத்தால் எவற்றானும் இறப்பிலனாயினன். தனது தம்பியைத் திருநெடுமால் உயிர் கவர்ந்தார் என்ற காரணத்தால், இத்தானவன் அவ்வைகுந்த நாதனைத் தொலைக்கவே வேண்டுமென்று, தன் இனத்தவர் பலருடன் கூடி யோசித்து முடிவாக ஏவலாளர்க்கோர் உத்திரவு செய்திருந்தான். அசுரர் எனப் படுவோர் அனைவருமே இக் கட்டளையைத் தம்மால் இயன்றமட்டில் நிறைவேற்றவும் வேண்டுமென்பதே இரணியன் கருத்து. "உலகில் மாயவனை ஒழிப்பது ஓர் எளிய செயலன்று. அம்மாயவன், தானே வேள்வியாய், வேள்விக்கு வேண்டும் சாதனங்களாய், வேள்வி செய்பவனாய், ஏற்பவனாய், வேள்வியின் பயனாய்த் திகழ்வோனாதலால், அடியார் திருவுள்ளத்தில் குடிகொண்டு பூசனை ஏற்றுப் புகழ்ந்து வணங்கிப் போற்றப்படுவோனாதலாலும், நீங்கள் வீணே தேடி அலைந்து திரிவதைவிட்டு வேள்விகளை அழித்து, பக்தகோடிகளை வருத்தினாலே அம்மாயவனை ஒழித்ததாகும்; இவ்வுண்மையை அறிந்து ஒழுகுவீராக" என்பதே அவனது கட்டளை.

அளவிலா ஆற்றல் படைத்த ஒப்பற்ற மூர்த்தியின் திருவுருவத்தை உலகமுழுவதும், அதற்கப்பாலும், ஐம்பெரும் பூதமும், இரவியும் இந்துவும், எண்ணிறந்த உயிர்களும் என்றால், நாம் என்னவென்று பாவித்துக்கொள்ள முடியும். நமது ஆற்றலறிந்து, கருணைமேலிட்டு, உய்யும் வழிகாட்ட, ஈசன் தன்னடியார் திருவுருவந்தாங்கியே உலகத்துலாவுவன் என்று, அறிவறிந்த ஞானிகள் கொண்டாடுவார்கள். இரும்

புண்ட நீரெனவே இறைவன் திருவடிக்கண் என்றும் சார்ந்த உள்ளத்தினராய், தங்கள் திரு உருவமே ஈசர்க்கோர் ஆலய மாகக் காட்டும் அவ்வடியார் திறத்தொன்று ஈயப்படுமேல், அதுவே இறைவர்க் களித்தாகுமென்றும், இவ்வடியாரை வேருகவும் ஈசனை வேருகவும் காண இயலாதாகுமென்றும் நூற்கள் கூறும்.

தில்லைச் சிதம்பரத்துச்சீரார் வீதிகளினிடையே ஒரு செல்வப்பெருஞ் சீமான் உண்டு. இவர் தம் பெருஞ் செல்வத்திற் கேற்பப் புலமையுமுள்ளவர். இவரால் ஆதரிக்கப் பட்ட பல்லோர், என்றும் கூடிக்குழுமிக் கைகட்டிக் காத்திருப்பர். இவரைக் கருணைக்கடல் என்றும், உதாரசீல ரென்றும் உலகு நன்கறியும். இவர் தனது அன்புக்குரிய மகனொருவனின் இன்பமுகங் காண்பதன்றி, வேறுதானடையத் தகுமின்பம் யாண்டுமிலதென்றே கருதியிருந்தார். இவரது உதவியைநாடி, தமது கையிற் கிடைத்த சில பழ வகைகளைத் தட்டிலேந்தி, இருவர் முன்பின்னுகச் சென்றனர். பிரபுவின் மாளிகையடைந்து முன்னே சென்றவர், மேன்மாடியிலிருந்த பிரபுவைக்காண மாடிப்படிகளேறினர். அங்கு எதிர்ப்பட்ட சீமானின் இளஞ்சிறுவன், மாடிப்படியடியில் கால்தவறிக் கீழேவிழுந்து அழவும் தொடங்கினன். முதலில் வந்தவர் சிறுவனைப் பொருட்படுத்தாது செல்லவும், பின் வந்தவர் சிறுவனை எடுத்து முகந்துடைத்து, கையிலிருந்த பழங்களிலிரண்டொன்று கொடுத்து சமாதானப் படுத்தி யனுப்பினர். தன் மகன் அழுகுரல் கேட்டு தந்தையாம் பிரபு வெளிவந்து நோக்கவும், தான் பெற்ற கனி கொண்டு தந்தையை அண்டி இன்முகங்காட்டி, அக்கனி உதவிய அன்புடையோனையும் சிறுவன் சுட்டிக்காட்ட, பிரபு, பின் வந்தவரை மகிழ்ந்து வரவேற்று வேண்டிய உதவியும் செய்ய உடன்பட்டார். கபடமறியாச் சிறுவன், முதலாக

வந்தவர் கையிற்கண்ட கனிக்கு விரைந்தோடக் கால்தவறிய தென்றும், தன்னைப் பார்க்காதவர் போலவே அவர் விரைந்து வந்துவிட்டதாகவும் ஓர் சிறு குறை கூறினன். தன் முன் பாக முதலில் விரைந்துவந்தவர் கொண்டுவந்து வைத்திருந்த பழங்களைத் திரும்பக்கொடுத்து, "ஐயா! குழந்தைக்கு உதவாத பழம், பெரியவர்களுக்கு எதற்கு?" என்று அச் சீமான் கூறவும் முன்வந்தவர் மனமின்றியும் வறிதேமீண்டார். இத் தந்தைக்கும் மகற்குமுள்ள அன்பே அடியார்களுக்கும் ஆண்டவனுக்கும் உண்டு. கடவுளினடியார்களை அலக்ஷியம் செய்து, கடவுளுக்கு ஆற்றும் பூசனை யனைத்தும் அவமே யாகும். இதுகொண்டே "படமாடக் கோயிற் பாமற் கொன்றீயி—னடமாடுங் கோயினம்பற் கங்காகா—நடமாடுங் கோயினம்பற் கொன்றீயிற்—படமாடுங் கோயிற் பரமற் கங்காமே" என்று கூறப்படும்.

---

## 9. மகப்பேறு.

அடியார் தம் பெருமையையோ, அவர்களை விருந்தின ராகக் கொண்டு உபசரிப்பதின் சிறப்பையோ, ஒரு சிறிதா வது கூறிவிட்டதாகக் கருதி நாம் மேற்செல்ல முடியாது. தான் கொண்ட நோன்பில் சிறிதும் தாழாத இப்பெருந் தொண்டர், சிவனடியார் சந்நிதானத்தில் சாஷ்டாங்கமாக வணங்கி, இவர் தம் பெருமைக்கு நாம் எற்றே என மன மேங்கி, அடியார்தமைக் காணக்கிடைத்த பாக்கியத்தாலுண் டான ஆனந்தக் கண்ணீர் பெருக, தாம் மிகச் சிறியரென் றெண்ணி நடக்கும் இயல்பினல், சிறுத்தோண்டர் என்றும் அழைக்கப் படுவோராயினர்.

பரஞ்சோதியார் இல்லறம் புரிந்த சிறப்பினாலும், அடியார்களைக் கண்டு ஆனந்தமேலிட்டு உபசரித்ததனாலும் அடைந்த பலன் முற்றிலும், அவருடையதே என்று கருத இடமில்லை. இவர் தமக் கன்புடையராய், கொழுநன் வழிபட்டு, வேண்டிய வேண்டியாங் கியற்றிவந்த வெண்காட்டு நங்கை என்னும் சிறுத்தொண்டரின் மனைவியின் குணவிசேடங்களே, இவருடைய அடியார் பூஜையை சிறப்புறச் செய்தது என்னல் மிகையாது. பெயர் மாத்திரத்தால் பெண்கள் என்றும், குணத்தாலும் செயலாலும் தாடகை சூர்ப்பனகை போன்றவர்களுடன் இல்லறம் நடத்தவேண்டு மென வற்புறுத்தப்படுமேல், அவ்வில்வாழ்க்கையினும் நரகம் ஒரு சிறிதும் கொடுமையுடையதாகாது. பர்த்தாவுக்கேற்ற பதிவிருதை உண்டானால் மட்டில் இல்லறம் சிறப்புடையதாகப் பெறுமேயன்றி, மாறுபட்ட நோக்கமிருப்பின், அக்கணமே துறவுபூண்டொழிதல் தக்கதாகவே பெரியோர் கூறியுள்ளார்.

பரஞ்சோதியாரின் திருமனைக்குரியாள், மாசிலாக் குலத்துவந்த பேசுநிண் கற்புவாய்ந்த பெரியாள். கொண்ட கணவன் நினைப்பறிந்தொழுகும் நீர்மையும், பெற்றதே கொண்டுவக்குமுள்ளமும், வருவிருந்தவப்ப வூட்டும் நேசமும் மிக்குடையவள். இப்பெருங் குணமுடையாளோடு, கருமஞ் சிதையாமல், கல்வி கெடாமல், தருமந் தாழ்வு படாமல், பெரிதும் தம் இன்னலமுங் குன்றாமல், அருந்தொண்டராகிய பரஞ்சோதியார், இல்லறம் எளிதே நடத்தியது எளிதென்றே கருதலாம். சின்னாளில் ஈசன் திருவருளால், புத்தென்னும் நரகத்தினின்றும் நீங்கினார் சிறுத்தொண்டரென்று உலகறிவிப்பான்போல், அற்ப சுகத்தை நினையாது, அரன்திருவடிக்கே அன்பு பூண்டோராகிய, அடியார் தம் திருவாய் மலர்ந்து பேரருள் விழைந்திரங்கி

அழைக்கும் இன்னிசைபோலும், அழுகுரல் காட்டி ஓர் அருமைத் திருக்குமரன் உதயமாயினன்.

கற்றுத்துறைபோய காதலர்க்குக் கற்பினள் பெற்றுக் கொடுத்த தலைமகன் சீர்காண, உற்றோரும் மற்றோரும் திரண்டு வருவாராயினர். பரஞ்சோதியாரில்லமும், அருட் பெருஞ்சோதியாராலயமும் ஒருங்கே அலங்கரித்து, வேத கோஷமும், மங்கள முழக்கமுமாக வானம் நிரம்ப, அச் செங்காட்டங் குடியெங்கும் களிமலிந்து பெருவிழாக் கொண்டாடினார்கள். தம் குலமுறைக்கேற்பப் பொருந்திய நன்னாளில், சிறுத்தொண்டரின் சீராள வந்த செல்வச் சிறு மகற்கு, சீராள தேவரெனத் திருநாமமிட்டு, காப்பிட்டு மையிட்டுப் பொட்டுமிட்டுப் பொற்புறப்போற்றிப் பெருமகிழ் பூத்தனர். சுருண்டை மயிரும், நெற்றியிற் சுட்டி கையும், காதிற் குதம்பையும், கண்டத்து நாணும், மார்பிலைம்படையும், கைகளிற்சரியும், பொன்னரைநாணும் காலிற் கிண்கிணியுந் தண்டையும் பூண்டு வளர்ந்து, பெற்றோரைப் புகழ்வித்து மற்றோரை மகிழ்வித்து, வளர்ந்துவந்த மைந்தன்தன் மழலை கேட்ட பரஞ்சோதியார், தன்னருப்பெறன்மகற்குச் சௌளம் முதலிய மங்கலவினைகள் செய்வித்து அருங்கலை பயிலப் பள்ளியிலிருத்தினர்.

இப்பால், உமாதேவியார் உள்ளங்கனிந்து பொற் கிண்ணத்தளித்த சிவஞானப் பாலுண்ட பெருமையால், திருஞான சம்பந்தராகிய பிள்ளைப்பெரு ஞானியார், சிவ ஸ்தலங்களை தரிசனஞ்செய்துகொண்டு சமீபத்தில் வந்திருக்க, சிறுத்தொண்டர் பெருமாய் மகிழ்ந்து விரைந்து சென்று, செங்காட்டங்குடிக்கு அழைத்துவந்து, தனதில்லத்தே சில நாள் தங்க உபசரித்து வழிபட்டு வருவாராயினர். இவ் வேண்டுகோளுக் கிசைந்துவந்து உடனிருந்த சம்பந்தர்,

கணபதீச்சுரத்தில் சிவபெருமானை வணங்கி, சிறுத்தொண்டரின் அடியார் பக்தியையும் வியந்துபாடி விடைபெற்றுத் திருமருகல் நோக்கிச் சென்றருளினார்.

---

## 10. பைரவர் தோன்றுதல்.

திருநீலகண்டரான சிவபெருமான் நாள்தோறும் வளர்ந்த பக்திமேலிட்டு, சிவனடியார்களை தூரத்திற்கண்ட மாத்திரத்திலேயே, தாய்கண்ட கன்றெனவே எதிர்கொண்டு அடிவணங்கி, அகமலர்ச்சியும் முகமலர்ச்சியும் காட்டி, இன்சொற்கூறி இல்லமழைத்துவந்து, திருவடிகளை விளக்கி, அப்புனித நீரைச் சிரமேற்றெளித்து, உள்ளும்பருகி, அவர் தம் திருவடிகளை மெல்லிய வஸ்திரத்தாற் றுடைத்து, ஆசனத்திருத்தி, பூசித்து, தீபதூபங்காட்டி, அறுசுவையுண்டி, அன்புடனருத்தி, உபசாரவார்த்தைகள் பலவற்றைக்கூறி, அவர்கள் மீளுங்கால் தானும் உடன்சென்று வழியனுப்பும் சிறுத்தொண்டரின் சிரத்தையையும், பக்தியையும் உலகறியச் செய்ய எண்ணினார்.

கைலாசபதியான பகவான், பற்பல காலத்திற் பற்பல வாறு தோன்றுவர். தேவர்களிற் செருக்குக் கொண்டோரையும் கடவுளரை நிந்திப்போரையும் கண்டிப்பதே கருத்தாக எடுத்த ஒரு திருவுருவத்தை, டைரவ மூர்த்தி என்பார்கள். இம்மூர்த்திக்கு வேதமே நாயாக உருவெடுத்து வாகனமாயிற்றென்பார். இத்திருவுருவங்கொண்டே அந்தகாசுரனைக் கொன்றதாகவும் நூற்கள் கூறும். தாருகாசுரனைக் கொன்றபோது ஈஸ்வரனுக்கிருந்த கோபத்தினின்றே இக்கோலம் உருக்கொண்டதாகவும், இம் மூர்த்திக்கு பெருமை

(உடுக்கை) வெற்றியைத்தரும் முக்கிய சின்னமாகவும் கருது வர். ப, ர, வ என்ற அக்ஷரங்கள் முறையே படைத்தல், காத்தல், அழித்தல் எனும் முத்தொழிலைக் குறிப்பதாகவும், பைரவமூர்த்தியே முத்தொழில் நடாத்தும் கடவுளாகவும் போற்றி வணங்குவர். இம் மூர்த்தியே கடவுளெனக் கொண்டு வந்தனை வழிபாடியற்றுவோரை, பைரவமதத்தினர் என்று கூறுவார்கள். பைரவமதத்தினர், அதிதீவிர சிவ பக்தியுள்ளவர்கள் என்றும் புகழ்படுவார்கள்.

சிறுத்தொண்டர், அடியார்களை ஆராதிக்கும்போது எங்ஙனம் தன்னையும் மறந்தவராய், உபசரிக்கும் அடியார்கள் வேண்டியதைச் செய்யும் பேரன்புடையாராய்த் திகழ்வாரென் பதை, பக்தகோடிகளுக்கு அறிவிப்பான் கருதிய சங்கரர், கலையும் கங்கையும் நீக்கி, உமையின் திருவுருவைத் தன் னுள்ளடக்கி, வெண்பிறையும் மானும் மழுவும் திரிசூலமு மின்றி, நெற்றிக்கண் மறைத்து, நீலகண்டத்தை ஒளித்து, கரியுரி களைந்து, வெள்ளேறுவிடுத்து, கால்மண்தோய, ஓர் பைரவ வடிவங்கொண்டோராய் நிலமிசை நடப்பராயினர். நீண்டு இருண்டு பருத்துச்சுருண்டு, செறிந்த ஜடாபாரத்தை முன்னூற்றேன்ற வகிர்ந்துகட்டி, நீலமேகத்திற்பூத்த விண் மீன்கள் பலவும் போல் தும்பைவெண்பூச் சிதறித் தோன்ற பிறைச் சந்திரனைப் பூரணனுக்கிச் சிறிதாக்கிய தொப்பதோர் திருநீற்றுப் பொட்டுத் திருநுதலிடையே திகழ்ந்துவிளங்க, சூரியனும் சந்திரனும் போலும் மண்டலித்த குழைகளிரண்டு திருச்செவிக் கணிந்து, அவையிடையே செவ்வலரிப்பூச் சொருகி, அமுதத்தைச் சிறிதளவாய்த் திரட்டித் துளைத்து, ஒன்றுசேர்த்துக் கோத்ததுபோலும் களங்கம் மறைக்குங் கண்டத்து வெண்பளிக்கு வடமொன்று கட்டிக்கொண்டு, செவ்வானத்தின் செவ்விகாண முற்றிலும் போர்த்த மேற் சட்டை தாங்கி, ருத்ராக்ஷ மணிமாலை சிரத்திலும் மார்பிலும்

தோளிலும் காதிலும் இடையிலுமாக எங்கும் விளங்க, தன் திருத்தொண்டர்க் கருள்புரிவான் புவிவரும் பொருட்டிறங்கண்டு போற்றுவீரென்று, அருமறையே அறைவதெனச் சிலம்பு சேர்த்து, இடதுகையிற் சூலமும், வலது கையில் தமருகமுங்கொண்டு, புன்முறுவல்காட்டுந் திருமுகத்தோடு, தான் செய்த தவப்பயனோ என்று பூதேவி புகழ்ந்து கொண்டாட, நித்யனாய், நிர்மலனாய், சர்வமங்கள காரணனாய்த் திகழும் சந்த்ரமௌலி, தான் திருவுளங்கொண்ட விளையாட்டிற்கேற்ற வேடங்காட்டிச் செங்காட்டங்குடி நாடித் தேடி வருவாராயினர்.

பூத்துக் காய்த்துப் பழுத்தமரம் நாடிச் செல்லும் பறவைபோல், வள்ளல்களைத் துருவித் தேடிவரும் கவிவாணர் போல், செங்காட்டங்குடி வீதியில் கண்டோரைத் தான் வினவி, நீங்காப் பெரும்பசியுடையார்போலும் பைரவமூர்த்தி "தொண்டனார் தமக்கு எந்நாளும் விருந்தளிக்கும் திருத்தொண்டர் இல்லத்திலுள்ளாரோ" என்று மறையொலிபோலும் திருவாய் மலர்ந்து, சிறுத்தொண்டரது இல்லத்தைக் கடிதடைந்து கேட்டருளினார். சிறுத்தொண்டரது இல்லத்துத் தாதியாகிய சந்தனவதி, (சந்தனத்தார்-சந்தன நங்கை). பைரவ மூர்த்தியின் குரல்கேட்டு வெளிவந்து நோக்கி, "பெருந்தவசியே இவர்" என்று மனத்திற் கொண்ட, பக்தியோடும் பயத்தோடும் வணங்கி, "சுவாமி! அந்தமில்சீர் அடியார்தமைத் தேடியன்றோ புறத்தே சென்றார்; விரைவில் மீள்வார்; தேவரீர் அகத்தினுள் எழுந்தருள்க" என்று பிரார்த்தித்தாள்.

பாண்டவரின் மூத்தவரும், தருமமும் கருணையுமே ஓருருக்கொண்டதாகவும் கருதப்படும் தருமபுத்திரர், மண்ணுலகை நீங்கிச் செல்கையில், தன்னுடன் வேறு கவனிப்

பாரின்றி வந்த நாய்க்கு முதலில் நல்லுல களிக்கவேண்டுமென்று கூறுவதுண்டு. 'நல்லூர்ப் பெருமணம்' என்னும் திருப்பதியில், திருஞானசம்பந்தர், தன்னடியார் பலரையுமன்றே தனக்கு முன்னதாகவே சோதியிற் கலக்குமாறு அருள் செய்தார். ஈசனடியார்க்கடியார் பெருமையை வெளிப்படுத்துவதுபோலும், சிறுத்தொண்டர் இல்லத்துத் தாதியாகிய சந்தனவதிக்கே முதல்முதலில் பைரவ வடிவங் கொண்ட பகவானின் தரிசனம் கிடைத்ததென்பது கருதற்பாலது. ஒரு பிரபுவை அண்டி, அவர் ஆணைவழிப்பட்டு நிற்போர், அப்பிரபுவின் குணத்தில் ஒரு சிறிது பெறுவதும் இயல்பே.

சந்தவைதியார் மிக்கவணக்கத்தோடு உபசரிக்க, "மாதரார் தாமிருந்த இடவகையிற் றனிபுகுதோம்" என்று பைரவமூர்த்தி விடையளித்தருளினார். பெரியோர்களாயினும், தமதின்மையாற் பிறரிடம் உபகாரம் நாடிச் செல்வோரும், ஐயமேற் றுண்ணுபவரும், ஆடவர் கண்ணிற் படாத இல்லங்களில் அடும் இடம் வரையிற் செல்வது தகாதென்பது ஓர் சிறந்த நீதியாகும். சிறிதுகாலம் பிக்ஷையேற்பாராயிருந்த பட்டினத்தார் " இருக்குமிடந்தேடி யென்பசிக்கே யன்னம் விருப்பமொடு தந்தால் உண்பேன் " என்றும், வீதிவாய்ச் செல்கையில், " வாசற்படிகடந்து வாராத பிச்சைக்கிங் காசைப்படுவதில்லை " என்றும் கூறுவாராயினர்.

பைரவமூர்த்தி யளித்த விடையினின்றும், " அவர் ஒருக்கால் நீங்கிவிடுவரோ " என்ற ஐயமேற்பட்டவளாய், உள்ளிருந்த வெண்காட்டு நங்கை வெருவி, விரைந்து வெளி வந்து வணங்கி, " அடிகாள் ! இன்று சிவனடியார் தமைக் காணப் பெறுதவராய், அவர்களை எவ்விடத்தாவது நாடிப் பெறும் பொருட்டே வெளியே சென்றுள்ளார் ; என்றும்

வாராத தங்கள் வரவை யறிந்தால் பெரும் பேறென்றே கருதுவார்; இனித்தாழார்; விரைவின் வந்துவிடுவார்; தாங்கள் அகத்தே எழுந்தருளல் வேண்டும்" என்று மீண்டும் உபசரித்தாள். இம்மை, மறுமைப் பயனளிப்போராக அன்பர் கருதித்துதிக்கும், வைரவ வேடங்கொண்ட மகேஸ்வரர், "ஒப்பில் மனையறம்புரப்பீர்! யாம் உத்தரதேசத்துள்ளோம்; சிறுத்தொண்டரைக் காணவந்தோம்; அவரிடம், நாம் கணபதீச்சுரத்தில் திருவாத்திமரத்தின் கீழிருப்பதாக அறிவியுங்கள்; அவரின்றி, எப்பரிசும் யாம் ஈண்டு இரோம்" என்று, முன் கல்லாலமலர்ந்த கண்ணுதற் பெருமான், திருவாத்தி நிழலமர்வான் கணபதீச்சுரம் நோக்கி எடுத்தடி வைத்தனர்.

---

## 11. விருந்துகண்டு உவத்தல்.

நகரெங்கும் நாடியும் ஈஸ்வர மாயையினுல் சிவனடியார் எவரையும் காண இயலாமைக்கு மிக நொந்துகொண்டு, சிறுத்தொண்டர் தமதில்லமடைந்து, மனையாளோடு உற்ற கவலையை உரைக்கவும், வெண்காட்டு நங்கையார், அங்கு பார் ஆதரிக்கும் திருவேடத்தொருவர் வந்து மீண்ட பரிசுரைத்து மகிழ்வித்தாள். அன்று பூசைக்குச் சிவனடியார் அகப்பட்டனர் என்ற செய்திகேட்டு, பரஞ்சோதியாரடைந்த ஆனந்தத்திற்கோர் அளவுகூறல் அரிதினும் அரிது.

சிவபக்தியிற் சிறந்த ஒருவர், தன் மகளை வேதவித்தாகிய ஒரு பிராமணருக்குத் திருமணம் செய்துகொடுத்தார். விஷ்ணுபக்தியிற் சிறந்த அப்பிராமணச் சிறுவனின் பெற்ருேர், சிவபக்தராகத்துச் சிறுமியென்ற காரணத்தினுலேயே

இப்பெண்ணைப் பெரிதும் துன்புறுத்தி வந்தார்கள். நெடு நாளாகச் சிவபக்தர்களைத் தரிசிக்கவும் உபசரிக்கவும் பாக்கி யம் பெறாத இப் பெண்மணியின் புண்ணியவசத்தால், மனைக் குரியார் அனைவரும் ஒருநாள் வேற்றூர் சென்றிருந்தனர். அன்றே நன்னாளாகக்கருதி, ஒரு சிவபக்தரையாவது இன்று கண்டு பூசிப்போம் என்று மகிழ்ந்திருந்த அப்பெண், வெளி யேவந்து நோக்குவதும், சிவபக்தரைக் காணாது வருந்துவது மாகிய பேராவலோடு எதிர்பார்க்கு நிலையைப் பரஞ்சோதி முனிவர் "* * மனையில் வாழும்—பெண்மாசு கழிய வொரு சிவனடியார்தமைக் காணப் பெறுமலின்றென்—கண்மாசு படுவதெனக்கனிந் தொழுகு தலையன்பாற் கவலை கூர்வாள்" என்று திருவிளையாடற் புராணத்தில் விளக்கியுள்ளார்.

அரக்கியர் கூட்டத்துகப்பட்டு வேட்டைநாய் களி டைப்பட்ட மிருகம் (மான்) போல், ஜானகி பலவாறு இராமனை நினைந்து வருந்திப்புலம்பி, முடிவாக உயிர் மாய்த் துக்கொள்ளவே தீர்மானித்தாள்; இப்பால் ஸ்ரீராமதூதனாக ஜானகியை நாடி இலங்கை முற்றிலும் தேடி யலைந்த அநு மான் சீதையைக்கண்டு, ஸ்ரீராமனது ஆணைப்படி கூறத்தக்க பலவுங்கூறி சமாதானப்படுத்தி, ஸ்ரீராமசந்திரனின் கணை யாழியை ஜானகியிடம் கொடுத்துதவினார். வைதேகியின் பெருமகிழ்ச்சியைக் கூறுவான்றுணிந்த கவிச்சக்கிரவர்த்தி கம்பநாட்டாழ்வார், பெரும்பசியா லிடர்ப்பட்டு நலிவோர், அமிர்தம்போல் கிடைக்க அரிதாயுள்ள அறுசுவையுண்டி யருந்தப் பெற்றோர் போன்றும், செவ்வனே இல்லறம் நடாத்தும் சிரத்தை யுடையோர் அரிதிற்பெற்ற அதிதி போன்றும், அவ்வாழி இன்பம் மிகுப்பதாயிற்று என்னும் கருத்துப்பட "இருந்து பசியாலிடர் உழந்தவர்களெய்தும்—அருந்து மமுதாகிய தறத்தவரை யண்மும்—விருந்துமெனலாகியது * *" என்று விளக்குவாராயினர்.

இத்துணை ஆனந்த மடைந்தோராகிய தொண்டர், அன்றே பிறப்பின் பயன்பெற்றதாகக் கருதி, அவ்வடியார் தாமும் எங்குற்றாரென்று தன் மனைவியை வினவினர். கற்பருங் கலனாகிய இல்வினுக்குரியாள் “அற்புதத் திருவுருவந் தாங்கி, கரத்திற்கபாலமும் சூலமும் ஏந்தி, தமருகங்கொண்டு தோன்றிய அவ்வடியார் உக்கிரதேசத்தினர்; பைரவத் திருவேடந் தாங்கியிருந்த அவர், அடியேம் பலபடி வேண்டவும் ஈண்டிருக்க உடன்படாதவராய் ‘கணபதீச்சுரத்தில் திருவாத்தி நிழலில் இருப்பேம்’ எனவே கூறியகன்றார்” என்று கொழுநரைத் தூண்டியனுப்புவது போலும் விடையளித்தாள். தன் திருத்தொண்டினுக்கு அன்றும் ஓர் அடியார் அகப்பட்ட களிப்பிலாழ்ந்த தொண்டர், அரிப்பிரமேந்திராதியர்க் கரியவரும், தனதடியார் அன்புக்கு எளியவருமாகிய வைரவமூர்த்தியைத்தேடி, எவ்வாற்றானும் அழைத்து வரும் துணிவும், ஒருக்கால் வேறெங்கும் சென்று, இத்துணை காலம் தாழாது நீங்கி யிருப்பரோ என்ற ஐயமும் மேற்கொண்டு, வீதிவாய் விரைந்து செல்லும்போதே, பலபடித்தாக அடியார் பெருமையை நியாணிக்கலாயினர். “பைரவமூர்த்தியைத் திருவாத்தி நிழலிற்றரிசித்து எளியேன் சிறுகுடிலுக்கு அழைத்தே மீளவேண்டும். எம்பெருமான் அடியார் பசித்துவரும் அவ்வேளை அயலே சென்றிருந்த என் மதிதான் என்னே! அனிச்சம் மோப்பக் குழையுமென்றும், அதிதிகள் முகந்திரிந்து நோக்கவேயுங் குழைவரென்றும் கூறுவர். பைரவர் தாமும் ஏதேனும் அபசாரங்கண்டு மீண்டிருப்பரோ! எம்பெருமான்! நுங்கள் அடியார்களுக்கு, இன்றுவரையில் முக்கரணங்களாலும் உவந்ததே செய்ததன்றி, பிறிதொன்றுற்றவும் எளியேன் அறியேன். என்னே பேதமை! நீலகண்டனடியார்க்கு நிலத்துவாழ் மக்கள் எத்துணை? நஞ்சமுதாகக்கொண்ட எங்கள் நாதனடியார் சிறு

பிழையும் மனங்கொள்வரோ ? திருவுளங்கொண்ட தெனைத் தேனும் இயற்றுவான் வைரமூர்த்தியைக்கண்டு வணங்கி வேண்டுவ புரிந்து, என் வெவ்வினையும் தீர்வல்" என்று கூறிக்கொண்டோராய்ப் பலவிடத்தும் நாடுவாராயினர்.

பாண்டவ மத்திமனாகிய பார்த்தன், கண்ணனிடத்துப் பெரிதும் பக்தியுடையவன். ஊணும் உறக்கமும் உற்றது சொல்வதும், கூடியாடுவதும், அக் கோவிந்தனுடனே என் பது குவலயம் நன்கறியும். ஒருநாள் கண்ணன் குறித்த காலத்து வாராமை கண்டு காண்டீபன் காரணம் வினவினான் ; "பார்த்த ! இன்று சுபதினம் ; பூஜை நெடுநேரமாயிற்று" என்று அம்மாயோன் விடையிறுத்தார். "சர்வலோக சரண்யனை வாசுதேவன் என்று உலகறியும் உனக்கும் அன்புடைய பூஜையாது ? எவரேனினது ஆராதனைக் குரி யார் ?" என்று ஆச்சரியத்தோடு விசயன்மீண்டும் வினவி னான். "அருச்சுன ! அன்புடையார் மிகச் சிலரேயன்றி என் பூஜை இன்னது என்று பலர் அறியார் ; எப்படியிருப்பி னும், உனக்கு அதை தரிசிக்கும் நோக்கமும் பாக்கியமு மிருப்பின், பரம சுத்தனாய் பயபக்தியோடு மாளிகைக்கு வரின் காண்பாய்" என்று கேசவன் கூறினான். பூஜ்யனை கண்ணனின் பூஜையைக்காணும் ஆவல்மேலிட்டு உடன் சென்ற விசயனை, திருமாளிகையின் உள்ளேவந்த அளவில் "காண்டீப ! மேலாடை ஒதுக்கி, வாய் பொத்தி, மெல்லடி யிட்டு வருக" என்று எச்சரித்து, முற்றிலும் பொற்கலன் களாய், அகத்தேயிட்ட நெய்விளக்குகளின் ஒளியும் குன்ற இரத்தினமயமாய் 'சூரியனை உள்ளடைத்திட்டனரோ, மாமா யன் !' என்று வியக்கும் வண்ணம், எழில்மிக்கு விளங்கும் பூஜாக்கிரஹத்தின் அலங்காரமும், சாதனங்களின் எழிலும், கண்கவர் வனப்பினவாயினும், அம் மாதவன் செய்யும் விமரிசைக்கேற்ற, விக்கிரஹம் யாதொன்றும் காணாதவனாய்

தனஞ்சயன்வேண்ட, மாணிக்க இரத்தினங்கள் மண்டிச் செறிந்ததும், உயர்ந்த பீதாம்பரத்தால் மூடப்பட்டதுமான ஓர் சம்புடத்தை விசயன் நோக்குமாறு மெல்லெனக் கையி லெடுத்து, சிரமேற்றாங்கி, கண்களிலொத்திக்கொண்டு, பீடத் தின்மேல் வைத்து, "பற்குன! இஃதே எளியேன் பூஜிப் பது" என்றார் பத்மநாபன். இனியும் பொறுத்திருக்க இய லாதவனாய்க் கிரீடி, "மணிவண்ண! மூர்த்தியாதென்று விளங்கவில்லை. அடியேன் ஆவலைப் பெருக்காது விரைவிற் றெறியுமாறு எடுத்துக்காட்டுக" என்னப் பணிவுடன் வேண்டி நின்றான். கோபாலன் குறிப்பறிந்த பணியாளர் பலரும், மூவுலகு மொலிபடப் பல்லியமுழக்க, அருகிலிருந்த உருக்குமணி தேவியார் ஆயிரத்தெட்டிலைகளோடிய தீபாரா தனைத் தட்டேந்திச் சித்தமாய்க் காத்திருக்க, திருநெடுமால், மோனம்பூண்டு, தியானித்து, கண்திறந்து, தீபாராதனை செய்து, கண்களிலொற்றிக்கொண்டு, பார்த்தனுக்கும் பிர சாத மருளுவதற்காகச் சம்புடத்தைச் சிறிது திறந்து உள்ளே மூர்த்தியை தரிசிக்குமாறு அருள்கூர்ந்து ஆக்ஞாபித் தார். உற்றுநோக்கிய தனஞ்சயன், மிக்க பரிமளமுடைய தாய், பஸ்மாவே சுவர்ண தாதுக்களாக ஜ்வலிக்கக் கண் டான். இதை யாதெனக் கூறுவார் கண்ணன் என்பதை கவனிப்போம். அணுவை ஆயிரங்கூறிட்டதினும் நுண்ணிய தாக பஸ்மாவை எடுத்து தனஞ்சயற்கருளி, அதனைச் சிரத் திலும் நுதலிலுமணிந்து, உள்ளும்பருகி, தூய்மை மிக்கோ ராய உடன் பிறந்தோர்க்கும் ஊர்திமேல் வைத்துச் சேம மாகக் கொண்டு போமாறு பணித்திட்டார்.

முகுந்தன், வைகுந்தநாதன், முற்றிலும் வியப்பொடு நோக்கியிருந்த முகில்வாகனன் மைந்தற்கு "அன்ப! இது தூளி; மகாபாபவிமோசனம் செய்வது; வேதத்திலுள்ளது; வெந்துயர் தீர்ப்பது; ஓதத்தகுவது; உண்மையிலுள்ளது;

எத்துணைச் சிறப்புடையதென்று வேதமும் இத்துணைகாறும் எடுத்தியம்ப அறியாதது; தேவ தேவர்களுக்கும் எளிதிற் கிடைப்ப தொன்றன்று; உன்னிலும் அன்பிற் குரியார் இன்மையை எண்ணியே, உஜ்ஜீவிக்குமாறு நினக்கு அளித்தோம்" என்று பின்னரும் உபதேசிப்பவரானார்.

" ஆராய்ச்சியின்றியே பலர், யான் உலகத்தைக் காப்பதாகக் கூறுகின்றனர். அவர்கள், இறைவன் திருவடிகளையே தியானித்து, அவரது அனந்த கல்யாண குணங்களை எண்ணி எண்ணி, அளவில் பெரும்புகழ் " * * நவின்றேத்துவார்களு முக்கிய பாததூளிபடுதலா லிவ்வுலகம் பாக்கியஞ் செய்ததே " என்ற மெய்ம்மையை உணராராவர். கருதியது கருதியவா றெய்துவதற்குக் காரணமாயிருந்துதவுவது பக்த பாததூளியென்றறிவாயாக; அதனினும் பெரிய தொன் றில்லையாதலே யான் பூசிப்பதே எண்பிக்கும்" என்று அடியார் அடிப்பொடியை, பரம சாம்பவனை பார்த்தன் பயன் பெறுமாறு புகழ்ந்து, பரந்தாமனே பூஜிப்பனென்றால், பரஞ்சோதியாரா அடியார் தமை நாடிப் பலவாறு சிந்தித்துப் போதுவாராதல் பொருந்துவதேயாகும்.

தன்னடியார் திறந்து இமவான் மகளு மேதேனுங் குறைகூறினும், எவ்னடியார் அது செய்யார்; அன்றிச் செய்தனரேல் நன்று செய்தார் என்று பரமனே கொண்டாடு மடியார்க்கு, அகிலமெல்லாம் செய்யக்கூடும் அபசாரம் யாதுண்டு. முப்புரரை முனிந்து நோக்கி எரித்ததும், காலனைக் காலால் கடிந்ததும், கட்டுச்சோறெடுத்துத் தண்ணீர்ப் பந்தலிட்டு, விறகுதூக்கி, மண்சுமந்து, பிரம்படிபட்டதும் அடியார் பொருட்டன்றோ? அமுதம் பெறக்கருதி அலைகடல் மதிக்க ஆலாலம் தோன்றவும், கோடிக்கணக்காய தேவர் குலைந்தோடிவேண்ட, குன்றியாய்ச் சுருக்கிக் கடுவிடம் மாந்

திய கருணையே பெரிதும் அடியார் திறத்து அளவிலா துள்ளாரென்னில், அவ்வீசனையே நேராக எதிர்ப்பினும் உய்யலாம்; ஈசன் திருவருள் பெற்றுயர்ந்த நேசர்க்கிடரியற்றும் புன்மதியுள்ளோர் புவனியிலிருப்பரோ? பெரிதும் பயந்த பரஞ்சோதியார், பைரவர் பசித்திருப்பின் பெரும்பிழை நேர்ந்ததாகுமென ஓடினார்; தேடினார்; உரக்க அழைத்தார்; உள்ளன்பு மிகுத்தார்; கண்ணீர் பெருக்கினார்; திருவாத்தி செல்லுங்காலும் உயர்த்துக் கூப்பியகை தாழ்த்தாதவராய், உள்ளம் ஈர்க்க உடல் தொடர, கரப்பினும் கரவாத்தேசுடன் பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்த மயமான பரமன் பைரவரின், அருமைத் திருவுருவை அன்பினாற் கண்டுகொண்டார்.

---

## 12. பெருந்தொண்டாம்—சிறுத்தொண்டர்.

உலகம்செய்த பெருந்தவப்பயனால், யாண்டோ அடங்கியிருந்து, என்றோ திருவுளங்கொண்டு, கருணையே காரணமாய்ப் பலர் காணத்தோன்றி, "பரக்காள்! என்றும் அழியுமிக்காயம்—இத்தை, எதுக்குமெய்யென்றிருந்தீருலகீர்—ஒன்றுமறியாத நீரோ—யமன்—ஓலைவந்தாற் சொல்ல உத்தரம் உண்டோ; உண்டோ நமைப்போல வஞ்சர்—மலம்—ஊறித்ததும்புமுடலை மெய்யென்று—கொண்டோ பிழைப்பதிங்கையோ—அருட் கோலத்தை மெய்யென்று கொள்ள வேண்டாவோ," என்று மெய்யறிவுறுத்தி மாயமாய்மறையும் மெய்யடியார்க்கு அடியார்க்கு மடியேன், முன்செய்த புண்ணியப்பேறே பயனளித்ததென்ன பைரவ மூர்த்தியை அண்மி, ஆனந்தக் கண்ணீர்வார பூமியில் வேரற்ற நெடுமரம் போல் விழுந்து வணங்கினார்.

கல்லாலின் கீழிருந்து நால்வர்க்கு ஞானோபதேசஞ் செய்தருளிய வேத முதல்வரேபோலும், திருவாத்தி நிழலமர்ந்த தெய்வத் திருவேடங்கண்டு, அடியார் தம்மை யகத்திற்கே அழைத்துச்சென்று பெரிதும் உபசரிக்கவேண் டும் என்னும் ஆவல் தூண்ட, எழுந்து கைகூப்பி வாய் பொத்தி நின்ற பரஞ்சோதியாராம் தொண்டர்தமைநோக்கி, துள்ளிக்குதித்தோடும் தன் அன்பர் மனத்தையே மானென எடுத்து, தன்னிடத்தே ஈடுபடச் செய்வான் மானிடமேந்தி யாய பைரவர் தாமும், திருவாய் மலர்ந்து, சர்வசாக்ஷியாய், எள்ளிலெண்ணெய்போல், கரந்தெங்கும் பரந்த பெருமான், அறியாதவர்போல், “அடியரே! நீர்தானோ அப் பெருந் தொண்டராம்—சிறுத்தொண்டர்” என்றார்.

தாம் அரும் பெரும் செயல்களைச் செய்தபோதிலும், பெரியார் ஏதோ செய்துவிட்டதாகப் பாராட்டிக்கொள்ள மாட்டார்கள். எவன் ஒருவன், “நான் செல்வமுடையேன்; பலபேருக்குப் பலவிதமாக உதவி செய்கிறேன்; பல பந்துக் களை ரக்ஷிக்கிறேன்; அதிக செல்வாக்குள்ளேன்; எனக்கு ஒருவரும் சமானமில்லை” என்று சொல்லிக்கொண்டு, பலர் மெச்சுவதற்காக ஆடம்பரமான காரியங்களைச் செய் வானோ, அவன் அசுரச்செல்வம் படைத்துள்ளவன் என்று நூற்கள் கூறும். தன்னை ஒருவர் வணங்கினபோதிலும், அவர் எல்லாம் வல்ல இறைவனையே வணங்கியதாகக் கருதி, அவ் வந்தனத்தைக் கடவுளுக்கு ஒப்பிக்கவேண்டுமேயன்றி, தனது ஊனத்தைச் சரீரத்தைப் பத்தியோடு தொழுதான் என்று கொண்டு இறுமாப்புக்கொள்ளுதல் கடவுளை வஞ் சனை செய்த குற்றமாகக் கருதப்படுமென்பர்.

எவ்வித மங்களமும் அருளும் சாம்பமூர்த்தியாகிய பைரவர் திருவாக்கினின்றும் ‘பெருந்தொண்டைச் செய்கிற

நீரோ சிறுத்தொண்டர்,' என்று வெளிவந்தது கேட்டு, பரஞ்சோதியாராம் சிறுத்தொண்டர், "அடியேன் சிவனடியார்களால் இங்ஙனம் கூறப்படுவதற்கு ஒரு சிறிதும் பற்றேனாயினும், கருணைமிக்க அப்பெரியார் அப்படியே என்னை அழைப்பர்" என்றுகூறி "இச்சீரார் நகர் எங்கும் நாடியும், நீரார் திருமுடியார்க் கடியாரை இன்று தரிசித்து உபசரிக்க பாக்கியம் பெறுதவனாயினேன்; அடியேன் தவப்பயனாயிற் கண்டு கொண்ட தயாநிதியே! தாங்கள் என்னுடன் எழுந்தருளத் திருவருள்புரியப் பெரிதும் அவாவுடையேன்; எளியேன் சிறு குடிலுக்கு எழுந்தருளி, திருவமுதேற்று அடியேனை உய்வித்தருளல் வேண்டும்" எனப் பிரார்த்தித்தார்.

---

## 13. அடியார் திருவமுது.

"இதுகாறும் இறைவன் திருத்தொண்டர்க் கின்னமுதூட்டி இன்புறுத்தினீராயினும், அன்புடையீர்! யாம் உத்தரதேசத்துள்ளோம்; உம்மைக்காணவே வந்தோம்; எம்மைப் பரிந்தூட்ட உம்மாலாகாது; பெரிதும் அரிது" என்றே பசுபதியும் பதிலளித்தார்.

விச்சதன்றியே நாறுசெய்யும் வித்தகனடியார் வேண்டுவரேல் அரிது மொன்றுண்டோ? அடிகாள்! தங்கள் திருவமுதுக் கியைந்ததை அருளிச்செய்யில், இக்கணமே சித்தஞ்செய்யச் சிறிதும் தாழேன்" என்று சிந்தை யெல்லாம் சிவன்பாற் சென்ற சிறுத்தொண்டர் வேண்டுவாரானார்.

"எத்திக்குமாய்நின்ற இறைவன் இணையடிக் கன்புடையீர்! யாம் அரியதோர் நோன்புடையோம்; மூன்றுருதுக்களாம் ஆறுமாதத்திற்கு ஒரு முறையேதான் அமுது செய்

வோம்; அந்நாளு மிந்நாளேயாம்; அன்று ஓர் பசுவேட்டு உண்பதாகையால், உம்மால் ஆகாது நமக்கு அமுதளித்தல்" என்று மீட்டுங் கூறினார்.

அங்ஙனமாயின் இந்நாளே நன்னாளாயிற்று; குன்ற வில்லியின் குறைவிலருளினால், குன்றாப் பசுநிரை எவ்வகையும் உள்ளேன்; உவந்த பசுத்தான் யாதென வருளில், ஈண்டே உண்டி கடிதமைத்து இறையும் தாழாது ஏழையேன்மீள்வல்" என்று தண்டாது தொண்டரும் வேண்டுவாராயினர்.

யாதும் தமக்கு அரிதன்று என்று கூறிய தொண்டரின் பரிவுகண்ட பைரவர் "நண்புமிக்கீர்! நாமுண்ணும் பசுவும் நரபசுவாகும்; அப்பசுவும் ஐந்து பிராயத்தினதாய் அகத்தே யொன்றும் மறுவற்ற தாகல்வேண்டும்; கடுவுண்ட கண்டன் றனடியாரை இதுகாறும் அன்புமிக்குடையராய் உபசரித்த பெரியீர்! புண்ணிடைக் கோலிட்டதென்னப் புவனிக்குள்ளோர் பெரிதும் வெறுப்பர் மேலேபுகலின்; ஆயினும் கண்டலூர்வங்கொண்டு நமக்கே நவலுவம்; ஒரு குடிக்கொரு மகனாக உத்தமனுயிருத்தல் வேண்டும்; ஈமத்து நடமாடு மீசனுக்கடியீர்! அத் தலைமகன்றன்னை தாய்பிடித்துக் கொள்ளத் தந்தை யரிதல்வேண்டும்; அக்குவடத்தோடு அரவணியும் பெருமானுக் கடியார்க்குமடியீர்! இதனை அட்டு அருத்து மளவும் உள்ளக்கவற்சி எள்ளளவு மில்லாது, உவப்புநீடி ஒருதவப்பயனாகக் கருதி அருத்துவரேல் உண்பல்" என்று வித்தாரம்பட இத்தனையும் கூசாது கூறினர்.

இக்காலத்திலும், தங்கள் ஆனந்தமேலீட்டால் செய்வதொன்றறியாரை நாம் காண்கின்றோம். பரம துக்கத்திலும் வெறுப்பினும் கோபத்தினும் நலமற்றன புரிவோர் பலரே யாவர். எவருடைய கடைக்கண் நோக்கத்தினாலேயே தான் தனது என்னும் உலகப்பற்று முற்றிலும் அற்றுவிடுவதாகச்

சிறப்புடைய நூற்கள் கூறுமோ, அம்மகாமூர்த்தியே வைரவராக வந்திருக்க, அவரைச் சிவனடியாராகக் கண்டு உபசரிக்கும் பாக்கியம் பெற்ற பரஞ்சோதியார், கண்டளவிலேயே தன்னையும் மறந்தோராய், அவ்வடியவரின் அரிய நோன்பினைக்கேட்டும் மனமகிழ்ந்தோராய் "அடிகாள்! சொல்லிய அத்தனையும் அடியேற்கு அரிதன்று" என்று கூறி வணங்கி, வேண்டிய திருவமுதை விரைவில் அமைத்து மீள்வதாக விடைபெற்றுத் தமதில்லம் நோக்கிச் சென்றார்.

---

## 14. உவந்தவாறியற்றல்.

வேதமதத்தின் ஒருகூறுய பைரவம் சாலக்கொடிய தென்றே கருதலாம். ஈசனுக்குக் கருணையே உரு என்றும் கற்பிக்கும் வேதம், இங்ஙனம் ஒரு விரதமும் கற்பிக்குமேல், இவ்வேதத்திற்கு உடன்படல் உலகத்திலின்றும். வேதமதத்தினர், விருக்ஷங்களிடமும் பக்ஷிகளிடமும் மிருகங்களிடமும் தங்கள்போலும் மக்கள் மாட்டும், பெரிதும் கருணையே உடையராகவே கருதவேண்டியவராவர். விருக்ஷங்களில் அரசமரத்தை வணங்குவதும், வேம்போடியைத்துக் கடிமணம் காண்பதும், ஆலமரத்தை 'வடவிருக்ஷம்' என்று, எங்கு கண்டபோதிலும் வலமே செல்வதும், பலரறிந்த உண்மையாகும். தென்னைமரம் முதல் முதலாகப் பாளைவிடத் தொடங்குகையில், இல்லத்திலிருக்கும் பெண் மக்கள் அன்றுபிட்டுச் சமைத்து மரத்தடியிற் கோலமிட்டு விளக்கேற்றி பூஜிப்பர்; சுக்கிரவாரந்தோறும் சர்ப்பங்களடையும் புற்றினும் பால்வார்த்து, எறும்புகளுக்கு நொய்யும் தூவுவார்கள். பக்ஷிகளில் கருடனை தரிசிப்பதை விரதமாகக்

கொண்டவர் பலர். காக்கையைக்கூவி யன்னமளிக்கச் சிறு குழந்தைகளும் மறக்கக்காணும். பசுவைத் தெய்வமாகப் போற்றி 'லக்ஷ்மி' என்றே கூறியழைப்பர். பசுவினிடம் தேவர்கள் அனைவரும் ஒருங்குகூடி வசிக்கிறார்கள் என்பதே வேதமதத்தினர் கொள்கை. பசுக்களை வாங்கிக்கொண்டு தாங்கள் அரிதிற்பெற்ற மைந்தர்களை அரசர்களும் மற்றோரும் யாகத்திற்காக வேண்டுவரேல், முன்வந்து கொடுத்த மகரிஷிகள் பலர். கோமயமும் மிகுந்த பரிசுத்தமளிப்பது என்று கொள்வரென்றால் பசுவின் பெருமை புகல அரிது. மானிடவர்க்கம் முற்றிலுமே கடைத்தேறப் படிகளமைத்து, ஒருவர்க்கொருவர் முன்னேற்றத்திற்கு உதவிபுரிந்து வருவார்கள். காரியசாதனத்திற்கேற்ற உபாயங்களில், தண்டோபாயத்தைக் கடையாயர் கைக்கொள்வதென்று கடிவரேல், வேதமதத்தினர் கருணை கேவலம் வாய்ப்பேச்சோடு நிற்பதன்றி அனுஷ்டானத்தி லுள்ளதாகவே போற்றத்தக்கதாகும். இவர்கள், இரவியெழுமுன் எழுந்து வீட்டைச் சுத்தஞ்செய்து, பூஜாக்ரஹத்திலும் வெளியிலும் அடும் அடுப்பின் மேலும் அக்னிஹோத்ரசாலையிலும் கோலமிட்டுத் தேசு பெறவமைத்தல் பிறர் கண்டு கற்கத் தக்கதாகவே யிருக்கும். இல்லங்கள் தோறும் கோலமிடுவது அலங்காரமட்டிலன்றி, சிற்றெறும்பு போன்ற சிறிய ஜந்துக்களுக்கு ஆகாரமும் ஆகுமென்று கருதியே யென்பர், இவ்வாறு ஜீவராசிகள் எவற்றினிடமும் கருணையுள்ளோர், அவர்களுள்ளும் அன்பே காரணமாக அகிலமுழுவதும் அரனது உருவாகவே காணுமடியார், ஐந்துவயதேயுள்ள அருங்குலக் கொழுந்தை அட்டுண்ணும் நோன்புடையவராகக் கூசாதுகூறல் உய்த்துணரற்பாலது.

அடியாரைக் கடிதிலழைத்துக்கொண்டு மீள்வாரெனக் காத்திருந்த காதலியும், இன்றும் நம்மீசனன்பர் இல்லினுக்கு

வந்து திருவமுதேற்க இசைந்தாரென்று, மகிழ்முகங்காட்டிக் கொழுநனுர் விரைந்து வீடுநோக்கி வருவதைக் களிப்புடன் கண்டனள். தன் நாயகன் இன்முகங்கண்ட இல்லினுக்குரி யாள், அடியார் இன்றித் தனித்துவந்த தன்மையை வினவத் தாழாது அடியார் அமுது செய்ய இசைந்தார் என்று அகமகிழ்ச்சியோடு கூறியபின்னர், திருவமுதுக்குச் சித்தஞ் செய்ய வேண்டுவனவற்றை விளம்பி நின்றுர். எதையும் பெற்றுச் சித்தஞ்செய்வது அரிதன்றுயினும், "நாத! அடியார் வேண்டிய பசுவைப்பெறுமாறு எங்ஙனம்?" என்று மனேவியார் வேண்ட இனியராகிய கொழுநர் எடுத்துரைப்பா ராயினர்.

"அன்புடையாய்! இல்லறத்தினுக்கோர் நன்கலமாய மக்கட்பெற்ற எவரே இசைந்து தம் மகவைத் தருவர்; அன்றியும், அடியார் அருள் செய்தவாறு தாய் பிடித்துக் கொள்ள தந்தை உவந்து சேதிக்குமாறெங்ஙனம் கூடும்? தங்கள் குலக்கொழுந்தை, யாம் எவ்வளவு செல்வம் தான் கொடுக்கினும், இத்தகைய செயற்கு ஈவாருமிருப்பரோ? எவர் மாட்டு ஈவான் கேட்க இயலும்; கற்புடையாய்! நாம் ஆற்றும் பூசனேக்குப் பிறரை நாடுவானேன்? நமது குலக் கொழுந்தாய ஒருவன் இருக்க இக்கவலே நமக்கேன்? வீணே பலவாறு யோசித்தோம்" என்று, அவ்வடியவர் கொண்ட நோன்பினிலும் தன்நோன்பு தவறுதல் தகாதெனக்கொண்ட சிறுத்தொண்டர் கூறவும், மனேயாள் உவக்க, மைந்தற் பெற்ற பேறெல்லாம் பெற்றதாகக் கருதி, கலே பயிலச்சென்ற கான் முளேயைக் கொணரப் பள்ளிவாய்ச் சென்றுர்.

தந்தை அழைக்க, பாதச்சதங்கை மணியொலிப்ப ஓடி வந்து, காதலாற் காலேக்கட்டி மழலேயும் மல்கிய தன்னிளஞ் சிறுவனேத் தோளிலிருத்தி மனேநோக்கி மீண்டார். தந்தை

அழைத்துவந்த மைந்தனை மாதரார் எதிர்சென்று கையி லேந்தி, உள்ளழைத்துவந்து குஞ்சிதிருத்தி முகந்துடைத்து கொட்டை யரைஞாண் துகள்நீக்கி, மஞ்சளழிந்ததற்கிரங்கி மையும் கண்ணின் மருங்கொதுக்கித் திருமஞ்சனமாட்டி, எஞ்சாது கோலஞ்செய்து எடுத்து கணவன் கையிற்கொடுத் தார். அரிதிற்பெற்ற மைந்தனை அடியார் பூசைக்குக் கறியாவ தென்று உச்சிமோவ அஞ்சினர் தந்தையார். ஆசார சீல ரான அடியார்க்குகந்த அமுதாவதென்று மார்போடணைத்து முத்தமும்தாரார். ஊராரறியாவண்ணம் மறைவினில் மைந் தனைக் கொண்டுபோய், பெற்றதாய் சாதனங்களைச் சித்தஞ் செய்துகொண்டுவர, மழலையே மிழற்றும் மைந்தன் கிண் கிணிக்காலிரண்டும் மாதா மடியின்புடையடக்கிக் கைகளைப் பிடிக்க, தாதை தலையைப் பிடித்துக் கொள்ளவும், விளையாட் டுக் காட்டுகிறார்கள் என மகிழ்ந்து மைந்தன் இள நகை புரியவும், உலகை வென்ற தாதை உவந்தவாறு செய்து, "இன்றே எனது புத்திரன் பெயருக்குரியனானான்" என்று உள்ளத்தூறும் களிப்புடையோருமாயினர்.

---

## 15. பரிவற்ற பெற்ஞேர்.

ஈசன் கருணையே இத்தனையுமானால், வைரம் எத்தனை கொடுமையுடையதா யிருக்குமோ அறியோம்! இவ்வாறு ஒரு கொடூர விரதங்கொண்ட பைரவரை, வன்றொண்டர் என்றாலும், சுந்தரர், நன்றே பித்தன் என்றார். "பித்தன்" என்பது எவ்வாறு பொருள்படினும், நாம் எக்கருத்தில் வழங்குவோமோ அப்பித்தரின் இப்பைரவர் ஒரு சிறிதும் வேறாகார். இப்பித்தரின் அடியாரைப் பெரிதும் பரிந்து அமுதூட்ட அவர்கள் வேண்டியவா றெல்லாம் செய்யும் பெரும் பித்தரான பரஞ்சோதியாம் சிறுத்தொண்டரை நாம்

என்னென்று கூறுவது ! உலகத்தோடொட்ட ஒழுகலறியா அடியார் பூசனைக்கு இத்தனையா ! என்னே பேதைமை ! மக்கள் மெய் தீண்டல் உடற் கின்பம் அன்றோ? மைந்தன் உடல் தீண்டிய தொண்டர் என்னே இக்காரியம் செய்யத் துணிந்தார் ! கடந்த ஞானியும் மக்கள் மேல் காதல் கடவார் என்றல்லவோ இதுகாறும் யாம் அறிவோம் ! தந்தையுண்ணுமிடையே தானும் குலு குலு வென்று குறுநடை யிட்டு வந்து, சிறு கை நீட்டி, இட்டும் தொட்டும் கௌவியுந் துழந்தும், நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்து மயக்குறு மக்களை யில்லார்க்கு வாழ் நாள் பயக்குறையில்லை என்றன்றோ பெரியோர் கூறுவர். அமுதினும் ஆற்ற இனிதாக இருக்கும் தம்மக்கள் சிறுகை யளாவிய கூழ் என்பவரே ! இம்மைந்தனை யின்றி என்னே பைரவருக்குப் பெருவிருந்தளித்து உண்பித்தல்? கொஞ்சிப் பேசும் குழவி சொற்கேளாது வஞ்சித்த தந்தையைத் தந்தையென்றோ கூறுவது ? உற்றார் அழவும் சுற்றம் ஏங்கவும் பெற்றோர் புலம்பவும், பாசம் வீசி உயர் கவர வரும் யமனைத் தருமனென்றே கூறும் யாம், சிறுத்தொண்டரையும் அவர் தம் மைந்தற்குத் தந்தையென்றே கூறுகின்றோம். மலையிட்ட செல்வத்தார்கள் எப்பாடு படினும் எத்துணை வேண்டினும், சீராட்டிப் பாராட்டி மகிழுமாறு ஓர் மைந்தனைத் தாராது, அவ்வலையிட்ட முட்டாட் செய்ய கமலத்து முளைத்த தாதை, (முள் + தாள் = முட்டாள் ; முட்டாள் = மூடன்.) இச் சிறுத்தொண்டர்க் கோர் மகவளித்த மதியின்மைக்கு, அரன் மன்னிப்பாக விட்ட ஈரிருதலையுங் கொய்தாலும் குற்றமாகாது. “கைதவம் நீக்கிக் கருத்திற் கறையகற்றி, செய் தவம் எத்தனை தான் செய்தாலும், மைதீர் மகப்பெறார் வானவர்தம் மூர்க்கண் புகப்பெறார்” என்பதை,

இத்தொண்டர் மறந்தனர் போலும்! என்னை பரஞ்சோதி யாரின் பித்தம்! தந்தையோ கொடியன்; தாயும் தீயளாய் எங்ஙனம் விட்டிருந்தாள்! தான் பாராட்டிச் சீராட்டித் தந்தையினும் பரிவுடையோளாய் வளர்த்ததாய் உடன்பட்டு, இக்கொடுஞ் செயலைக் கண்ணுற்று, இதற்கு உதவியாயு மிருந்தா ளென்னில், இவள் மகப்பெறு மலடியினும் பதடியே யாவாள். கொடிய மிருகங்களு மன்றோ தம்மக்களுக் கிரங்கும்! ஒருக்கால் தான் பெற்றிலளோ! பெற்றதைக் காட்டிலும் வளர்த்த பாசம் பலமாக இருக்குமென்று அநுபவத்தில் காண்பதும் பொய்யாயிற்று. கொடுவிடங் கொண்ட கண்டம் மறைத்து நீற்றையே பூசினும் வைரவரின் மனவைரம் மறையாதாயிற்று. இதுபோன்ற பற்பலவும் மானிட இயற்கையுள்ளோர் மனங் கொள்ளாதிருக்க இயலாது. எத்துணை சமாதானங் கூறினும் புத்தியும் ஏற்காது; ஏற்க எவரது மனமும் ஒருப்படாது.

---

## 16. பற்று

ஒருவர் குழந்தையை எடுத்துக்கொண்டு வைத்தியரை நாடிச் செல்கையில், அக்குழந்தை இரவெல்லாம் குளிர் ஜுரத்தால் வருந்தியதாகக் கூறுவரேல், "குழந்தைகளுக்கு சரீர அசௌகர்யங்கள் அடிக்கடி நேருவது சகஜம்" என்று தருமம் கூறுவோம்; நமது வீட்டிலேயே அத்தகைய அசௌகர்யங்கள் நேர்ந்தால் நாம் படும்பாடு வேறு. ஒருவர் கால் இடறிக் காயமடைவரேல் நமக்கு அது நோவதில்லை. சென்ற வருடம் வரையில் ஒரு பூமி நன்றாக விளைவதற்குப் பெரும்பாடு பட்டோம்; இவ்வருடம் அதைப் பிறரிடம் விற்று விட்டோம்; இப்போது அது விளையாமல்

இருந்தால் நமக்குக் கவலையில்லை; ஒருவாறு தம்மனத்துக் களிப்படைவோரும் சிலர் உண்டு. எந்தப் பொருளும் கடையிலிருக்கும்போது பலரும் தொட்டுத் தட்டிக் கொட்டி எடுத்துப் பார்ப்பதில் நமக்கு ஆக்ஷேபணை சிறிதும் இல்லை; அவைகள் உடைந்தாலும் பழுதுபட்டாலும் நமக்கொரு வித கவலையுமில்லை; சொற்பவிலை கொடுத்து அதே பொருளை நாம் வாங்கிவிட்டால், பிறகு அதை யாராவது தொட்டபோதிலுங் கூட "அது என்னுடையது" என்கிறோம். நமது என்னும் பற்றை வெகுவிரைவில் வாங்கிவிட்டோம். இப்பற்று நிலை யற்றதாகவும் அற்பத்தனமாகவும் காண்கின்றோம். இவ்வாறு நமக்குப் பற்றுதலான பொருள்கள் சீர் கெடின் அவற்றால் அடையும்பலன் பெருந்துக்கமேயொழிய மற்றொன்றுமில்லை. கடைநாளிற் படைத்த நிதியும் பெற்றிருந்த வாழ்வும் வீட்டோடு நின்றுவிடும்; கண்ணீர் வாரக் கலுழ்ந்த மனைவி வீதியோடு நிற்பாள்; மைந்தர் இடுகாடு வரையில் தொடருவர்; என்னே நாம் பாடுபடுவது! ஜன்ம ஜன்மாந்தரங்களிலும் தொடர்ந்து வருவது அறமேயாயினும், அவ்வறத்தில் நம் மனம் மிகுதியாய்ப் பற்றுகின்றதில்லை.

நமது என்னும் பற்று ஒருவாறிருக்க, நாம் என்பது தான் யாது என்று பார்ப்போம். இன்று காலை கடையில் கண்டதும், வெளியே கூறிட்டு வைத்திருந்ததுமாகிய பதார்த்தங்களை அட்டு உண்டுவிட்ட பிறகு, மாலையில், வயிற்றினுள் இருக்கும் வாழை கத்திரி முதலியனவும், நெய் பால்நீர் முதலிய அனைத்தும் சேர்த்து மார்தட்டி நாம் என்கிறோம். இன்று மட்டிலா? பிறந்தபோது ஒருசாண் இருந்த உருவத்தை நெடுநாளாகப் பல சேர்த்து வளர்த்து விட்டோம். சுருங்கச் சொல்லில், நெல்லூர் முதலிய இடங்களிலும், ஏனைத் தேசாந்திரங்களிலும் விளைந்ததாகிய நெல்லும், நீலகி

ரியில் விளைந்த காப்பிக்கொட்டையும் எங்கெங்கோ விளையும் ஏனைப் பொருள்கள் அனைத்தும் சேர்த்து, நாம் என்று சொல்லிப் பாராட்டுதல் எத்துணை பொருளற்ற பதமாகின்ற தென்பதே வியப்பைத்தரும். இப்பற்றே (நாம், நமது என்னும் அபிமானம் இருப்பதே) பிறப்பு இறப்பிற்கு முக்கிய காரணமாகின்ற தென்றால், சரீரப் பற்றே முற்றிலும் அற்றவராய், சிறுத்தொண்டர் நாம் விவரிக்கவும் மனங் கூசும் வண்ணம் ஓர் விருந்தளிக்க ஒப்பியதற்கு அருவருப் பானேன் ?

---

## 17. கொளத்தகும் பெண்டிர்.

அருமறை முழக்கி அந்தணர்புரியும் வேள்விகள் தோறும் பசுவுண்டு ருசிகண்ட பரமனாகிய அடியார் நரபசு விழைந்தாரேனும், **அடியார்க்குமடியேன்** எனத் தன்னைக் கூறிக்கொண்ட **ஆலாலசுந்தரர்** முதலையுண்ட பாலனை மீண்டு வரச் செய்ததும், அப்பூதி நாயனாரின் மைந்தர் அரவம் தீண்டி மூர்ச்சிக்க, **அப்பமூர்த்திகள்** உயிர் தழைக்கச் செய்ததும், எலும்பு பெண் உருவாய் எழில் பெறக்கண்ட **சம்பந்தமூர்த்தியின்** ஒப்பற்ற கருணையும், இப்பைரவராம் பரமேசுவரனின் தியானம் காரணமாக மிருந்தவை யன்றோ! ஊத்தைச் சரீரத்தை ஆபாசக் கொட்டிலே, ஊன் பொதிந்ததும் சோற்றாலடித்ததும் இடும்பைக்கு இடும்பையுமான உடலை **நாம்** என்றே கருதிக் கூறிக்கொள்ளும் அற்ப அறிவும், அற்ப சக்தியுமேயுள்ள மானிடர் கருணை எவ்வளவு தாரம் செல்லும்.

அடியாரை உண்பிக்க இனியும் தாமதிக்காது, தொண்டர் தன்மகன் தலை யரிந்து மனைவிகைக் கொடுத்து அகமகி

ழ்ச்சியும் கொண்டார். மனைவியாம் வெண்காட்டு நங்கையும் பைரவர் பூஜைக்கு வேண்டுவன செய்ய விரைபவளாயினள். இவள் போலும் உத்தமாங் குலமகளிரையே **தரும பத்தினி கள்** என்பார்கள். விவாக காலத்தில், கணவன் மனைவியின் கால் விரலைத் தொட, எழுதி எடுத்துவைப்பதுண்டு. அக்காலத்தில் செய்யும் பிரதிக்ஞைகளோடு விவாகம் பூர்த்தியாவதாக அறமறிந்தோர் கூறுவர். அவர்கள் செய்து கொள்ளும் பிரதிக்ஞைகளில், கணவன் நோன்பே தனக்கும் நோன்பாகக் கொள்ளுதல் ஒன்று. இந்த சமயத்தில் கூறும் மந்திரங்கள் அனைத்தும் ஆழ்ந்த கருத்துடையவைகளாயிருக்கும். இவ்வாறு மணந்துகொண்ட மனைவியோடு தான் இல்லறம் நடத்தவேண்டுமென்பது வேத மதத்தினர் கொள்கை. எந்த நற்கருமத்தைச் செய்யவும் இம்மனையாள் உடனிருக்கவேண்டும். இம்மனையாள் உடனிருக்க உதவாத காலத்து வேதமத்தினர் தம் இறந்த தந்தைக்குச் செய்யும் வைதீக கர்மங்களையுங் கூடச் செய்யமாட்டார்கள். இதுபோன்ற பல காரணங்களைக் கொண்டே வேதமதத்தினர் போலும் பெண் மக்களிடத்துப் பெரிதும் கௌரவ புத்தியுள்ளோர் பிறர் இல்லையென்றும் கூறுவார்கள். இவர்களுக்கு இன்றியமையாத பரிசுத்தம் கருதியே பெண் மக்களைப் பொன்போல் போற்றுகிறார்கள் என்பர். இவ்வாறு அறம் புரிவதற்கே யன்றி, வேறெந்த குணங்கருதிப் பெண்களைக் கொண்டாலும், அதை **விவாகம்** என்னும் பெயரால் அழைப்பதே பிழைபடுமென்பதும் சான்றோர் கருத்து. தன்னாயகனது அடியார் பூஜைக்கு வேண்டிய வேண்டியபடி கிடைத்ததென்று மனமுவந்த வெண்காட்டு நங்கை, தலையிறைச்சி திருவமுதுக்காகாதென்று நீக்கிச் சந்தனவதியார் கைக்கொடுத்துவிட்டு, மற்றைய அங்கங்களையெல்லாம் தனித் தனியாக விரைவில் பக்குவம் செய்து சித்தஞ் செய்தனள்.

மனைவியார் எவையும் சித்தமாயிருப்பதைத் தொண்டருக்கறிவிக்க, அவரும் பைரவரை அமுது செய்யப் பரிந்தழைக்கக் கடிது சென்றார்.

---

## 18. பரிகலத்திடுதல்.

முன் தேடிச்சென்றதினும் இப்போது மிகுந்த இன்புற்றோராய், அடியாரைத் திருவாத்தி நிழலிற்கண்டு, "தேவரீர் திருவமுதுக்கு அதிகமாகக் காலந் தாழ்த்ததாயினும், வேண்டிய வண்ணமே எவையும் சித்தஞ் செய்துள்ளேன்; எளியேன் உய்யுமாறு உவந்து வந்து திருவமுதேற்கவேண்டும்" எனப் பிரார்த்தித்தார். பைரவமூர்த்தியும் உடன்வரக் கொண்டு சிறுத்தொண்டர், எவ்வகைச் செல்வமும் எளிதே பெற்றறியார் போலும் இன்புற்று, இல்லத்தகத்தே எழுந்தருளச் செய்தார்.

இமவான் இறுமாப்புடையோனாய் எவர்க்கும் அரிதாயிருப்பதெல்லாம், சர்வேசுவரரான சங்கரர் தன்பால் கைலையில் கோயில் கொண்டுள்ளார் என்னும் காரணம் பற்றியே என்பர். ஊழிப் பெருவெள்ளத்தில், ஆலிலை, உலகெலாந் தன் வயிற்றடக்கிய மாயவனைத் தாங்குந் தருக்குடையதாயிருந்ததும், தன்பாற் சிவபெருமான், ஞானகுருவாய்த் தக்ஷிணாமூர்த்தியாய்த் தங்கும் சிறப்புடைமையினாலேயே என்றும் கூறுவர். புண்ணிய க்ஷேத்திரங்கள் பலவற்றினும் மேன்மையுற்று, மகரிஷிகளின் சித்தத்தைக் காட்டினும் சுத்தமானதென்று கருதினார்போலும், எல்லாம வல்ல சித்தரான பைரவர், சிறுத்தொண்டரகத்து, அவர்தம் மனைவியால் அலங்கரித்து அன்பு மீக்கூரக் கொடு வந்திட்ட ஆசனத்தினிது வீற்றருளுவாராயினார்.

11162



உடனிருந்து மனைவியார் உதவ, அப்பைரவ அடியார் தம் திருவடிகளை விளக்கி, முறைப்படி அப்புனித நீரைச் சிரந் தெளித்துக்கொண்டு, இல்லாளுக்குந் தெளித்து, வீடு முற்றிலும் தெளித்து, மென் தூசுகொண்டு காலை ஒத்தி, சந்தனாதிகளால் திவ்யாலங்காரம் செய்து, அருச்சித்துத் தூபதீபம் காட்டி, அடியார்க்கு மடியராய சிறுத்தொண்டர், வணங்கித் தொழுது வலம் வந்து வாழ்த்துவாராயினர்.

இல்லறம் நடத்துவதில் பல்வேறு நியமங்கள் உண்டு. ஒருவரது ஆசாரம் மற்றொருவருக்கு ஒவ்வாததாகவு மிருக்கும்; இவை கால தேச வர்த்தமானங்களுக் கேற்ப நியமிக்கப்படுவதாகும். எவராக இருந்தபோதிலும், திருநீறணிந்த திருமேனியும் ருத்திராக்ஷமாலையும் கண்ட மாத்திரத்தில், அவர்தமைக் குலம் கோத்திரம் விசாரிக்காமல், அவரை ஈசனென்றே கருதிப் பூசித்து, உபசரிக்கும் பொழுது, அவரிடம் வாத மேற்படக் கூடியதும், அபிப்பிராய பேதமிருக்கக் கூடியதுமான பலவற்றைப் பற்றிப் பேசாமல், பகவானது குணங்களைப் பற்றியே பேசி மகிழ்வடைய வேண்டுமென்பர். இது கொண்டே போஜன காலத்தில் பகவானுடைய கர்ணாமிருத சுலோகங்களைச் சொல்லி, கோவிந்த நாம சங்கீர்த்தனம் செய்வது இன்றும் வழக்கமாக இருப்பதைப் பலரும் கவனிக்கலாம். இல்லறம் நடத்துவதிலிறையும் வழுவாது, தரும நுட்பம் நன்கறிந்தாளாகிய சிறுத்தொண்டரது இல்லாள் பக்குவமாயிருக்கும் திருவமுதைப் படைக்கவேண்டிய நியமம், அப்பைரவ அடியார் தமக்கு வேறாயிருக்குமென்று கருதி, பைரவ மூர்த்திகள் தாமே, எங்ஙனம் படைப்பதென நியமிக்க வெண்டுமென்று விரும்பிய அளவில், சிறுத்தொண்டர் வேண்ட, பைரவப் பெருமானும், அன்னம் முதலான அனைத்தையும் ஒருங்கே முதலிலேயே வரிசையாகப் படைக்கவேண்டுமென்று முறைவகுத் தருளினர். உவப்பு நீடிய

நாயகி, எவற்றையும் இறையும் தாழாது படைக்க எத்தனித்தாள்.

திருவள்ளுவனாரின் திருமனைக் குரியாள், நல்லுலகு பெற்றாளாக, நாயனார், மனைவியை நினைந்து வருந்துங்கால், "அடிசிற்கினியாளே! அன்புடையாளே!" என்று புலம்புவாராயினர். இப்பெரு நாவலர் நாயகியார், கற்பிற் சிறந்தவளென்பதைக் காட்டக் கதைகள் ஆயிரங் கூறுவதுண்டு. அரும்பெரும் குணங்கள் பலவிருக்க, நாயகியை அடிசிற்கினியாளாகக் கொண்டாடியது, இத்தெய்வப் புலவர் ஊண்சுவை நன்கு ஆராய்வரெனக் கருதக் காரணமாகலாம். நால்வகை உண்டியும் அறு சுவையும் தோன்ற, அடும் தொழிலில் மகளிர் வல்லராயிருக்க வேண்டியதோடு, நுண்ணிதினுணரும் தரும நுட்பங்களுஞ் சிறிதுண்டு. சமைத்தற்குச் சாதகமாயிருக்கும் அடுப்பை மகளிர் சுத்தஞ் செய்து கோலமிடக் கண்டிருக்கிறோம். இவர்கள் உலை நீரிட்டு, ஏற்ற காலத்தில் அரிசியைக் களைந்து அடுப்பின் மேலிருக்கும் கலத்திற் கொட்டுமுன், அக்கினியிற் சிறிது அரிசியைப் போட்டுவிட்ட பிறகே, கையினால் பிடிப்பிடியாக எடுத்துப் பாத்திரத்திற் போடுவார்கள். பிறந்தது முதலாக இச்சரீரத்தைப் போற்றுவதற்கு வேண்டியவற்றைப் பாகஞ்செய்து கொடுத்தது அக்கினியே யாதலால், அத்தீக் கடவுளுக்கென்றே முதலில் அக்கினியில் அக்ஷதையைப் போடுவார்கள்; பின்னர் தேவர்களுக் கென்றும் பிதுர்க்களுக் கென்றும் அதிதிகளுக்கென்றும் உறவின் முறையார்க்கும், கடைசியாகத் தங்களுக்கென்றும் கருதியே, ஆறு பிடிகளை எடுத்துப் போட்டு அமுது சமைப்பார்கள். இவ்வாறின்றி அடப்படும் உண்டியனைத்தும், மிருகங்களுக்குத் தவிடோடு பிண்ணாக்குச் சேர்த்து வைக்கும் தகைமைத் தென்றே அறமறிந்தோர் கருதுவர். கடவுளின் திருமுன்னர் வைத்து வழிபட்ட

பின்னரே உண்ணுதார் உணவு, மாடும் குதிரையும் தம்முன் னிட்ட வைக்கோலையும் புல்லையும் உண்ணத் தொடங்குவதி னும் எவ்வாற்றுனும் சிறந்த தாகா தென்பர். கட்புலனுகாக் கடவுளை, அவருக்கு உகந்ததான அடியார் திருவுருவத்தால் அன்றி வேறு எவ்வகையும் காண்பதரிதாகையால், இவ்வடி யார் அதிதிகளாக அமைவரேல், இன்முகங்காட்டி, வேண் டிய வேண்டிய வண்ணம் பணித்துக் களிப்படையச் செய்தல் இல்லாளின் முக்கிய கடமைகளில் ஒன்றாகும். இல்லாள் அதிதிகளைக் கண்டமாத்திரத்தில் இந்தகைய அன்பில்லா ளாய் மாறுபட்டிருப்பளேல், எவ்விதத்தும் அறமறிந்த ஆண்மக்கள் நல்வழிப் படுதலிலேயே யாகும். முப்பழமொடு பாலன்னம் முகங் கடுத் திடுவாராகில், அதிதிகளுக்கு அவ் வமுது காணக் கண் கூசும்; கை எடுக்க நாணும்; வாய் ஒத்துத் தான் திறக்கமாட்டாது. ஒப்புடன் முகமலர்ந்து உபசரித்து உண்மை பேசி உப்பிலாக் கூழிட்டாலும், அதிதி கள் அதனையே அமுதினும் இனியதாக விருப்புடன் ஏற்பர்.

துவாரகா நாதனுகிய கண்ணபிரானுக்குக் **குசேலர்** அவல் கொண்டு காணச் சென்றார் என்ற கதையை நம் நாட்டு மக்கள் அறிந்திருப்பர். கண்ணபிரானுக்கு அவல் ஓர் கிடைப்பரிய உண்டியன்று; ஆயினும், பெரியவர் புகழப் பட்ட பெருந்தவக் குசேல மேலோன், அரிய அன்பினிற் கொடுத்த அவலை, அப் பெரு ஞானியின் உயரிய அன்பினை யுங் கூட்டி ஆவலோடு கண்ணபிரான் உண்ணுவாராயினர் என்றால், அன்போடு படைக்கும் உண்டியின் உயர்வை எடுத் துரைக்க எளிதன்று என்றுமட்டில் நாம் அறியலாம். இவ் வாறு அன்போடு படைத்தல் அகத்திற்குரியாளின் பழக்க வழக்கத்தில் இருக்கவேண்டும் என்பர் பெரியோர்.

நெடுநாட் பழகி, அடியவரை உடனிருந்து உபசரித்த

தொண்டரின் மனைவியார், பாகஞ் செய்திருந்த அனைத்தை யும் பைரவர் பணித்த வண்ணமே பரிவுடன் படைக்க, பரஞ் சோதியாராம் பெருந்தொண்டர் வணங்கி அடியாரை அமுதுசெய்ய வேண்டி நின்றார்.

---

## 19. ஆட்டிவைக்கும் அம்பலவர்.

உணவை நச்சிவந்தவராயினன்றோ விரைந் துண்ணத் தொடங்குவார் அவ் வேதவேத்யராம் வைரவத்தொண்டர். ஒவ்வோர் அங்கமும் தனக்குப் படைக்கப் பட்டிருக்கிறதா என்பதை உற்று நோக்கினார்; பின்னர், "நாம் வேண்டிய படியே பசுவின் எல்லா உறுப்புக்களும் அமுதாவதற்கு அட்டிருக்கின்றதோ" என்று கேட்ட பைரவ மூர்த்திக்கு, "தலைக்கறி யமுதாகா தென்று நீக்கி, ஏனைய அனைத்தும் பக்குவமாக்கப்பட்டிருக்கிறது" என்று வெண்காட்டு நங்கையார் பணிவாக விடை யளித்தாள். வம்பறாக் கொன்றையணி நம்பராம் பைரவரும், "என்னே அத்தலையினுக்கு உற்ற தகவின்மை? உறுப்புக்களில் தலை யன்றோ தலைமை பெற்றது; நாம் அதுவும் உண்போம்; அஃதின்றேல் யாம் என் செய்வது?" என்று கபாலியாம் பைரவர் கூறிய அளவில், சிறுத்தொண்டரும் அவரது மனைவியாரும் சிந்தை கலங்கித் திகைப்பாராயினர். இவற்றைக் கேட்டிருந்த தாதியாம் சந்தனவதியார் அகத்தே கொண்ட உவப்பினளாய், "அடியேன் ஒருக்கால் இதுவும் திரு வமுது செய்யுமுன் ஞாபகம் வந்து வேண்டி யிருக்கலாமென்றே தலைக்கறியும் சித்தம் செய்துள்ளேன்" என்று கனிவுடன் கூறக் கேட்ட வெண்காட்டு நங்கையும் சிறுத்தொண்டரும் அடியார் பூசை நிறைவேறியதாகவே களிப்புடன் பரி

மாறுவாராயினர். இனி அடியார் மகிழ் பூத்து உண்பா ரென நிற்கையில், பைரவர் பரஞ்சோதியாரை நோக்கி, "அம்பராவணி சடையார்க் கடியார்க்கு மடியீர்! யாம் எவ்வாறு தனித்து உண்பது இதுகாறும் அங்ஙனம் இயற்றி அறியோம்; அச்சிற்றம்பலவன் சீரடிக்கன் புடை யார் எவரையேனும் உடனழைத்து இருத்தும்" என் ஞர். ஒரு அடியாரை உபசரிக்க இப் பெரும் பாடுபடும் தொண்டர், மற்றொருவரைக் கண்டு பிடித்துக் கொண்டு வருவது எங்ஙனம் இயலும்? "அறியாது கெட்டேன்! அடிகள் திருவமுது தேற்க இப்படியும் ஓர் இடையூறு நிகழ்ந் ததே, என் செய்வேன்!" என்று மனமுருகி நைந்து, பின் னர் பைரவ மூர்த்தியாம் அடியாரின் ஆர்வத்திற்கோர் குறையிருப்பதும் கூடாது என்று தலைவாயில் வெளிவந்து அடியாரை எட்டினமட்டும் கூவியழைத்தார். மறுவுற்ற கண்டரின் மாயை ஓர் புறமிருக்க, அவ்வகாலவேளையில் அடியார் எவரையும் காணப் பெற்றிலர். குவித்த கையராய், கரதலத்தில் தாருகமும் எரியகலும் கரியபாம்பும் பிடித்தாடும் பெருமானுகிய பைரவர் முன்வந்து, "அடியேன் வேறெ வரையும் பெற்றிலேன்; ஒரு வேண்டுகோளுண்டு; வேறு உய்யும் நெறி இல்லை யென்று, நாடகத்தால் நம்பனடியார் போல் நடித்து நானும் சகத்தில் நீறணிவார் தமைப்போலத் திரு நீறணிவதுண்டு; திருவுள்ள மறியேன்" என்று வண ங்கிக் கூறி நின்ருர்.

அன்று பூஜைக்கு அடியார் அகப்பட்ட மாத்திரத்தே ஆனந்த மேலீட்டால் பரஞ்சோதியார் முன்னரே தன்வய மிழந்தா ரென்னலாம். "ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதார்?" பரஞ்சோதியார், பைரவர் பணித்த அனைத் தையும் செய்கின்ருராயினும், பேரின்ப மன்ருடியாம் பைர வர் தாமும், தம்போல் நோன்புடைய அடியார் பலர் இரும்

பர் என்று கருதியே போலும் சிறுத்தொண்டரை உடனி ருந்து உண்ண அடியாரைத் தேட ஆக்ஞாபித்தார். இஃது அப்பைரவப் பெருந்தகையின் கருத்தாயிராது. காகங்களும் கிடைத்த உணவைப் பல்லாரோடுண்ணும்; மிருகங்கள் தங் களுக்கு இட்டதை முக்கார மிட்டு உடனே உண்ணத் தொ டங்குவதுபோல்,மாந்தர் இலையிலிட்டவுடன் வயிற்றிலடைப் பதற்குக் கருதலாகாது; எவர் இடும் அன்னத்தையும் தரும நுட்ப மறிந்தோர் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். எவன் தான் தர்மபூர்வமாக சம்பாதித்த பொருளால் விருப் போடிடும் அன்ன மளிப்பானோ அதுவே உவந்து கொள்ளத் தக்கதாகும். சித்த சுத்தியை விரும்புவோர், பிக்ஷையை ஒப்புக்கொள்ளுமுன், அன்னத்திலாவது பாகம் செய்த போதாவது தெரியாமலும் ஏதாவது தோஷமேற்பட்டிருக் குமோ வென்று சந்தேகங்கொண்டு, முதல் முதலில் மகா மந்திரங்களைக் கூறி, அன்னத்தை மந்திரத்தால் சுத்தஞ் செய்துவிட்டு, தமக்கிட்டவுணவைக் கடவுளுக்கு முன்னிட் டதாகக் கருதி வணங்கி, பின்னர் மருந்தேயாயினும் விருந் தோடுண்ண வேண்டுவர். விருந்தில்லாமல், உலகத்தில் மனிதன் உட்கொளத் தக்கது ஔஷதமொன்றே யென்பர் பெரியோர்; இது கொண்டே 'விருந்தில்லாச் சோறு மருந்து' என்றும் கூறுவதுண்டு. எவருடனாயினு முண்ண வேண்டிய அவசியத்தை உலகறியச் செய்யவே, அடியார் ஒருவரை பைரவமூர்த்தியும் பார்த்தழைக்கப் பணித்தனர்.

சிறுத்தொண்டர், தானும் நீறணிவதுண்டு; சிவனடி யாரைத் தரிசித்து முகமன் கூறியதுண்டு என்று சொல்லக் கேட்ட, புலிகாண ஆடெடுத்த அம்பலவராம் பைரவரும், "தொண்டரே! உம்மைப்போல் திரு நீறிட்டாரும் உலகிலி ருப்பரோ! நீர் உடனிருந்து உண்ணும்" என்று அருள் செய்து, அடியாரை உண்பிக்கும் அன்பு மிக்குடைமையால்

தானே தன் மகவுண்ண வுடன்பட்டதகைமையும் வெளியிட்டாராயினர். வெண்காட்டு நங்கையாரைத் தன்போலவே யாக்கிக் கொண்ட தொண்டருக்கும், திருவமுது படைக்குமாறு செய்வித்துக் காத்திருக்கையில், அடியார் பூசைக்கு இனியும் ஏதாவது இடையூறு ஏற்படுமென றஞ்சினர் போலச் சிறுத்தொண்டர், அடியார் உண்ண வேண்டுமென்றே தான் முதலில் உண்ணத் தொடங்குவாராயினர். ஏது பாவித்திடினு மதுவாக வந்தருள்செய் பரமனும் பைரவரும், "தொண்டரே! சற்றிரும்; ஆறு திங்களுக்கொருமுறையே அன்ன முண்ணும் எமக்குமுன், நீர் அவசரப்படுதல் யாது காரணத்தால்? தினம் உண்ணும் உமக்கு இத்துணை ஆவல் ஏன்? உடனிருந்து உண்ண ஓர் மழலை வாய்ச் சிறுவன் வேண்டாமோ? மாண்புற நடத்திய மனையறத்தின் பயனாக மகன் உமக்கிருக்க, தனித்துண்ண மனம்வந்த தெப்படி? அரும் பெறன் மகவை ஆதரவோடழைத்து உடனிருத்தும்" என்றார்.

எவ்வாற்றானும் அடியாரை உண்பிப்பதே கருத்தாகக் கொண்டு இவ்வளவும் செய்த பரஞ்சோதியாருக்குப் பெரிதும் பரிபவம் மிகுந்தது. எந்த வகையிலும் தப்பாத வண்ணம் பரஞ்சோதியாரைப் பிணித்தவராயினர் பைரவர். தன் மகன் எங்கு சென்றான் என்று கூறுவது? அன்றியும் தான் இயற்றிய செயலை அறியின் ஏதேனும் குறை சொல்லிப் படைத்தவமுதை யுண்ணாது பைரவமூர்த்தி மீளினும் குறையே நேரிடும். இப்போது மகனில்லாக் குறையை எங்ஙனம் தீர்ப்பது? ஆயினும் பைரவப் பெருந்தகையாரிடம் வணங்கிக் கூறுவோம் என்று துணிந்தவராய் "ஈறோடு நடுவற்ற முதலற்ற முதல்வனும் முத்தனே போலும் முந்திய மகா மூர்த்தி! எளியேன் மைந்தன் ஈண்டைக்கு உதவான்" என்று மனத்தோடு திருமுகம் மகிழ்ச்சியே காட்டி மகா

பமேசுவரராகிய பைரவருக்கு விடையளித்தார். உள்ளும் புறமும் ஒத்த மகிழ்ச்சியே கொண்டிராவிடின் அடியார் எழுந்து சென்று விடுவார் என்பது மறக்கற் பாலதன்று. எருக்கோடு மத்தம் அறுக்கோடு சூடும், ஆனைறார்ந்த அமலனுக்கடியீர்! மகன் ஈண்டைக்கு உதவுதலின்றேல், யாம் உண்பதும் இன்றும்; யாண்டையாயினும் தேடியழையும்; மனையாளுந் தொடரப்புற வாயில் சென்று போற்றி அழைமின்" எனத் தாண்டவ மூர்த்தியாம் மாண்புடைப் பைரவர் தொண்டரை ஏவினர். இறையும் தரியாது ஈடிலாத் தொண்டர் தம் இல்லாளும் பின்வரப் புறவாயில் வந்தனர்.

## 20. கிராமாந்திர கதை

**கலாலயர்** என்னும் இருடி ஒருவர் காட்டின் வழியாகச் சென்று கொண்டிருக்கையில், மன்மதனை ஒப்ப ஓர் குமரன் ஓர் மரத்தடியில் உட்கார்ந்திருக்கக் கண்டார். இச்சிறுவனும் இருடியைக் கண்டமாத்திரத்தில் எழுந்து சென்று அடிவணங்கிப் பணிந்து நின்றான். இவ்விளைஞனது குணத்தையும் அடக்கத்தையும் கண்ட இருடி, தன்னுட் களித்து "மைந்த! நீ இவ்வரிய கானகத்தில் எவரை நோக்கிக் காத்திருக்கின்றனை? உனது பெற்றோர், ஊர், பெயர் முதலியனவும் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்" என்றார்.

"தபோ நிதே! அடுத்த தக்ஷிண தேசத்தை ஆளும் **அம்பரீஷன்** என்னும் சூரிய வம்சத்து அரசன் மகன் **பகீரதன்** என்பான், இக்காட்டினூடு வேட்டையாடச் சென்றான்; அவனையே வழி பார்த்திருக்கின்றேன். அடியேன்

அம்பரீஷனது ராஜப் புரோஹிதரும் மந்திர தலைவருமான ஆதித்யன் என்னும் அந்தணரின் புத்திரன் ; என்னை தருமப் பிரியன் என்று அழைப்பார்கள் ; சிறியேன் சிலைப்பயிற்சி யோடு ஏனைக்கலைப் பயிற்சியும் உள்ளேனாயினும், மாவேட்டம் செய்யும் மனவைர மற்றேனாய் ஈண்டே தங்கிவிட்டேன்; தன் அரச இயற்கையையே மேற்கொண்டு மன்னவன் மைந்தன் கடிதே மீள்வதாய்ச் சொல்லிச் சென்றான். காலம் நீடித்ததெனும் கவலை ஓர் புறமிருக்க, அடியேன் மாலையில் தவறாமல் சிவ தரிசனம் செய்வது வழக்கம் ; இன்றும் அக்காலம் வீணாகாமல் தங்களை தரிசிக்கப்பெற்றதற்கு மகிழ்ச்சியுறுகின்றேன் ; துதி மொழி கூறவறியாப் பேதையேன், தங்கள் திருவுளம் போல் நடக்கத் தடையாதுமில்லை" என்று அவ்வாலிபன் வணங்கித் தெரிவித்துக்கொண்டான்.

"மைந்த! இக்கடுமையார் கானகத்து இனித் தனித் திருத்தல் தகுதியன்று. என்னுடன் ஆச்சிரமத்திற்கு வருக; ஒருக்கால் அவ்வரசிளங் குமரன் ஈண்டு வருவானேல், எனது சீடர்களால் அவனும் எனது ஆச்சிரமம் வரும்படி செய்கின்றேன்" என்று சிறுவனையுடன் கொண்டு தபசியும் தனது ஆச்சிரமம் சேர்ந்தனர்.

தனக்காக தருமப்பிரியன் நெடுநேரம் காத்திரான் என்றே இரவி விழுந்தளவில் இறைவன் மைந்தன் அரண்மனை சேர்ந்தான். அரசிளங்குமரன் அதிகமாகப் பாராட்டவில்லையெனினும், இரவெல்லாம் துஞ்சாராகித் தருமப்பிரியனின் பெற்றோர் பெருங்கவலை கொண்டிருந்தனர்.

இருடியாச்சிரமத்தில் தங்கிய சிறுவன், இரவி எழுமுன் எழுந்து கடவுளை வணங்கி, காலைக்கடன்களைச் செய்யத் தொடங்கி, மகரிஷியின் சிஷ்யர்களோடு தீக்கடனாதிய செய்து முடித்து, அங்கிருந்த சீடர்களிடமும் விடை பெற்றுக்கொண்டு, ரிஷியும் உடன்வர நண் பகலில்...

தான். வனத்திற்றேடி யழைத்து வரவும், வேறு பல்லிடங் களிலும் தேடிக் கொணரவும், தாங்களே தயங்காது செல்ல முயன்று கவலை மிகக் கொண்டிருந்த பெற்றோர் தாமும், அன்றே பெற்றோராக மைந்தனைக்கண்டு பெரிதும் மகிழ்ந்து, இருடியையும் வணங்கிப் பலவாறு புகழ்ந்து உபசரித்து ஆசனத்திலிருக்கச் செய்தனர்.

தந்தையாம் ஆதித்தியன், அருந்தவரைத் தன் மைந்தனைக் காத்துக்கொடுத்த தன்னருந்தவப் பயனெனவே புகழுரை பலவுங் கூறி, "கருணைக் கடலே! ஏழையேன் கைம்மாறாக எதைத்தான் கொடுக்கினுஞ் சிறிதேயாகும்; தாங்கள் வேண்டுவது என்னுருயிரேனும் இன்றே ஈவன்" என்று ஆனந்தக் கண்ணீர் மல்கி அஞ்சலி செய்து கூறுவானாயினன். அப்பெருந் தவன்றானும், ரகுவீரனைக் கூசாது கேட்ட கௌசிகனினுங் கொடியவராய், "வேதிய சிரேஷ்டரே! நெடுநாளாகச் செய்ய விழைவுள்ள நரயாகத்துக்கு ஏற்ற பசு இன்றளவும் பெற்றிலேன்; சஷ்ய கோடிகளைப் பற்பல திசையுஞ் செலுத்த உத்தேசித்திருந்த இத்தினமே உன்னருமைத் திருமைந்தனை உவப்புடன் கண்டேன். குணங்களனைத்தும் குறைவின்றி நிரம்பிய நின் குலக் கொழுந்தாகிய தருமப்பிரியனைக் கொடுப்பாயென்னில், யான் செய்யவேண்டிய கடமையைச் செய்ததினும் நினது உதவியே ஒப்பற்றதாக உலகம் கருதும்" என்றார்.

ஆதித்யன், "மாபெருந்தவத்தோய்! காக்கின்ற தெய்வமே களப்பலி கேட்கின்ற கொடுமையைக் கூறுவது யாரிடத்தில்? எனது தந்தையார், கலாலயர் என்னும் பெயருக்குப் பொருந்தியவர் மட்டிலன்றி, கலாதீதர் என்றே கருதத் தக்கவராம் தபசியின் சிஷ்யராவர். (இவரே கலாலயர் என்பதை ஆதித்யன் அறியான் என்க) யானும் தந்தையிடத்தும், அவரைப்போன்ற கலாலயரின் சிஷ்யர்களிடத்திலும்,

வேத வேதாந்தங்களைப் பயின்று நெடுநாள் சிவத்தியானத் திருந்து பின்னர் இவ்வம்பரீஷன் பிடிவாதமாக வேண்டவே இந்நாட்டை யடைந்தேன். எப்படியாயினும் தாங்கள் வேண்டியது தவிர வேறேதேனுஞ் செய்யச் சித்தமாயுள்ளேன்” என்று மைந்தன் மேலுள்ள பிரியத்தால் பேசுவதும் அறியானாகிப் பிரார்த்தித்து நின்றான். இதற்குள் அத்திரு மனை வாழுநர் பலரேயன்றி, உற்றாரும் உறவினரும் மற்றோரும் கூடிக் குழுமுவாராயினர்.

தந்தையின் பரிவுரை கேட்ட மைந்தன், அவரது பேதமைக்கிரங்கி “எந்தாய்! அடியேன் நரபசுவாகவே விருப்பமுடையோனாயிருக்கிறேன். மகரிஷியின் ஆச்சிரமத்தில் கடையாமத்தில் வேதத்தியானம் செய்யக் கேட்டிருந்து யானும் கூடவே சொல்லி வந்தேன். கேவலம் கேட்டளவிலேயே பயன் தரும் அவ்வொலி இப்போதும் என் செவியிலினிக்கின்றது. யான் வேதப் பொருளறிந்த வண்ணம் பிறகே கூறுவல். முதலில் வேத ஒலியே அமுதினும் இனிது; இவ்வொலியாற் பரவசமாகாதாரைப் பாவ பிண்டங்கள் என்னல் மிகையாது. வேள்விச் சாலையில், இவ் வேத ஒலி கேட்டுப் பரவசப் படுவதே எனக்குத் தந்தையளித்த பெரும் பதமாகக் கருதுவேன். பக்தியால் மிகுந்தவனாய், குலத்தாலுயர்ந்தோனும் வேதம் வல்லவனும் தர்மா தர்மங்களை நுண்ணிதினுணரும் அறிவுடையோனும் குணத்தாற் சிறந்தோனும் நல்லொழுக்க முடையோனும், சர்வாங்க சுந்தரனுமாகிய ஒருவனே யாக பசுவாக உரியவன் என்பர். உடலுரமும் வனப்பும் மட்டில் உடையோனாய் நல்லறத்திற் றலை நின்று பிறப்பைக்களையு மவாவற்றோனைப் பசுவாகக் கொள்ளச் சிறிதும் விரும்பார். மகரிஷி, என்னை யாக பசுவாகத் தகுதி யுடையவனாகக் கருதியதே நான் பிறந்ததின் பயன் பெற்றதாக ஆக்கி விட்டது. எனது விவேகத்

தையும் சீலத்தையும் அம்மகான் பெரிதாகக் கருதும் பெருமை பெற்றதோடு, பசுவாய் உயர் நிலை எய்தும் பாக்கியமும் சித்திக்குமேல், தாங்கள், எனது தந்தையேயன்றித் தீவினையுமாகி, இடையே தடை செய்வானேன்? அற்பமாகிய எனது சரீரத்தில் பெரிதும் பற்றுடைய தங்களைக் காட்டிலும் அத் தபோதனரே எனக்கு இனியராவர். எனக்கும் விடையளித்து, தந்தையினும் பரிவுடைய தந்தையாம் தபசியும் மகிழ அருள் வீராக" என்றான்.

ஆதித்யனின் வயது சென்ற அன்னை, தன் மகனை நோக்கி "மைந்த! மகரிஷிகளின் மாண்பு அறியாது பேசுகின்றனை; குமாரனைக் கூவி விரைவிற் கொடுத்தி; நிக்ரஹானுக்ரஹ சக்தியுள்ள தபோதனர் முன், மாயை வயப்பட்ட மக்கள் போலும் மகப்பரிவு மேலிட்டு, "ஆருயிரும் ஈவேன்" என்று முதலிற் கூறியது மறந்து பிதற்றுகின்றனை; அக்குண சீலராய தபசியின் கடுஞ்சினத்திற்காளாகாமல் நமது குலத்தைக் காப்பாய்" என்றாள். கற்பருங்கலனாகிய ஆதித்யன் மனைவியும், இருடிக்கு மைந்தனைக் கொடுக்க மனமுடையவளாகவே காணப்பட்டாள்.

"அஞ்சுவது அஞ்ச அறியாச் சிறுவனும், பேதைப் பெண் மக்களும் யாதறிவார்கள்? என்னைப் புத்தென்னும் நரகத்தினின்று நீக்கி விடுவான் என்று பிறந்தபோதே நான் உடலிலக்கணம் கொண்டறிந்து, தருமப்பிரியன் எனப் பெயரிட்டுப் போற்றி வளர்த்து. கலைகள் பல கற்பிக்க, தானும் பெயரைப் பொருத்தமுடையதாக ஆக்கிக்கொண்ட தனயனையோ தபசிக்குக் கொடுப்பேன்" என்று எண்ணிய ஆதித்யன், "அருந்தவக் குன்றே! அடியேன் கூறுவதிற் குற்றமுளதாயிற் பொறுக்க; மைந்தரைப் பெற்றோர் முனிகளின் கொடுங் கண்ணுக்கு மிலக்காகாது மக்களைப் போற்றுவர்; யான் நேராகவே கொடுக்கும் கன்னெஞ்சனல்லேன்;

தாங்கள் மனக்கவலையின்றி மீள்வதே என்னைத் தொடர வந்த கலி நீங்கியதாகக் கருதுவேன்" என்றான்.

இம்மாற்றத்தாற் சீற்றம் மிகுந்தோராய், "எனது சீடன் மகன் இவ்வாறு கூற நன்று கற்றனை; என்னை இன்னானென்றறிந்துகொள்ளாது பேசப்புகுந்து பிதற்றுகின்றனை; உன்னை அறமறிந்த அந்தணனென்று கருதியல்லவோ வந்தேன்! சிவத்தியானம் செய்தவண்ணம் இத்துணையோ!" என்று மெய் முற்றும் கோபத்தாலாட, உதடு துடிக்கப் புருவநெறித்துப் பற்பலவற்றைக் கூறத் தொடங்கினார்; முனிவரின் முன்னம், இன்னம் இரண்டொன்று கூறத் தொடங்கி மதிமயங்கிக் காலக்கோட்பட்ட அருங் கலை பயின்ற ஆதித்யன், "உருத்திரன் போலும் உருக்கொழும் தபசியே! நான் 'முன்னம் ஆருயிரேனும் அன்போடு கொடுப்பல்' என்று கூறினேனாயினும், அறமறிந்தோர், அந்தணரைக் காக்கவும், ஓர் உயிரை ஆபத்தினின்று விலக்கவும், தனது பொருள் முற்றும் பொன்றும் காலத்தும், பெண்களை மணக்கும் காலத்தும் சொல்லும் சொற்கள் பொய்ப்பினும் பிழையன்று" என்பர். யாக சங்கற்பம் தங்களுடையதேயன்றி எனதன்று; அன்றியும், அனைத்துயிரையும் ஆனுருவாகக் கருதவேண்டிய தாங்கள் ஏனைச் சில இருடிகளோடு ஊன் உண்ண நரயாகம் செய்ய விழைந்தீராயினும், யானும் அதற்கு உடன் படேன்; ஓர் உயிரையும் துன்புறுத்தாமலிருப்பதே தலையாய தருமமன்றோ? முனிசிரேஷ்டரே! யாகத்தின் இலக்கணத்தை யானும் சிறிது அறிவேன்; வேண்டுமானால் என் மைந்தனை அம்மகேசுவரன் நேரிற் கேட்கில் கொடுக்கின்றேன்; என் மைந்தனைக் காப்பதே முக்கிய கருத்தாக யான் மறுக்கின்றேன் என்பது குற்றமாகாது" என்றான்.

"முற்றிலும் பொருந்தும்; நன்கு கற்றாய்; அந்தண!

மாதவர் வேள்வி செய்தால் வேந்தர் திருவாளுயருவர்; பசு வேட்டு, எரியோம்பி வான் வழங்கச்செய்யும் மாதவரை ஊன் உண்பவராகப் பெரியோர் கருதார்; பாமரர்களுக்கு இசையாத போலினும் பேலையோர் செய்கை வசையாகா; இத்துணை தானே யாகத்தின் சொரூபத்தை நீயறிந்தது; உனது தந்தைக்கும் ஆசிரியனை எனக்கோ நீ தருமங் கூறத் துணிந்தாய்? என்ன தீரம்! இது அரைகுறையாகக் கற்றதின் கொடுமையல்லவோ! கடுஞ் சாபங் கொடுக்கினும் அருந்தவம் குன்றும்; ஆயினும்," என்ற மாத்திரத்தில், ஆதித்யனின் தாயும் மனைவியும் மைந்தனும் அவ்விடந்துக் கூடியிருந்தோர் நோக்கிக் கண் கலங்கி நிற்க, மாதவரின் இரு கால்களையும் பிடித்துக்கொண்டனர். இவர்கள் ஆறுகப் பெருக்கிய கண்ணீர் மகரிஷியின் ஊழித்தீயொத்த கோபக் கனலை ஒரு சிறிதே தணித்தது. "ஆதித்ய! முன்னர் சிவாபராதத்திற்காக ஆதித்யன் பல்லுடை பட்டான் என்பது கருத்துட்கொள்க; முற்றிய அறிவற்ற நீ, உன்னை மூதறிஞனைக் கருதிக் கொண்டனை; மனத்தின்கண் உள்ள மாசுநீங்கித் தக்க அறிவு ஏற்பட்டபின்னர், நீ விழைந்த வண்ணம் அம்மகேசுவரனே நேரில் வேண்ட உன் மைந்தனை உன் கையினுலே சேதித்து உண்பிப்பாய்; இன்றே எனக்கு மகனை அளிக்கும் மனப்பான்மை மிக்குடையோராகக் காணும் அன்னையும் மனைவியும் அன்றும் உதவுவாராக. பசுக்களை யூபஸ்தம்பத்தில் கட்டி, 'பசுபதே! உம்பொருட்டு இப் பசுவைப் பிணித்துள்ளோம்; இதன் பிறப்புப் பயன் பெற்றதாகச் செய்தருள வேண்டும்'; என்று வேண்டிப் பசுபதியின் அருள்பெற்ற பின்னரே வேள்வியிற் றுணியும் யாகத்தின் இலக்கணத்தை நீ யாது அறிந்தனை? தேள் கொட்டிப் பாப்பு கடித்துப் பதறித் துடிக்கும் சாதாரண ஜனங்களும் மந்திர மாத்திரத்தால் விஷமிறங்கி அக்கணமே குணமடை

வர். பாமரரும் இது கொண்டே பொருள் தெரிந்தாலும் தெரியாவிட்டாலும் மந்திரங்கள் விசித்திரமான பலமும் மகிமையு முள்ளதாகக் கொண்டாடுவர். வேதப் பொரு ளறிந்த நீ, வேள்வியை நிந்தித்தற்கு வியப்பதா! வெறுப் பதா! வருந்துவதா! எங்களை ஊன் விரும்பினவர்களாகக் கருதிய நீயே உன் மைந்தன் ஊன் உண்ண விரும்பி அன்று விரைவாயாக" என்று சாந்தமாய்ச் சபித்துக் காற்றினுங் கடிதே கானகம் புக்கனர்.

இச்சாபங் காரணமாகவே பைரவமூர்த்தியை நர பசு உண்பிக்கலாயினர் என்றும், தான் முந்தி யுண்ணத் தலைப் பட்டார் என்றும் கிராமாந்தரங்களிற் கதை கூறுவதுண்டு. சிறிது கற்பனு சக்தியுடையோர், தர்மத்தை வற்புறுத்து வதற்காக எதைக்கூறினும் மெய்யென்று தாங்களும் நம்பி, பிறரையும் நம்பும்படி வழி வழியாக ஒன்றைக்கூறி வருவது கபடமற்ற கிராமாந்தரர்களின் இயற்கையாம். இவர்கள் புராணங்களைப் பரிசீலனை செய்யச் சிறிதும் கருதார். ஆராய்ச்சியாளர் சிலர், ஒரு புராணத்திலுமில்லாத இது போன்ற கதைகளை மெய்யென்று கொள்ளார். "புராணங் கள் பல; யாம் எவ்வளவு கற்று விட்டோம்; யாமறிந்த வரையில் இல்லையென்று வேண்டுமானால் சொல்லலாம்" என்று, அறங்கூறுவது எதுவாயினும் அமையும் எனக் கொள்வாரு முண்டு.

முனிவர்களில் முதன்மை பெற்றவரான **காசியப ருக்கு மாயாவதி** என்னும் மகளொருத்தி இருந்தனளாம். அவளை முனிவர் தன்போற் சிறந்த மற்றொரு முனிவரின் மைந்தனுக்குக் கன்னியாதானம்செய்து கொடுத்தார். இம் முனி குமாரன் **அமிர்தன்** என்று அழைக்கப்படுவான். மாயாவதி, தன் பெயருக்கேற்க உலகமாயையைமெய்யென்று கொண்டு, இல்லறம் நடத்த அறியாளாய், ஆடம் பரமும்

பேச்சும் அதிகமாகி, யாது காரணங்கொண்டோ தன்னினும் சிறந்த பெண்ணொருத்தி வையகத்திராள் என்று கர்வமும் கொண்டாள். இது கண்ட அமிர்தர், இவளோடு இல்லறம் நடத்துவது அருமையென்று கண்டு, உத்தமபுத்திரனுதலால் கேவலம் மிருகங்கள் போன்ற இல்வாழ்வை விரும்பாமல், ஒருக்கால் காசியபர் பரிசோதனை செய்யக் கருதி இவளைத் தனக்குத் தானம் செய்திருப்பரோ என்றும், எவ்வாறு முனி குமாரி இவ்வணம் வளர்க்கப்பட்டாள் என்பதையும் அறிந்துவரக் காசியபரின் ஆச்சிரமம் சேர்ந்தார். காசியபர், ஏதோ குறைகூறவே அமிர்தர் தன் பாட்டு வந்திருக்கிறாரென்று கருத்திற்கொண்டு, "முனி மைந்த! மாயாவதியை குணவதியாக்குந் திறனுடைமையென்றே உனக்கு அவளைத் தானம் செய்தனம்; மற்றொன்று கூறுதும்; குலம், குணம், ஆசாரம் இவை அறிந்தன்றோ பெண் கொள்ளவேண்டும்; இந்த ஞாபகமேயன்றிச் செய்து கொள்ளும் மணம் நீ இப்போது அனுபவிப்பது போலன்றி வேறு எவ்வாறு இருத்தல் கூடும்? நினது தந்தைக்கும் எனக்கும் மனக்கொள்கை ஒன்றாயினும், ஆசாரம் என்றும் வேறுபட்டேயிருந்தது" இவற்றை யறியாது என்னிடம் தானமேற்க உடன்பட்டது உனது பிழையேயாகும். இம் மாயாவதி எனது மனத்தாற் படைக்கப் பட்டவள்; இவளை யன்புடன் பாராட்டி வளர்த்தவள் எனது ஆச்சிரமத்தையண்டிக் குற்றேவல்புரியும் **கீர்த்திமதி** யென்பளாவள்; யான் வளர்த்த குற்றம் என்று கருதிய நீயும், என்னால் கொடுக்கப்பட்டவளும் மனிதப்பிறப்பு கிடைத்த போதே நற்பயன் பெறவேண்டும் என்னும் கருத்தற்றவளாய் முறைகெடவாழக் கருதிய குற்றத்திற்காக, மனையறம் நடத்தும் வகையறியாதவளுமாகிய அம்மாயாவதியும், உருவம் மாறு படுவீர்களாக' என்று கடிந்து சிற்சில கூறத் தொடங்

கினார். வேண்டிய பணிவிடைகளைச் செய்துகொண்டு ஆச்சிரமத்து எக்காலமும் சித்தமாய்க் காத்திருக்கும் கீர்த்திமதி திடுக்கிட்டு, "அயனையே நிகர்த்த அருந்தவத் தலைவ! சிறிது பொறுத்தருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்தாள். அருளொழுகும் திருமுகத்தோடு நின்ற அமிர்தரை நோக்கி, பின் மாயாவதியையும் கீர்த்திமதியையும் நோக்கி, "புக்கவழிக்கும் போந்த வழிக்கும் புகழ்விளைப்பதன்றிப் பெண்மக்கள் புரிவதுதான் என்னே?" என்று மகள் மேற் கடுஞ்சினம் கொண்டு கூறுவாராயினும், சீரொழுகு சான்றோர்சினமும் கணத்தின் மாறும் என்றவாறு கோபந்தணிய, இயற்கையினிரம்பிய கருணையே மேலிட்டு, "முனி மைந்த! அஞ்சற்க; உலகில் மக்களெவருமே உய்யும்பொருட்டே உங்களுக்கு இப்போது இக்கட்டளை யிடுகின்றேன்; நீங்கள் இருவரும் பசுவுருக்கொண்டு கைலாயபதியை நோக்கிக் கடுந் தவம் புரிக; உங்கள் உருவத்தை எவருமே அறியாதிருப்பர்; அமிர்த! பிறப்பிறப்பின் உண்மையை அறிந்த நீ இல்லறம் நடத்தும் வகைகாட்ட, உலகுக்கோர் உதாரண குடும்பியாய் எவரை நோக்கி ஈண்டுக் கடுந்தவம் புரிவீரோ அப் பசுபதியே உங்களுக்கருள்புரிய ஓரே முறை உலகிற் பிறந்து நற்பதம் பெறுக. அக்காலத்து இப்போது பரிந்து பேசும் கீர்த்திமதியும் உங்களுக்குப் பெருந்துணையாவாள். நீங்கள் கொள்ளும் பசு உருவமும் பயன்பெற்றதாகும்" என்று அருள்புரிந்தார்.

இதன்படியே அனைத்தும் நிகழ, அமிர்தரே பரஞ்சோதியாராகவும், மாயாவதி வெண்காட்டு நங்கையாய் இல்லறத் துணையாயமையவும், மகேசுவரரே பைரவராக வந்த காலத்து பசு வேட்டு உண்பிக்கையில் கீர்த்திமதி சந்தனவதியாக இருந்து தலைக்கறி வைத்திருந்துதவினாள் என்றும், ஒழிந்த வேளையில் ஒருவருக்கொருவர் கிராமங்களில்

கதை சொல்லிக் கொண்டிருப்பர். இவற்றினை நம்புவோர் நம்புக; ஆயினும் இக்கதைகள் எந்நூலிலுள்ளன என்றறிய அடியேற்கும் விருப்ப முண்டு.'

## 21. மைந்தன் மீள மகேசுவரர் மறைதல்.

"யார் வைத்த கொள்ளியாயிலென்ன, வீடு வெந்து போயிற்று" என்பதே போல், யாரிட்ட சாபமோ பரஞ்சோதியார் பதை பதைத்து ஓடித் தெருவில் நிற்கின்றார். பேதைப் பெண்பிள்ளையாம்வெண்காட்டுநங்கை, தானுங் கூட மகனை யழைப்பதா, மணாளனை அழைப்பதா, எங்கிருந்து மகன் வரக் கூடும்? வேத மந்திரங்களிற் சில உரக்க அழைப்பது போலும்," ஹே மைந்தா! அடியார் திருவமுதுக் கெழுந்தருளியுள்ளார்; உன்னைக் கூவியழைக்க வேண்டுகிறார்; நின் பொருட்டு பெரியோர் காக்கலாமா? கடிதே வருக, வருக என்று உயர்த்த கையினராய், மேலே ஒன்றும் கூற வாயெழாது, மைந்தனைக் கூவி மயிர்க் கூச் செறிந்து தம்பித்து, புனித நீராடும் புண்ணியர் போலும் கண்ணீர் வார நின்ற நிலையே நிற்பாராயினர்.

பரிகலத்திட்ட வமுதைத் தொடாது அடியார் காத்திருக்க, பரிவுமீக் கூரிய தந்தை தன் மகனைக் கூவி யழைக்க, மகன் விரைந்து வாராமை கண்ட வெண்காட்டு நங்கை, தாழாது தானும் அன்போடு கலந்த மென் குரலிட்டுப் போற்றிப் புகழ்ந்து, "அரிதிற் பெற்ற சீரிள மைந்த! பேரருளாளர் பைரவப் பெருமான் எங் நெடுநேரம் காத்திருக்கலாகும்; கூவியழைக்கு முன் குதித்தோடி வந்து, ஆடியசைந்து, காலோடு கழுத்தைக் கட்டித் தழுவும் உன் சிறு கைவீசிக் குமரா! வருக; குழந்தாய்! வருக;

யான் சீராட்டி வளர்த்த சீராளா! இன்றுன பாத மென்மலர் பூதலந்தோயவாராய் கொல்லோ? மகனே! பேதையோம், நீபுக்க வழியறியாது பித்துடையோராய்ப் பிதற்றுதல் கண்டு, "எந்தாய்! வந்தேன்" என முந்திக் குதித்து கண்ணே! ஓடி வா; கற்பகமே! வா வா; அடியார் அடியேம் உய்யும் பொருட்டு உன்னையும் அழைக்கின்றார்; தாழாது வருக; தனய! வருக; எமது உயிரே! வருக; அருமைத் திருக்குமார! விளையாட்டிலாழ்ந்தனையோ? ஈண்டு நீ இல்லையோ? அடியார் பூசைக்குக் குறைநேர லாமா? 'அன்போடு வளர்த்த தாய், இவளே துன்புற்று அழைப்பினும் பிழையாகுமல்லவோ?' என்று தனக்குள் நினைத்தவளாய், நெற்றியிலைந்தாடு சுட்டியும் பட்டமும் முன் நேராக இட்ட திருநீற்றொளி விளங்கவும், அருமந்த மைந்த! ஆறுதகாத வொடமைக்கின்றதறிகிலேயே? பன்ம தனு மனமங்க, புன்னகை புரிந்திடுமுன் முழுநிலா முய லற்று முற்றும் சிறுத்தெனத்தோன்று முகமும், காரிளந் தும்பியென மையுண்ட கண்களும், பெண்மயிர்ச் சிறு புருவ மும், பசிளம பிஞ்செனவுன் செக்கச சிவந்த உதடும், அன் னையான் இன்னமும் ஒரு முறை காணவா; அப்பனே! ஓடி வா; இளந்தொந்தி மேலசை பதக்கமும், தோளணி கை விர லாழியுங் காண நீ, அடியிட்ட தண்டையொடு கிண்கிணி சதங்கை வகை சிறிதே யசைந்தாட வா; மாதவர் விருந்தாக, மாதா வருந்த, உன் தந்தைதனியேங்கி நிற்க, திருமுகங் காட்டாதொளித்ததென்? கோபமோ? பச்சிளம்பிள்ளையே! பாலனே! சீலனே! சீராள வந்தவா! சீராள தேவனே! மென்குதலைவாயனே!" என்று தன்னுட் தேம்பி மனத் திடம் செய்து கொண்டவளாய், "எங்கள் குடிக்கொரு குமரனே! குலக்கொழுந்தே! இன்று பலைமகள் மடியிலோ, திருமகள் இடையிலோ, நாமகள் கையிலோ, தேவர் தம்

மங்கையர் தோளிலோ, தலையிலோ, யாண்டோ இருப்பினும் ஈண்டு நீ கடிது வருக; கரையேற்றவந்த எம் காதல! வருக வருக என்று பாராட்டி யழைத்த பால் தந்த அன்னை ஆர்வமொடு கேட்க சிலம்பொலி சிறிதே கேட்டது; சிற்றிளஞ் சீரடியி னோசையுங் கேட்டது; தந்தை அமர்த்திய பள்ளியிலிருந்து சுட்டியசையவும் குண்டல மாடவும், சிறுநடையிட்டுக் குறுநகை காட்டி, அன்னையிட மோடிவந்த அருமைத் திருமகனை மார்போடணைத்து மடிமேலிருத்தி முகந்துடைத்து, குழல் திருத்தி, நாதன் கைக்கொடுக்க, நாதனுரடியார் திருவமுதுக்காக மைந்தனைத் தோளிலிட்டு மகிழ்வோடு மனையகம் வந்தனர்.

இனி அடியார் அமு துண்ணத் தடையேது மிலதென்று விரைந்துட் புகுந்த பரஞ்சோதியார், "அடிகாள்! மைந்தனையு முடன்கொண்டு இதோவந்தேன்" என்று அமர்ந்திருந்த இடத்தில் அடியாரை நோக்கினர். திருவமுதுக்கிசைந்த அடியார் யாண்டுளர்? அப் பெருந் தொண்டராம் சிறுத்தொண்டர், பைரவப் பெருந்தகையோடு பரிகலத்தே படைத்த பசு இறைச்சியுங் கண்டிலர். "பெருமானே! தேவரீர் யாங்கு எழுந்தருள விழைந்தீர்?" என்றார். அகத்தே வேறெங்கும் சென்றிருப்பாரோ புறத்தணைந்தனரோ என்று பின்னும் தேடுவாராயினர். அகத்தே யிருப்பதாக யாதானு மறியக் கூடவில்லை. மேற் செய்யும் வகையறியாது, ஏமாந்தார்போலும், பறிகொடுத்தார் போலும் திகைத்தார்; தம்பித்து நின்று நெடுமூச் செறிந்தார்.

---

# 22. காக்ஷி தந்தருளல்

அடியாரைக் கைவிடாது திருவடிக் கன்புடையோராய், என்றும் பேரின்பத்தாழ்ந்திருக்கச் செய்வோமென்று, அனல் கையேந்தி உண்மை கூறுவார் போலும் அங்கைகாட்டும் திரு நீல கண்டராம் நிமலன், அன்னையாம் வெண்காட்டு நங்கை ஆதரவோடு மைந்தனை அழைக்கையில் பின்வருமாறு பற்பலவற்றைக் கருதுவாராயினர் என்றே கொள்ளலாம். "விருந்தினராக அடைபவர், இல்லறம் நடத்துவோர், தாங்கள் அமுதாகக் கொள்வது எதைக் கொடுத்த போதிலும் மகிழ்வுடன் உண்டு, ஆசிர்வதித்துச் செல்ல வேண்டிய கடமையிருக்க, அடியார்க்கடியாராம் சிறுத் தொண்டரிடத்துப் பெரிதும் பிழை செய்தோம். உலகத்தில் எவரும் குழந்தைகளிடத்துப் பேரன்புடையவராயிருப்பர்என்றே, ஐந்துமுகத்தோடு அதோமுகமுந் தோன்ற அறுமுகனைக் குமரனை 'கலியில் சுக்குக்கு மிஞ்சிய மருந்தில்லை, சுப்பிரமணியனுக்கு மிஞ்சிய தெய்வமில்லை' என்று கொண்டாடும் வண்ணம், பார்க்கப் பயங்கரமாயிருக்கும், யானையுரியும் புலித்தோலும் கையிலரவும் கழுத்துக்கறையும் நீக்கி, ஆடுமயிலுங் கோழியுங்கொண்டு, எவர்க்கும் எளியனைப் அருள் புரியக் கருதிய நாம், கூசாது குமரனை யறுத்துக் கறியமுது படைக்கக் கூறியபொழுதே தயங்காது நம்மைச் சபிக்காமல்விட்டது உமையின் தவப்பயன் என்றே கொள்ளல் வேண்டும். விருந்தாக அன்போடு அழைத்து, இன்னாதவொன்றைச் சான்றோர் செய்யார் என்ற நம்பிக்கை எங்நெடுநேரம் கைக்கொண்டிருக்கலாகும். (பிரமனது மனத்தாற் படைக்கப்பட்டவரான வசிஷ்டர், காமதேனுவைக் கட்டியிழுத்து உடன்கொண்டு செல்லவிழைந்த கௌசிகரைச் சபிக்காமல், தேனு, தன்னை வணங்கிக் கேட்ட

போது, 'யான் யாது செய்வது? அரசனாகவும் விருந்தின னாகவும் நேர்ந்த ஒருவனை உபசரிக்க வேண்டுமெனும் அறம் நோக்கி உபசரித்தேன்,' என்று தன்னால் உபசரிக்கப்பட்ட வர் கெடுதியே செய்யத் துணிந்தபோதிலும், சாபங் கொடுக்க லாகாதெனும் தருமம் கூறினார் என்று வான்மீகமறிந்தோர் கூறுவர்.) இப்பரஞ்சோதியாராம் சிறுத்தொண்டர், குண மென்னும் குன்றேறி நின்றாரன்றோ? இவர் தம் வெகுளி, பெயரும் உருவமும், குணமுமுடையோர், தேவதேவரெனி னும் அவர்களிடம் செல்லாதென்று எவர் தான் நிச்சயமாகக் கூற வியலும்? மேனி முற்றிலும் மகிழ்வோடிட்ட திரு நீற்றுக் காப்பே நம்மைக் காத்தது; இன்றே ஈன்றாள் மனங் களிக்க மகனை விரைந்தோடி வரச்செய்யலாம்; பின்னர் இப்பெருந் தொண்டராம் சிறுத்தொண்டர் என்னும் பரஞ் சோதியாரைப் பெரும் பேற்றுக்குரியராக அருள்வோம்" என்று கருணை மேற்கொண்டவராக, மெல்லத் தம் ஆசனத் திலிருந்து மறைந்தருளினார்.

பைரவ மூர்த்தியைத் தேடி, அகம் எங்கும் நாடி, "அடியார் எங்கே? அடியார் எங்கே? அமுதுக்குக் காத் திருந்த அன்பர் எங்கே?" என்று வாய் விட்டழைத்து, "பெருமானே! சிறியேன் செய்த சிறு பிழையுண்டோ? அமுதினை நுகராது அகன்றதெங்கே? பேதையேன் பிழைப்பினும் பொறுத்தருளும் கருணைத் திருமுகங் காட் டாது கரந்த வகையறியேன்" என்று பதறித்துடித்து புற மும்போந்து ஆற்றாது பலபடியும் போற்றியழைப்பாராயினர். "ஈசனே! எந்தையே! எம்மனோர்களைகணே! மாசற்ற மூர்த்தியே! பைரவப் பெருங்கருணை வள்ளலே! அடியேனு முய்ந்திட வந்தருள் செய்த புண்ணிய! எங்கென்று காண்ப துமை; உத்தம! நித்திய! உமதுள்ளமொடு பசியறிந்தூட் டாத பேதையேன் செய்த பிழை பெரிதென்று பலகாலும்

மன்னிக்க வேண்டுவேன் ; வந்தருள் புரிந்திடுக ; வரதனே !'' என்று ஆர்வமேற்கொண்டு அங்காந்து நோக்கினர். சந்தன வதியாம் தையலும் வெண்காட்டு நங்கையும் மைந்தனும் உடனின்று கண்ணுர நீர் மல்கி, கைகுவித்துத் தொழுது தொண்டரைப் பின் பற்றவும், கருணைக்கடலான கைலையம் பதியோன், வெண்கயிலை யென்னவொரு விடையூர்ந்து, மலைமகள் மெய்கொண்ட பாகராய், மைந்தனும் அறுமுகனை மடிமீதிருத்தி, நற் பிள்ளையிளந் திங்கள் முடிமீதுலாவவும், கணநாதரொடு தேவகந்தருவராதியர்கள் பல்லிய முழக்க வும், பூதலம் நோக்கி மிகு பூமாரி பெய்யவும், தமதுண்மைத் திருக் கோலங்காட்டி மேனின்றருளினர். முடிகொண்ட மத் தமும், முக்கண்ணி னேக்கமும், முறி வலிப்பும், துடி கொண்டகையும், தாமுத்த வெண்முறுவல் உமை யென்று நீங்காது படிகொண்ட பாகமும், அருள் பொழியு நோக்க மும், திருநீலகண்டமும், மூவரும் தானென்ற முடிவு காட்டிய தொப்ப ஒரு மூவிலைச் சூலமும், நாதரூபந் தோன்ற நால் வேதமொக்க வொலி தமருகம் காணவும், கங்கையாள் முடிமீது கலந்தினிதிருக்கவும் கண் கண்ட, மெய் கண்ட, பொய் விண்ட புண்ணியராம் தொண்டனர், பேரானந்தப் பெருங்கடலாடி நின்றார். பேச்சும் துதியும் ஈசன் பேரருள் கிட்டுந்தனையுமே உதவும் ; என்பெலா நெக்குருக, விழிநீர் களூற்றென வெதும்பி யூற்ற ஊசிகாந்தத்தினைக் கண்டணு கல் போலவே, தன் மதி முகத்திலொளிர் புன்னகை பரப்பி, என்றும் தான் வேறெனுதபடி சிந்தை முற்றும் சிவனடிக்கே சென்று இரும்புண்ட நீராகுமாறு, பரஞ்சோதியார் எளிய ராய் இனியராய் நிற்பாராயினர். முன் பைரவராக வந்த பரமேசுவரர், முற்றிலும் பற்றற்று தன்னை எவ்வகை யானும் உவப்பித்தலே கருதி நின்ற தொண்டராம் பரஞ் சோதியாரையும், இவரது மனப்பான்மையும் நல்லறமும்

கடைப்பிடித்தொழுகி, தன் கணவனை தெய்வமாகக் கருதி உடனிருந்து வழிபட்ட வெண்காட்டு நங்கையும், முன்னரே தமக்குகந்ததாகக் கூறிய சீராளதேவனையும், கூர்மையான புத்தியும் முன் யோசனையுமுள்ளவளாய்த் தனது தலைவரது முயற்சிக்குத் துணியாயிருந்து தலைக்கறி யுதவிய சந்தன வதியாரையும், எக்காலம் பிரியாது தன்னுடனிருக்கவே ஆட்கொண்டு அருள் புரிவாராயினர். விண்மாரி யென்னினும், முன்னதாய் அஞ்சவரு மின்னலும பேரிடியும் உண்டு என்பர்; தேவர்கள் தொண்டரை வாழ்த்திப் பொழிந்த பூமாரியே இன்றும் பூதலங்கண்டு நல்லறம் நடத்திப் புகழ் பெறுமாறு, விண்மீன்களாக நிலை நிற்பனவாயின என்று, கற்றோர் புனைந்துரை கூறுவர். பலவிதமாகப் புகழ்ந்து, உபசாரங் கூற அறியாராய், நாவும் எழாது, மனத்தோடு உணர்வற்ற, பரஞ்சோதியாம் தொண்டரைக் கேட்பவர் போலுங் கருதியே, கங்கையொடு திங்களணி பங்கை யொரு பாகராம் பரமன், "அன்ப! நின்போல அறமறிந்து இயற்றுவோர் அரியரே யாவர். இந் நங்கைமார் இருவரும் சிறுவனும் நின்போலவே எனக்கு என்றும் இனியரே ஆவர். இவர்களுடன் இல்லறம் நடத்தி, நீ நம்மை உவப்பித்த வண்ணம் இவவாறென்று கறுபினும் கேட்பினும் மாந்தர் தமக்கு இனிய எவையேனும் குறைவின்றிப் பெற்றோராய் மகிழ்ந்து வாழ்க. மக்கட் பேற்றின் மாண்பறியார் போலவே நின்னை மகவறிந்தூட்டப பணித்தனம்; பற்றற்ற ஞானிகளும எளிதினில் உடன்படா இப்பணியை நீயே தலைக்கொண்டு நம்மை மகிழ்வித்தனை; கடப்பரிய மக்கள் மோற் காதலும்விட்ட நீ, தற்போதமற்று, முழு சிவபோதம் பெற்றனை என்று உலகு நன்கறிந்து உன்னை என்றும் புகழுக. (தற்போதம் = தான் என்னும் அறிவு; சிவ போதம் = அனைத்துருவும் சிவமாகக் காணல்). உனது மைந்தனைப்

போலவே, கூவி யழைக்குமுன் குறுநடையிட்டு ஓடிவந்து தழுவிக் கொஞ்சிக் குலவி மழலையே மிழற்றும் நன்மக்கள் பலரைப்பெற்று நின் பெருமை கூறுவோர் நீடூழிவாழ்க" என்று, உடனிருந்த கணநாதர், முனிவர்கள், சித்தவித்யா தரரும், தேவ கந்தருவரும், ஐங்கரத்தானோடு அறுமுகனும், அரி அயன் முதலியோரும் போற்றித் துதித்துவர அனை வரையு முடன்கொண்டு, பரமேசுவரரும் தன் கருணைத் திருவுருக் காந்தருளி நின்றார்.

---

## 23. பயன்

பயன் பெரிது மில்லாத ஒன்றில் மனிதன் தலையிட்டு முயலுதல் உலக இயற்கையன்று. இப்பரஞ்சோதியாராம் சிறுதொண்டர் என்னும் பெருந் தொண்டர்சரிதையால்,நாம் தெரிந்துகொள்ளும் நல்லறம் யாவை எனத் தொகுத்துக் கூறுவதே ஓர் சிறிதேனும் அறமறந்தியற்ற முடிவுரை யாகவும் கருதுவாம். மக்கட்பிறப்பே மாண்புடைய தென்று கொண்டு, இப்பிறவிதப்பினுல் எப்பிறவி வாய்க்குமோ வென்று, காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ள விழைந்து, இளமையிலேயே நல்லாசிரியரை அண்டி, அறங்கேட்டறிந்து, கற்றவை வலியுறுதற்காகச் சான்றோர் வாய்க்கேட்டுத் தெளிந்து,இல்லறமே நல்லறமாகக் கருதி இயற்றுதல் சிறப்புடையதாகும். குலத்தாலும் குணத்தாலும் தக்காரை நாடி, இல்லினுக்குகந்த தலைவி யாகக் கொள்ளுதல் வேண்டும். பிறப்பின் பயனாக எதைக் கருதுகின்றோமோ அப்பதத்தினுக்குரியராய், இறைவன் திருவருள் பெற்று விளங்கும் பக்த கோடிகளைப் பரிந்து உபசரிக்கவே இல்லறம் நடத்துவதாக ஞாபகமிருக்கவேண்

டும். மனையறப்புரிவதில் கோலமிடுவது முதல் கூடி யுண்ணும்வரையில், செய்யத்தக்கன அனைத்தும் மறக்கற்பாலதன்று. குளிக்கப்போய் சேறுபூசிக்கொள்வது நல்லறிவுடைமைக்கு அழகன்று. இல்லறம் நடத்தப்புகுந்து, **தான், தனது** என்றும் பற்றினை மிகுதிப்படுத்திக்கொள்வது தக்கதன்று.எத்தொழிலைச் செய்யினும், எப்பாடுபடினும் நீர் கொண்டுவரச் செல்லும் பெண்மக்கள் பலவற்றைப் பேசிக் கொண்டு, கூடிக்குலாவிக் கைவீசி வந்தாலும், தங்கள் மனம் மட்டில் எங்ஙனம் நீர்க்குடத்தே வைத்தோராயிருப்பரோ அங்ஙனமே பற்றுதல் சிறிது சிறிதாக நீங்கி, இறைவன் திருவருளுக்காளாகும் கருத்தொன்று கைவிடாதவராய் இருத்தலும் அவசியமாகும்; பைரவப் பெருந்தகையைச் சந்தனத்தாரும், வெண்காட்டு நங்கையும் வீட்டிற்குள் வந்து இருக்கும்படி பரிந்து உபசரிக்கவும், "மாதரார் தனியிருந்த இடவகையில் யாம் புகோம்" என்றது, மேன்மக்களாக விரும்புவோர் கருத்திற்கொளத்தக்கது என்பர். எத்துணை அரிய செயலைச் செய்யினும், "நான் செய்தேன்" என்பது தகாது. தன்னைப் பெரியோர் புகழுங் காலத்துச்செருக்குக் கொள்ளாமல், மகவறிந்தூட்டிய சிறுத்தொண்டர்போல் யார் யார்க்கும் தாழ்ச்சி சொல்லி நலம் பெறல் வேண்டும். தொண்டர் தம் பெருமையை ஔவைப் பிராட்டியும் பேசப் பெரிதென்று கைவிட்டாரென்னில், கண்ணனும் அடியாரின் பாத தூளியையே பூஜிப்பரென்றால், புல்லறி வுடையோம், பாற்கடலைப் பூனையுண்ண விழைந்த வண்ணம் வீணாவாக் கொண்டு கூற முன்வரல் அறியாமையே ஆகும். பரஞ்சோதியார், அரசன் மாட்டு தன்மனப் பான்மை புலப்படாவண்ணம் நடந்து உப்பன அனைத்தும் செய்து, நல் விடை பெற்று மீண்டதேயொப்ப, செய்ய உடன்பட்ட பணியில் சிறிதும் தாழ்வுறாது காத்துக் கொள்ளல் வேண்டும். இங்ஙனம் நெடுநாட் பழ

கிய பின்னரே, சிறுத்தொண்டர் போலும் ஈசன் திரு வருள் விழைந்து, பித்துடையார் போலும், தான் தனது என்னும் பற்றற்று, மனத்தூய்மை மிகப பெற்றவர்களாய், சநதிரமெளலீசுவரரின் இணையடிக் காட்பட்டு, யமனை வென்று, அழியாப பேரின்பம நுகர இயலமென்று, சான் ேறார்கள் ஆசிரியர்களாக உலகிற்கு நலம் பல போதித்துக் கருணையோடுவாழ்த்தியுள்ளாரென்று கற்றறிந்தோர்கூறுவர்.

---

## 24. முடிவுரை.

தென்னாட்டிற் பற்பல கிராமங்களில், பைரவர் தொண் டராம் பரஞ்சோதியாருக் கருள்புரிந்த திருநாளை, இன்றும் பக்தியோடு கொண்டாடி வருகின்றனர். இவ்விழா, வசந்த ருதுவில், **சித்திரை மாதம், பரணி** நக்ஷத்திரத்தில் முடிவு பெறுவதாய் வருடந்தோறும் நிகழும். இவ்விழா நடத் துவதில், பெரும்பாலும் பிராமணரலலாத குடிஜனங்களே அதிக ஊக்க மொடுத்துக் கொள்ளுவார்கள். கிராமத்திற் சிறிது பக்தியுள்ளவராகக் கருதபபடும் பெரியவா ஒருவர் பைரவவேடம பூணடு, பலருடன் கூட பஜனை செய்து கொண்டு, காலை எழுமணிமுதல் தினம் இரண்டு மூன்று தெருக்களாக, நாலைந்துநாள் வரையிற சுற்றிவருவர். வீட் டிற்குக் குறைந்தது ஒரு படி அரிசியும, இரண்டணுவுமாக இவர்களுக்குக் கொடுபபார்கள். அடுத்திருக்கும் சிற்றூர் களுக்கும் சென்று, விழா நடப்பதைத் தெரிவித்து, அவர்க ளிடமிருந்தும் பெறும் தானியத்தையும், பணத்தையும் சேர்த்து, விழா நடத்தும் செலவிற்கு உபயோகமாக வைத் துக் கொள்வார்கள். விழா நடக்கும் தினங்களில் அடியார் கள் சிலருக்காவது அன்னமளிப்பதும் உண்டு. செல்வ முள்ளவரும், செல்வாக்குடையோர்களுமா யிருப்போர் எவ ராவது, இவர்களிலும் முக்கியமாக மகப்பேறில்லாதிருப்

போர், பரணி நக்ஷத்திரத்தன்று, அதிக விமரிசையாக மகேசுவரபூஜை நடத்த முன் வருவார்கள். இச் சுபதினமே பரஞ்சோதியாராம் சிறுத்தொண்டரின் குருபூஜை தினமாகக் கருதப்படும். இந்நாள் காலையில், மாவோடு சருக்கரை சேர்த்துச் சிறு குழந்தை வடிவாக அமைத்து, அதற்கு ஆடை ஆபரணங்களாலும் அலங்கரித்து பல்லக்கில் வைத்து ஊர் வலம் வந்து, ஈசுவர சன்னிதானத்தில், அபிஷேக அர்ச்சனைகள் செய்து, தூபதீபங் காட்டி, இப்பிள்ளை உருவத்தின் ஒரு சிறிதுபாகமே, பிரசாதமாக வந்திருப்போருக்கு அளிப்பார்கள். முதலில் அவ் விழா நடத்தும் செலவிற் பெரும்பாலும் ஒப்புக்கொண்டு, அன்று மகேசுவரபூஜை நடத்துவோருக்கும், பின்னரே மற்றவர்களுக்கும் வழங்குவர். இப்பிரசாதப் பெருமையால், நெடுநாள் குழந்தைகள் இன்றி இருந்தவரும், மகப்பேறுபெற்று மகிழ்வர் என்பது கிராம வாசிகளின் நம்பிக்கை; இந்த நம்பிக்கை பெரும்பாலும் வீணாவதும் இல்லை. இரவில் பண்டைக்காலத்தில் தமிழ் நாட்டில் ஆடல்பாடல்களிற் சிறந்து புலமையும் உடையோராய் விளங்கிய **விறலியர்** மரபினர் என்று தங்களைக் கூறிக்கொள்ளும் கூத்தாடும் ஜாதியார், சிறுத்தொண்டரின் வரலாற்றினை நாடகமாக நடித்துக் காட்டுவார்கள். இவர்கள் வைரவர் சிறுத்தொண்டரை நாடிச் செல்வதாகவும், சிறுத்தொண்டர் வைரவரை உபசரித்து சம்பாஷிப்பதாகவும், மைந்தனைக் கூவியழைக்கையில் மகேசுவரர் மறைய சிறுத்தொண்டர் தேடுவதுமாகப் பாடும் பாட்டுக்களும், செய்யும் அபிநயங்களும், கல்நெஞ்சும் கரையச் செய்யும். அதிகப் பணச் செலவில்லாமல், ஆடம்பரமற்றவர்களாய், உள்ளன்போடு இவர்கள் நடிப்பது, நவீன நடிகர்களும் கற்கத் தக்கதாயிருக்குமென்பதே அனுபவமுள்ள ஆன்றோர் பலரின் கருத்து.

எவ்வாற்றாலும் கற்பனகற்று, செய்யத் தக்கன செய்து தகாதன நீங்கி, உலகத்தோடொட்ட வாழினும், ஊன்றிய கருத்தை உடற்சுமை நீங்குவதிலேயே நீக்குவதிலேயே) வைத்து, எல்லாம்வல்ல இறைவன் திருவடிக்கன்பு பூணுப்பமேனோர் அனைவரும் உய்யப் பெறுவோம்.